மஹிஷமர்தினீ ஸ்தவம்

(தேவீ மாஹாத்ம்யத்தில் நான்காம் அத்யாயம்)

S. சங்கரநாராயணன், B.A. (Hons)

பப்ளிஷர்ஸ் :

[illegible] திருவல்லிக்கேணி.

மஹிஷமர்தினீ ஸ்தவம்

(தேவீ மாஹாத்மியத்தில் நான்காம் அத்யாயம்)

(ரிடையர்டு ஹைகோர்ட் ஜட்ஜ்

ஸ்ரீமான் சந்திரசேகர அய்யர்

அவர்களது முகவுரையுடன் கூடியது)

S. சங்கரநாராயணன், B.A. (Hons.)

கிரி ப்ரஸ், திருவல்லிக்கேணி.

 [Price Rs. 2-0-0

FIRST
EDITION
SEPT. 48

Printed & Published
by K. Kylasamier
at GIRI PRESS
Triplicane, Madras.

உ

பதிப்புரை

"எங்கள் புஜங்களில் ஊறும் சக்தி நீ, ஹ்ருதயத்தில் தோன்றும் பக்தி நீ" என்று பங்கிம் சந்திரர், தேவி துர்கையே பாரத அன்னை எனத் தெளிந்து, தம் வந்தேமாதரம் கீதத்தில் துதித்தார். மூவாயிரம் வருஷங்களுக்கு மேலாக நம் கலாசாரம் உயிர்த்துடிப்புடன் இருந்து இன்னும் புது ஜீவனுடன் திகழ்கின்றது என்றால் அதற்கு இருக்கும் அபார சக்திதான் காரணம். இந்த அபார சக்தியை அளித்துக்கொண்டே இருப்பவள் அன்னை ஆதி பராசக்தியே. காச்மீரத்திலிருந்து கன்யாகுமரி வரை பாரத தேசம் ஒன்றே என்று முரசு கொட்டி திக் விஜயம் செய்து தம் சிறிய வயதிற்குள் பெரிய காரியங்களை சாதித்தவர் ஆசார்ய சங்கரர் அவர்களே. பல்வேறு பாகங்களில் பற்பல பாஷைகளில் பேசினும் அனைவரையும் பிணைப்பவள் அகிலத்திற்கும் அன்னை, பாரதத்தின் தாய், பராசக்தி என்ற உண்மையை நிலை நாட்டியவர். மடங்கள் பற்பல ஸ்தாபித்தும் அனைவரது உள்ளத்தையும் தொடும் பக்திப் பாக்கள் பல இயற்றியும் சக்தி சாம்ராஜ்யத்தை நிலை நாட்டி பாரதத்திற்குப் புது சக்தி அளித்த மகான்.

நம் பெருமையை மறந்திருக்கும் இந்நாளில், மறுபடி அந்த சக்தி தேசத்தில், முக்கியமாக தமிழ் நாட்டில் ஊறவேண்டும் என்பதற்காக ஆசார்ய சங்கரர் அவர்கள் தேவியைப் பற்றித் துதித்த ஸௌந்தர்யலஹரீ, கனகதாரா ஸ்தவம், ஆனந்த லஹரீ, சாரதாஷ்டகம், திரிபுரஸுந்தரீ ஸ்தோத்

ரம் முதலியவற்றை தக்க அறிஞர்களைக் கொண்டு தமிழில் விளக்கி வெளியிட்டோம். ஆயினும் எங்கள் மனம் சமாதானமடையவில்லை. ஆதி சங்காருக்கே சக்தி அளித்த மூலக்ரந்தங்களைத் தமிழில் வெளியிடவேண்டும் என்ற பேரவா இருந்து வந்தது. அது இப்போதுதான் இந்த மஹிஷமர்தினீஸ்தவ வெளியீட்டால் சிறிது பூர்த்தியாயிற்று.

வடமொழி அறியாதாரும் புரிந்துகொள்ளு மாறு எளிய தமிழ் நடையில் எழுதியிருக்கின்றார் ஆசிரியர். மிகப் பெரிய தத்துவங்களும் எளிதில் புரியும்படி சொல்லப்பட்டிருக்கின்றது. உதாரண மாக "நான்கு மஹாசக்திகள்" "சிருஷ்டி ரகசியம்", "வேள்வித் தத்துவம்" "பலச்ருதி" முதலிய தலைப்புகளின் கீழ் காண்க. வேதம், உபநிஷத், கீதை முதலியவற்றின் சாரத்தை எடுத்து கடைந்தெடுத்த வெண்ணெய் போல் கொடுக்கப் பட்டிருப்பதால் இவைகளில் பரிச்சயம் இல்லா தாரும் சாராம்சத்தைத் தெரிந்துகொள்ள முடியும். அறிவாளிகள் இதைப் படிக்கும்போது அவர் களுக்கு மேன்மேலும் ஸ்புரித்து திடபக்தி உண்டாகும் என்பதில் ஐயமில்லை.

இதைப் படிக்கும் தமிழ் மக்கள் இப்புத்தகத்தைக் குறித்து உபயோகமான யோசனைகள் கூறினல் அவைகளை ஏற்று அடுத்த பதிப்பில் சேர்த்து வெளியிடுவோம்.

திருவல்லிக்கேணி
15-9-48.

K. கைலாஸமய்யர்.
பதிப்பாளர்

FOREWORD

Once upon a time, the Devas were subjected to great trouble and slaughter by a demon called Mahishasura, and they sought the help of the protector of the world, Sri Vishnu. From his knitted eyebrows and those of Brahma and Sankara issued forth a big dazzling light into which merged the radiance of the other Gods. The whole thing assumed the form of a lady-The Divine Mother. She fought the demon and his wicked forces and slew them. The Devas praised Her prowess, achievements and grace in a hymn of 39 stotras. They are found in the fourth chapter of the Devi Mahatmya in the Markandeya Purana.

The present book by Mr. S. Sankaranarayana Aiyar gives the verses, their Tamil translations and their purport. Exhaustive notes found below each stanza elucidate the underlying meaning with appropriate quotations from authoritative sources like the Vedas, the Upanishads, the Ananda and Soundarya Laharis of Sri Sankara, the Devi Bhagavata, the Gita, etc. This effort to popularise the stotras and bring them within the reach of the Tamil-knowing section of the public is a praiseworthy one and deserves commendation. The hymn is considered a sacred one and is believed to be fraught with great potency for good to those who recite it or even listen to it, as happened in the case of the king (Suratha) and the Vaidya (Samadhi) who heard it from the Sage Sumedha.

Without the aid of *Sakti*, the God himself is powerless even to move. So says Sri Sankara in the very first verse of his Soundarya Lahari. She is the all-potent प्रकृति and propitiation of Her is necessary not only for material prosperity but for spiritual progress. Hence the importance of the worship of the Devi. Her devotees will find the work under notice very useful to them in offering their prayers and in steady ascent of the ladder of self-knowledge or realisation.

N. CHANDRASEKHARA AIYAR,

7th Sep. 1948 *Retd. Judge,*

Madras High Court.

எனக்கு வித்யையை அளித்த என் மாதாமகர்
பாரத்வாஜ நாராயண அய்யர் அவர்களுக்கு

धनुर्हस्तादाददानो मृतस्यास्मे क्षत्राय वर्चसे बलाय ।
अत्रैव त्वमिह वयं सुवीरा विश्वाः स्पृधो अभिमातीर्जयेम ॥

“ எளியோரைக் காக்கவும் வன்மைக்கும் ஆற்றலுக்கும் நீ கொண்ட வில்லை இறந்த உன் கையிலிருந்து நாங்கள் பெற்றுக்கொண்டோம். நீ அங்கிருக்க, இங்கு நாம் நல்வீரர்களாய் அனைத்திலும் வெற்றி காண்போமாக.”

—ரிக்வேதம்.

முன்னுரை

ஸப்தசதீ என்ற தேவீ மாஹாத்ம்யத்தின் நான்காம் அத்தியாயமே இந்த மஹிஷமர்தினீ ஸ்தவம். சக்தி வழிபாடு நம் பாரத தேசத்தின் ஜீவநாடி. வங்காளம் முதல் மலையாளம் வரை காச்மீரத்திலிருந்து குமரி முனை வரை சண்டியைத் தொழாதவர் கிடையாது. சண்டியின் சக்தியைக் கொண்டே நம் பாரதம் மறுபடி, மறுபடி புத்துயிர் பெற்று எழுந்திருக்கின்றது. சாமுண்டி, மகமாயி, இருளாயி என்று பழந்தமிழர் தொன்றுதொட்டுத் தொழும் தெய்வம், தசபுஜா துர்கா என்று வங்காளிகள் வணங்கும் அன்னை, மலையாள தேசத்தைக் காக்கும் பகவதி— இவளே பாரதத் தாய், வீரத்தை ஊட்டும் அன்னை. இவளது பேராற்றல்களைச் சொல்லுவதே ஸப்தசதீ என்ற 700 ச்லோகங்கள் கொண்ட மந்த்ர நூல். திப்பு சுல்தான் போரில் வெற்றிகாண, ஸப்தசதீ பாராயணம் செய்ய ஏற்பாடு செய்தான் என்று சரித்திரம் கூறும். தமிழ் நாட்டுப் பெண்மணிகளும் தேவீ மாஹாத்மியத்தை எளிய பாடல்களாக்கி,

“சங்கரி சிங்கத்தில் ஏறிவந்து
சூலத்தை வீசி எறிந்திடுவாள்—
சங்கரியின் சூலம் பட்டவுடன்
மகிஷனும் மாய்ந்து மடிந்தானே”

என்று இவ்வாறு நவராத்திரி காலங்களில் துதிப்பது அனைவரும் அறிந்ததே.

இந்த தேவீ மாஹாத்மியம் தந்த்ர சாஸ்திரங்களுக்குள் தலைசிறந்து நிற்கின்றது. இதைப் பாராயணம் செய்வது, அதாவது வாய்விட்டுச் சொல்வது முக்கியம் என்று கூறுவர். மந்த்ரம் போல் மனதிற்குள் உரு ஏற்றி சிறிது சிறிதாக தியானத்தில் ஆழ்வது இதன் விஷயத்தில் சரியல்ல. ச்லோ கங்களே மந்த்ரங்கள் என்றும், அனைத்தையும் புனிதப்படுத்தி நம்மைச் சுற்றியுள்ள ஆகாயத்தை நிர்மலமாக்கி, பக்தியை ஊட்டிப் பரவசமாக்கி, தெய்வ சாந்நித்யத்தை உணருமாறு செய்யும் சக்தி இந்த ச்லோகங்களுக்கு உண்டு என்றும், ச்லோகங்களை வாய்விட்டுச் சொல்லச்சொல்ல நாத அலைகள் சுற்றிலும் பரவி, சாதகனைச் சுற்றிலும் அவன் தலைக்கு மேலிருந்து கீழும் பிரவகித்து, தெய்வ சக்தியை தோற்று விக்கும் என்றும் உண்மை உபாஸகன் அறிவான். இவ் வாறு தெய்வசக்தி தோன்றினால், இந்த ச்லோகங்கள் படிக் கும் இடத்தில் அவளது வாசம் நிரந்தரமாகின்றது. பக் தனைக் கை கொடுத்து நடத்திச் செல்லுகின்றாள் அவள். தவிர, ரிக்வேதத்திலிருந்து தோன்றியது தேவீ மாஹாத் மியம் என்று ஒரு ஐதிக முண்டு. ரிக்வேதம் பத்தாம் மண்டலம் 125ம் ஸூக்தமாகிற தேவீ ஸூக்தம் இந்த தேவீ மாஹாத்மியத்தின் முக்கியமானதொரு பாகம். ஆம்ப்ருணீ என்ற வாக் தேவதையின் தர்சனமான இந்த ஸூக்தம் ஜபத் திற்காக உபயோகிக்கப்பட்டது. **देवीसूक्तं परं जपन्** (தேவீ ஸூக்தம் பரம் ஜபந்) என்று மாஹாத்மிய முடிவில் கூறியிருப் பதிலிருந்து தெரிகின்றது. ரிக்வேதத்தில் ஆங்காங்கே “அங்கிரஸ் ரிஷிகள் தங்களது மந்த்ர மொழிகளால் பாறை களைத் தகர்த்தனர்” என்று கூறி, மந்த்ரங்களை வாய்விட்டுச் சொல்லுவதின் பயன் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. தவிர,

வேதமே நாதஸ்வரூபம் என்றும் அதை தியானம் செய்வதால் பிரயோசனமில்லை, ஸ்வரத்துடன் வாய்விட்டுச் சொல்ல வேண்டும், வேதபாராயணம் செய்யவேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே. வேதத்தின் அன்னையான காயத்ரி மந்த்ரத்தை மனதிற்குள்ளேயே தியானத்திற்கு உபயோகப் படுத்தாமல், மந்த்ரத்தின் பொருளை தியானம் செய்து மந்த்ரத்தை உதடசைத்து உச்சரிக்கவேண்டும் என்ற விதி தெரிந்ததே. ஆகவே ரிக்வேதத்திலிருந்து தோன்றிய தேவீ மாஹாத்மியமும் அதற்குள்ளடங்கிய இந்த ஸ்தவமும் பாராயணம் செய்யப்படவேண்டும்.

இகத்திலும் பரத்திலும் இன்பமளிப்பவள் சண்டி என்று கூறுவர். நான்கு புருஷார்த்தங்களும் வேண்டுமானால் சண்டியை அண்டவேண்டும் चतुर्वर्गाय चण्डिकां (சதுர் வர்காய சண்டிகாம்) என்பர். ஸப்தசதியை அர்த்தசாஸ்திரம் என்றே சொல்லுவர். மோக்ஷ சாதனத்திற்கு 700 ச்லோகங்கள் கொண்ட பகவத்கீதை, அர்த்த சாதனத்திற்கு 700 ச்லோகங்கள் உள்ள ஸப்தசதி, தர்ம சாஸ்திரத்திற்கு மனு, (இதுவும் முதலில் 700 ச்லோகங்கள்தானாம்) காம சாஸ்திரத்திற்கு வாத்ஸ்யாயனரின் 700 ஸூத்ரங்கள்—இவைதான் புருஷார்த்த சாஸ்திரங்கள் என்று ஆன்றோர் கூறுவர். ஸப்தசதியின் கதையே இதைத்தான் கூறுகின்றது. ஸமாதி என்ற வைச்யன் தன் சாதனையின் பயனாக மோக்ஷ சுகம் அடைகின்றான். ஸுரதன் என்னும் மன்னவன் தியாகத்தில் போகத்தைக் காண்கின்றான். ஆகவே வாழ்வில் வெற்றிகாண ஸப்தசதியே உற்றதுணை என்பது சாதகர்களின் திட நம்பிக்கை.

இந்த ஸப்தசதியில் மூன்று ஸ்துதிகளிருக்க, நாம் இந்த மஹிஷமர்தினீ ஸ்துதியை தேர்ந்தெடுத்தது இதற்காகவே: மஹிஷனைக் கொன்றவள் மஹாலக்ஷ்மி என்றும் "அவள் எல்லாவற்றிற்கும் முதல்வள், முக்குணமும் கொண்டவள், தென்படுவதும் தென்படாததுமான வஸ்துக்களின் உருவம், அனைத்தையும் வியாபித்து நிலைத்திருப்பவள்"

सर्वस्याद्या महालक्ष्मीस्त्रिगुणा परमेश्वरी ।
लक्ष्यालक्ष्यस्वरूपा सा व्याप्य कृत्स्नं व्यवस्थिता ॥

ஸர்வஸ்யாத்யா மஹாலக்ஷ்மீஸ்த்ரிகுணா பரமேச்வரீ ।
லக்ஷ்யாலக்ஷ்யஸ்வரூபா ஸா வ்யாப்ய க்ருத்ஸ்நம் வ்யவஸ்திதா ॥

என்று கூறியிருக்கின்றது. ரஜோ குணம் பிரதானமான போதிலும் முக்குணமும் கொண்டு மூந்நிறமும் பூண்டு திகழ்கின்றாள்.

मन्दहासलवेषु वलक्षा मेचका चिकुरप्रकरेषु ।
शोणतामधरे दधती सा रक्षतु प्रकृतिस्त्रिगुणा नः ॥

மந்தஹாஸலவேஷு வலக்ஷா மேசகா சிகுரப்ரகரேஷு ।
சோணதாமதரே தததீ ஸா ரக்ஷது ப்ரக்ருதிஸ்த்ரிகுணா ந: ॥

"மெல்லிய முறுவலில் வெளுத்தவள்; கூந்தல் ஓரங்களில் கருத்தவள்; உதடுகளில் சிவந்தவள்; மூந்நிறம் பூண்ட ப்ரக்ருதி நம்மைக் காக்கவேண்டும்" என்று காவ்யகண்ட கணபதி முனிவர் இந்த தேவியைத் துதித்துள்ளார். மூலப்ரக்ருதியான மஹாமாயையைத் துதிக்கும் ஸ்தவம் இது. ஆகவே மற்ற ஸ்துதிகளைவிட ஒருபடி உயர்ந்தது. மஹாகாளி, மஹாலக்ஷ்மி, மஹாஸரஸ்வதி இம்மூவரும் இந்த ஆதி சக்தியிடமிருந்தே தோன்றினர். மேலும் அறிய விரும்புவோர் தேவீ மாஹாத்மியத்தின் கடைசியில் உள்ள ரஹஸ்ய த்ரயத்தைப் பார்க்க.

अष्टादशभुजा चैषा पूज्या महिषमर्दिनी (அஷ்டாதச புஜா சைஷா பூஜ்யா மஹிஷமர்தினீ) என்று இந்த தேவியின் ஸ்வரூபத்திற்கு பதினெட்டு கைகள் என்றும் அக்ஷ மாலே, கோடாலி, கதை முதலிய ஆயுதங்களேக் கரங்களில் ஏந்தியுள் ளாள் என்றும் கூறியிருக்கின்றது. தியான ச்லோகத்திற் கேற்ப இதில் காணும் படம் போடப்பட்டிருக்கின்றது.

இப்படத்தை வரைந்து கொடுத்த என் சகோதரி நாகலக்ஷ்மிக்கு ஸர்வேச்வரி ஸகல ஸௌபாக்கியங்களேயும் அளிப்பாளாக. இப்புத்தகத்தைப் படித்துப்பார்த்து உவப் புடன் முகவுரை எழுதிக்கொடுத்த ரிடையர்டு ஜட்ஜ் **ஸ்ரீ சந்திரசேகர அய்யர்** அவர்களுக்கு எம் மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

எங்கும் காரிருள் சூழ்ந்து திசை தெரியாமல் தவிக்கும் போது, தெய்வ ஒளி கொண்டு வழிகாட்டவந்த புண்ணிய புருஷர்கள் ஜனித்த நம் நாடு, அதர்மம் மேலோங்கி உலகம் அல்லலுறும் போது பரமனே இறங்கிவந்து இடர்தீர்க்க அவதரித்த நம் நாடு—இப்புண்ணிய பூமியில், வேதம் பிறந்த நாட்டில், இப்போது அசுர சக்திகளின் ஆதிக்கமே மேலோங் கியிருக்கின்றது. அன்றொருநாள் மஹிஷனேயும் அசுரசக்தி களேயும் பூண்டோடு அழிக்க, தேவர்களிடமிருந்தே பராசக்தி தோன்றியது போல், இன்று ஆதிக்கம் செலுத்தும் அசுர சக்திகளே அழிக்க, அன்னே நம்மிடமிருந்தே தோன்றுவாள். நாம் அனேவரும் ஒருமுகமாக அவளேத் துதி செய்தால் அவள் கட்டாயம் செவி சாய்ப்பாள். அவள் நம்மிடம் தோன்றுமாறு நாம் தகுதியாகவேண்டும். இப்பெரும் சாதனேக்கு இந்தப் புத்தகம் சிறிதாயினும் பயன்படுமாயின் நான் அகமகிழ்வேன். **சு. சங்கரநாராயணன்.**



अक्षस्त्रक्परशू गदेषुकुलिशं पद्मं धनुः कुण्डिकां
दण्डं शक्तिमसिं च चर्म जलजं घण्टां सुराभाजनम् ।
शूलं पाशसुदर्शने च दधतीं हस्तैः प्रवालप्रभां
सेवे सैरिभमर्दिनीमिह महालक्ष्मीं सरोजस्थिताम् ॥

உ

महिषमर्दिनी स्तवः

மஹிஷமர்திநீ ஸ்தவம்

ஸ்தவ வரலாறு.

ऋषिरुवाच ।

शक्रादयः सुरगणा निहतेऽतिवीर्ये
तस्मिन्दुरात्मनि सुरारिबले च देव्या ।
तां तुष्टुवुः प्रणतिनम्रशिरोधरांसा
वाग्भिः प्रहर्षपुलकोद्गमचारुदेहाः ॥

சக்ராதய: ஸுரகணா நிஹதேதிவீர்யே
தஸ்மிந் துராத்மநி ஸுராரிபலே ச தேவ்யா ।
தாம் துஷ்டுவு: ப்ரணதிநம்ர சிரோதராம்ஸா
வாக்பி: ப்ரஹர்ஷ புலகோத்கமசாருதேஹா: ॥

ரிஷி கூறினார்:

अतिवीर्ये (அதிவீர்யே) மிகவும் பலங்கொண்ட तस्मिन् (தஸ்மின்) அந்த दुरात्मनि (துராத்மநி) கொடியோனை மஹிஷனும் सुरारिबले च (ஸுராரிபலே ச) அசுரர்களது படைகளும் देव्या (தேவ்யா) தேவியினால் निहते

(நிஹதே) கொல்லப்பட்டவுடன் शक्रादयः (சக்ராதய:) இந்திரனைத் தலைமையில் கொண்ட सुरगणाः (ஸுர கணா:) தேவர்களது கூட்டங்கள் प्रहर्षपुलकोद्गमचारुदेहाः (ப்ரஹர்ஷபுலகோத்கமசாருதேஹா:) ஆனந்தத்தால் புளகமெடுத்து அழகிய உடல்களை உடையவர்களாய் प्रणतिनम्रशिरोधरांसाः (ப்ரணதிநம்ரசிரோதராம்ஸா:) வணக்கத்தால் கழுத்தும் தோளும் தாழ்ந்து ताम् (தாம்) அவளை वाग्भिः (வாக்பி:) வார்த்தைகளால் तुष्टुवुः (துஷ்டுவு:) துதித்தனர்.

கொடிய மஹிஷனும் அவனது பெருஞ் சேனையும் தேவியினால் நிர்மூலமாக்கப்பட்டவுடன் தேவர்கள் கரங்குவித்து சிரங்கவிழ்த்து மெய்சிலிர்த்து தேவியைத் துதித்தனர்.

தாத்பர்யம்:

ஸுமேதா என்னும் ரிஷி ஸுரதன் என்னும் மன்னனுக்கும் ஸமாதி என்ற வைச்யனுக்கும் தேவியின் பிரபாவத்தைச் சொல்லுகிறார். தேவி மஹிஷாசுரனைக் கொன்றுவிட்டாள். அசுரப்படைகளனைத்தையும் அழித்துவிட்டாள். தங்கள் பொருட்டே இவ்வாறு தேவி செய்திருக்கின்றாள் என்றவுடனே தேவர்களின் உள்ளங்களில் நன்றியறிவு பெருக்கெடுத்து ஓடுகின்றது. அவர்கள் மெய்சிலிர்த்து தேவியின் திருவருளை நினைத்து நினைத்துப் பெருமிதம் கொள்ளுகின்றனர். அன்னையின் அடிபணிந்து அவளைப் பலவாறு துதிக்கின்றனர். அத்துதியே இந்த ஸ்தவமாக உருவெடுக்கின்றது.

சண்டையில் வெற்றி பெற்ற பிறகு, வெற்றி தங்களது என்று கர்வமடைந்த தேவர்களின் முன் ஆகாயத்தில் ஓர் யக்ஷன் தோன்றி அவர்களை கர்வ பங்கம் செய்தான் என்று ஓர் கதை உண்டு. கேனோ பநிஷத் இதை நன்கு விவரிக்கின்றது. யக்ஷனால் வைக்கப்பட்ட துரும்பை அக்னியால் எரிக்க முடிய வில்லை, வாயுவால் அசைக்க முடியவில்லை. இந்திரன் வந்தவுடன் அந்த யக்ஷன் மறைந்தான். "அதே ஆகாயத்தில் உமாதேவி தோன்றினாள். யக்ஷன் யாரென வினவியதற்கு ப்ரஹ்மம் என்றாள்"

स तस्मिन्नेवाकाशे स्त्रियमाजगाम बहुशोभमानामुमां
हैमवतीं तां होवाच किं तद्यक्षमिति । स ब्रह्मेति होवाच ॥

ஸ தஸ்மிந்நேவாகாசே ஸ்த்ரியமாஜகாம பஹுசோபமானாம் உமாம் ஹைமவதீம் தாம் ஹோவாச கிம் தத்யக்ஷமிதி ।
ஸ ப்ரஹ்மேதி ஹோவாச ॥

வெற்றி பரமனது வெற்றி என வானவர் அறிந்தனர். இந்திரனுக்கு ஏற்பட்ட இந்த தர்சனத்தாலேயே, மஹிஷாசுரன் நிர்மூலமானவுடன் தேவியின் வெற்றி இது என உணர்ந்து ஈச்வரியைத் துதித்தனர். உல கில் நடக்கும் சகல காரியங்களும் ஈச்வர சக்தியா லேயே வெற்றி பெறுகின்றன என்பதை அறிய வேண்டும்.

தேவி உமாவின் தர்சனம் முதன்முதலில் இந்தி ரனுக்கே ஏற்பட்டது. ப்ரம்ம வித்யையும் அவ னுக்கே முதலில் கிடைத்தது. ஆதலால் இந்திரனே

முதல் சாதகனுகவும் த்ரஷ்டா, ரிஷியாகவும் ஆகின் ருன். இதையே ஸ்ரீ வாஸிஷ்ட கணபதி முனிவர் உமாஸஹஸ்ரத்தில்,

तस्य प्रथमः साक्षी भुवनजुषां नयनशालिनां मध्ये ।
वपुषः किलादिसुदृशो निरुपमपुण्यो निलिम्पपतिः ॥

தஸ்ய ப்ரதம: ஸாக்ஷீ புவநஜுஷாம் நயனசாலினும் மத்யே ।
வபுஷ: கிலாதிஸுதருசோ நிருபமபுண்யோ நிலிம்பபதி: ॥

என்ருர். இந்திரனே உலகிலுள்ளோர் அனைவரும் ப்ரம்மத்தை அடைய வழிகாட்டி. ஆதலால் தேவர் களும் அவனது தலைமையில் சென்று அன்னையைத் துதித்தனர். இந்த ஸ்தவம் இந்திரரிஷியின் தர்சனமா தலால் ஸூக்தம் என்று சொல்லப்படுகின்றது.

महिषान्तकरीसूक्तं दृष्टं देवैर्महर्षिभिः (மஹிஷாந்தகரீஸூக் தம் த்ருஷ்டம் தேவைர் மஹர்ஷிபி:) என்று தந்த்ரம் கூறும்.

எங்கும் வியாபித்த சக்தி

देव्या यया ततमिदं जगदात्मशक्त्या
निश्शेषदेवगणशक्तिसमूहमूर्त्या ।
तामम्बिकामखिलदेवमहर्षिपूज्यां
भक्त्या नताः स्म विदधातु शुभानि सा नः ॥ १ ॥

தேவ்யா யயா ததமிதம் ஜகதாத்மசக்த்யா
நிச்சேஷ தேவகண சக்திஸமூஹ மூர்த்யா ।
தாமம்பிகா மகிலதேவ மஹர்ஷி பூஜ்யாம்
பக்த்யா நதா: ஸ்ம விததாது சுபாநி ஸா ந: ॥ 1 ॥

निश्शेषदेवगणशक्तिसमूहमूर्त्या (நிச்சேஷதேவகணசக்தி ஸமூஹமூர்த்யா) அகில தேவர்களின் சக்தியின் ஒருமிப்பே உருவாய் அமைந்த यया (யயா) எந்த देव्या (தேவ்யா) தேவியினுல் इदं (இதம்) இந்த जगत् (ஜகத்) உலகம் आत्मशक्त्या (ஆத்மசக்த்யா) தனது சக்தியின் மூலம் ततं (ததம்) வியாபிக்கப்பட்டதோ तां (தாம்) அந்த अखिलदेवमहर्षिपूज्यां (அகிலதேவ மஹர்ஷிபூஜ்யாம்) தேவர் முனிவர் அனைவரும் பூஜிக்கும் अम्बिकां (அம்பிகாம்) அன்னையை भक्त्या (பக்த்யா) பக்தியுடன் नताः स्म (நதா: ஸ்ம) பணிந்தோம். सा (ஸா) அவள் नः (ந:) எங்களுக்கு शुभानि (சுபாநி) சுபங்களை विदधातु (விததாது) செய்யட்டும்.

அமரர் அனைவரது சக்தியும் திரண்டு பராசக்தி ஆனுள். உலகெலாம் பரவி நிற்கும் அன்னை அவள்; தேவர் முனிவர் போற்றும் தெய்வம். நாம் பக்தியுடன் அவள் பாதம் பணிந்தோம். எமக்கு மங்கலம் புரிவாளாக.

தாத்பர்யம்:

மஹிஷாசுரனைக் கொல்வதற்கு ஓர் வழி தேட இந்திரன் முதலிய தேவர்கள் மும்மூர்த்திகளிடம் வந்து முறையிட்டனர். அப்போது ப்ரும்மா, விஷ்ணு சிவன் இம்மூவருக்கும் அதைக்கேட்டு மஹிஷாசுரன்

மீது அடக்க முடியாத கோபம் ஏற்பட்டது. உடனே ஒவ்வொருவரிடமிருந்து ஒரு பெரிய ஒளி தோன்றியது. தேவர்கள் உடல்களிலிருந்தும் உடனே ஒளிகள் தோன்றி எல்லா ஒளிகளும் ஒன்று சேர்ந்து ஓர் எரியும் மலை போல் ஆயிற்று. இமைப்பொழுதில் அது ஒரு ஸ்திரீயின் உருவத்தைப் பெற்றது. ஒவ்வொரு தேவனின் சக்தியும் ஒவ்வொரு அவயவத்தை சிருஷ்டி செய்தது. இதைத்தான்

ततोऽतिकोपपूर्णस्य चक्रिणो वदनात्ततः ।
निश्चक्राम महत्तेजो ब्रह्मणः शङ्करस्य च ॥
अन्येषां चैव देवानां शक्रादीनां शरीरतः ।
निर्गतं सुमहत्तेजस्तच्चैक्यं समगच्छत ॥
अतुलं तत्र तत्तेजः सर्वदेवशरीरजम् ।
एकस्थं तदभून्नारी व्याप्तलोकत्रयं त्विषा ॥

ததோதிகோபபூர்ணஸ்ய சக்ரிணோ வதநாத்தத: ।
நிச்சக்ராம மஹத் தேஜோ ப்ரஹ்மண: சங்கரஸ்ய ச ॥
அந்யேஷாம் சைவ தேவாநாம் சக்ராதீநாம் சரீரத: ।
நிர்கதம் ஸுமஹத்தேஜஸ் தச்சைக்யம் ஸமகச்சத ॥
அதுலம் தத்ர தத்தேஜ: ஸர்வதேவசரீரஜம் ।
ஏகஸ்த்தம் ததபூந்நாரீ வ்யாப்தலோகத்ரயம் த்விஷா ॥

என்று தேவீ மாஹாத்மியம் கூறுகின்றது. இவ்வாறு ஒளிப்பிழம்பான தேவியைத்தான் ஜ்வாலாமாலினி என்பர். தேவர்களனைவரும் தங்கள் தங்கள் ஆயுதங்களை அவளுக்கு அளித்தனர். ஒவ்வொரு தேவனது சக்தியும் திரண்டு பெரிய பராசக்தி ஆனாள். அவளது ஒளியால் மூவ்வுலகையும் வியாபித்தாள், அவளது

திருவடி பூமியை அழுத்தியது; தலைமுடி ஆகாயத்தைக் கீறியது; அவளது நாண் ஒலி பாதாளம்வரை கிடு கிடுக்க வைத்தது. ஆயிரம் கரங்களைப் பரப்பி திசை களை அடைத்து நின்றாள் அவள் இவ்வாறு விச்வ ரூபம் கொண்ட தேவி மஹிஷனைக் கொன்றாள்.

இதிலிருந்து இரண்டு விஷயங்கள் தெரிகின்றன. ஒன்று, பராசக்தியிடம் சகல சக்திகளும் அடக்கம். அவளை உபாசித்தால் மற்ற தேவதைகளனைவரையும் உபாசித்த பலன் சித்திக்கின்றது. இரண்டாவது, பராசக்தி இவ்வுலகம் முழுவதும் எங்கும் வியாபித்த வஸ்து. ப்ரக்ருதியே பராசக்தி. சிருஷ்டி என்பது சக்தியின் விலாஸமே. உலகமும் வாழ்வும் மாயை என்பதை தந்த்ரங்கள் ஒப்புக்கொண்டன. ஆனால் மாயை என்றால் பொய்த் தோற்றம் என்பதை மறுத் தன. ஈச்வரியே மஹாமாயை எனத் தெளிந்து மாயையான உலகைத் துறப்பது தவறு எனக் கண் டன. தாயின் அன்பும் சலுகையுமே குழந்தையைத் தகப்பனிடம் கூட்டிச் செல்லும் என்று உணர்ந்து ப்ரம்மத்தை அடையவேண்டி தேவியை உபாசித் தனர் நம் பெரியோர்கள். தேவி அனைத்தையும் தன் மாயையால் மயக்குகின்றாள்; ஆனால் அந்த மயக்கத்தி லிருந்து விடுவிப்பவளும் அவளே. ஆதலால் வாழ் வையும் உலகையும் துறக்காமல், இவை சக்தியின் விலாஸம் எனத் தெளிந்து, இவை மூலமாகவே தெய் வத்தைத் தேடி, நாடிக்கூடி, சக்தி ரூபமான வாழ்வில் ப்ரம்மம் என்ற சிவத்தை ஸ்தாபிப்பதையே "சிவ சக்தி ஸாமரஸ்யம்" என அறிந்தோர் கூறுவர்.

சண்டிகையின் ப்ரபாவம்.

यस्याः प्रभावमतुलं भगवाननन्तो
ब्रह्मा हरश्च न हि वक्तुमलं बलं च ।
सा चण्डिकाऽखिलजगत्परिपालनाय
नाशाय चाशुभभयस्य मतिं करोतु ॥ २ ॥

யஸ்யா: ப்ரபாவமதுலம் பகவானநந்தோ
ப்ரஹ்மா ஹரச்ச ந ஹி வக்துமலம் பலம் ச ।
ஸா சண்டிகா அகிலஜகத்பரிபாலனாய
நாசாய ச அசுபபயஸ்ய மதிம் கரோது ॥ 2 ॥

ब्रह्मा (ப்ரஹ்மா) ப்ரும்மதேவனும் हरश्च (ஹரச்ச) பரம சிவனும் भगवान् अनन्तः (பகவான் அனந்த:) ஆதிசேஷ னும் यस्याः (யஸ்யா:) எவளுடைய प्रभावं (ப்ரபாவம்) சிறந்த பாவத்தையும் अतुलं (அதுலம்) இணையற்ற बलं च (பலம் ச) வன்மையையும் वक्तुं (வக்தும்) எடுத்துக் கூற न हि अलं (நஹி அலம்) முடியாதவர்களோ सा (ஸா) அந்த चण्डिका (சண்டிகா) சண்டிகை अखिलजगत्परिपालनाय (அகிலஜகத்பரிபாலனாய) அகில உலகைக் காப்பதற் கும் अशुभभयस्य (அசுபபயஸ்ய) கெடுதியைப் பற்றிய பயத்தை नाशाय च (நாசாய ச) ஒழிப்பதன் பொருட் டும் मतिं करोतु (மதிம் கரோது) மனது வைக்கவேண்டும்.

நான்முகனும் ஐந்து முகங்கள்கொண்ட சிவனும் ஆயிரம் முகங்கள் படைத்த ஆதிசேஷனும் தேவியின் தத்துவத்தையும் வன்மையையும் உள்ளபடி அறிந்து கூற இயலாது. அவள் மனது வைத்து உலகைக் காக்க வேண்டும். நமக்கு அபயம் அளிக்க வேண்டும்.

தாத்பர்யம்:

ஈச்வரியின் உண்மை உருவம் வாக்கிற்கும் மன திற்கும் எட்டாதது என்று அனைத்தையும் பிரகாசப் படுத்தும் ச்ருதியே கூறும். நான்கு முகங்களோ, ஐந்து முகங்களோ அல்லது ஆயிரம் முகங்களோ இருந்தாலும் அவளது தத்துவத்தைக் கூறுவது என்பது கூடாத காரியம். இக்கருத்தையே ஆசார்ய சங்கரர் அவர்கள் தமது ஆனந்த லஹரியில்

भवानि स्तोतुं त्वां प्रभवति चतुर्भिर्न वदनैः
प्रजानामीशानस्त्रिपुरमथनः पञ्चभिरपि ।
न षड्भिः सेनानीर्दशशतमुखैरप्यहिपतिः
तदान्येषां केषां कथय कथमस्मिन्नवसरः ॥

பவானி ஸ்தோதும் த்வாம் ப்ரபவதி சதுர்பிர்ந வதனை:
ப்ரஜானாமீசானஸ்த்ரிபுரமதன: பஞ்சபிரபி।
ந ஷட்பி: ஸேனானீர் தசசதமுகைரப்யஹிபதி:
ததாந்யேஷாம் கேஷாம் கதய கதமஸ்மின் அவஸர: ॥

என்று கூறியிருக்கின்றார்கள்.

அப்படிப்பட்ட ப்ரபாவத்தை உடைய தேவி உலகெலாம் காக்கவேண்டும் பயத்தைப் போக்கி அவள் நமக்கு அபயம் அளிக்க வேண்டும் என்று வேண்டப்படுகின்றது. எல்லாப் பிராணிகளும் கெடுதலை நினைத்து நினைத்தே பயமடைகின்றன. நல்லதை நினைத்தால் பயமென்பது பறந்து போம். ஆதலால் அன்னை

அசுபத்தைப் பற்றிய பீதியை அறவே ஒழித்து அபய மளித்து மனதிற்கு தைரியமும் உற்சாகமும் ஊட்டு கின்ருள். நல்லதையே நினைக்கச்செய்து, அசுபத்தை யும் சுபமாக மாற்றவல்ல ஆற்றலை அளிக்கின்ருள்.

மூர்த்தி பேதங்கள்

या श्रीः स्वयं सुकृतिनां भवनेष्वलक्ष्मीः
पापात्मनां कृतधियां हृदयेषु बुद्धिः ।
श्रद्धा सतां कुलजनप्रभवस्य लज्जा
तां त्वां नताः स्म परिपालय देवि विश्वम् ॥ ३ ॥

யா ஸ்ரீ: ஸ்வயம் ஸுக்ருதினும் பவநேஷ்வலக்ஷ்மீ:
பாபாத்மனும் க்ருததியாம் ஹ்ருதயேஷு புத்தி: ।
ச்ரத்தா ஸதாம் குலஜனப்ரபவஸ்ய லஜ்ஜா
தாம் த்வாம் நதா: ஸ்ம பரிபாலய தேவி விச்வம் ॥ 3 ॥

या (யா) எவள் सुकृतिनां (ஸுக்ருதினும்) நற்செயல் புரிந்தவரின் भवनेषु (பவநேஷு) இல்லங்களில் स्वयं (ஸ்வயம்) தானே श्रीः (ஸ்ரீ:) லக்ஷ்மியாகவும் पापात्मनां (பாபாத்மநாம்) பாபிகளிடம் अलक्ष्मीः (அலக்ஷ்மீ:) தரித் திரத்தன்மையாகவும் कृतधियां (க்ருததியாம்) மனப் பண்பாடு உடையவர்களின் हृदयेषु (ஹ்ருதயேஷு) ஹ்ருதயங்களில் बुद्धिः (புத்தி:) புத்தியாகவும் सतां (ஸதாம்) நல்லோர்களின் श्रद्धा (ச்ரத்தா) சிரத்தை யாகவும் कुलजनप्रभवस्य (குலஜனப்ரபவஸ்ய) நற்குலத் தில் பிறந்தவரின் लज्जा (லஜ்ஜா) வெட்கமாகவும்

(இருக்கின்றுளோ) ताः (தாம்) அப்படிப்பட்ட त्वां (த்வாம்) உன்னை नताः स्म (நதா: ஸ்ம) பணிந்தோம் देवि (தேவி) தேவீ विश्वं (விச்வம்) உலகை परिपालय (பரிபாலய) காப்பாற்று.

நற்கருமம் செய்தோர் வீட்டில் அவள் லக்ஷ்மி யாய்த் திகழ்கின்ருள். பாபிகளிடம் மூதேவியாய்க் குடிகொள்கின்ருள் பண்படைத்த உள்ளங்களி லுள்ள புத்தியும் நல்லோர்களின் சிரத்தையும் நற்குல நங்கையரிடம் காணப்படும் நாணமும் அவளே. அவளை அடிபணிந்தோம் அனைத்தையும் காப்பா ளாக.

தாத்பர்யம்:

அன்னை சத்காரியங்கள் புரிபவர்களுக்கு ஏரா ளமான சம்பத்தை அளித்து அவர்களுக்கு லக்ஷ்மீ ரூபத்தில் அருள் புரிகின்ருள் பாபிகளை தரித்திரத்திற்காளாக்கி வாட்டுகின்ருள் மூதே வியும் அவளது உருவங்களில் ஒன்றே. அவளைத் தான் தூமாவதி என்றும் ஜ்யேஷ்டா என்றும் கூறுகின் றனர். இந்த ரூபத்தை தச மஹாவித்யைகளில் ஒன் ருகக் கூறுவர். பண்பட்ட உள்ளங்களில் உதிக்கும் புத்தி, நல்லோர்களின் சிரத்தை, நற்குலத்தில் பிறந் தோரின் அடக்கம், எல்லாம்—அவளது அருள் இருந் தால்தான் தோன்றுகின்றன. அவளே எல்லாப் பிராணிகளிடமும் புத்தி ரூபமாயும் சிரத்தை ரூப மாயும் லஜ்ஜா ரூபமாயும் இருக்கின்ருள்.

या देवी सर्वभूतेषु बुद्धिरूपेण संस्थिता ।
या देवी सर्वभूतेषु श्रद्धारूपेण संस्थिता ।
या देवी सर्वभूतेषु लज्जारूपेण संस्थिता ।
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥

யா தேவீ ஸர்வபூதேஷு புத்திரூபேண ஸம்ஸ்திதா ।
யா தேவீ ஸர்வபூதேஷு ச்ரத்தாரூபேண ஸம்ஸ்திதா ।
யா தேவீ ஸர்வபூதேஷு லஜ்ஜாரூபேண ஸம்ஸ்திதா ।
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம: ॥

என்று தேவீ மாஹாத்மியமும் இதைத்தான் சொல்லுகின்றது.

லஜ்ஜா என்றால் 'வெட்கம்' என்று மாத்திரம் பொருள் செய்யாமல் அடக்கம், பணிவு, வினயம் இவைகளையும் குறிப்பதாக அறியவேண்டும். மந்த்ர சாஸ்திரத்தில் லஜ்ஜா என்பது ஹ்ரீம் என்ற பீஜாக்ஷரத்தின் சங்கேதப் பெயர். ஈச்வரி லஜ்ஜா ரூபமாயிருக்கின்றாள் எனில் ஹ்ரீம் ரூபமான புவனேச்வரி அவள் என்று பொருள்.

———

வானவரின் வியப்பு

किं वर्णयाम तव रूपमचिन्त्यमेतत्
किं चातिवीर्यमसुरक्षयकारि भूरि ।
किं चाहवेषु चरितानि तवाति यानि
सर्वेषु देव्यसुरदेवगणादिकेषु ॥ ४ ॥

கிம் வர்ணயாம தவ ரூபமசிந்த்யமேதத்
கிம் சாதிவீர்யமஸுரக்ஷயகாரி பூரி ।
கிம் சாஹவேஷு சரிதாநி தவாதி யாநி
ஸர்வேஷு தேவ்யஸுரதேவகணாதிகேஷு ॥ 4 ॥

देवि (தேவி) தேவீ सर्वेषु (ஸர்வேஷு) எல்லா असुर-देवगणादिकेषु (அஸுரதேவகணாதிகேஷு) அசுரர் அமரர் இவர்களது கூட்டங்களில் तव (தவ) உனது रूपं (ரூபம்) உருவம் अचिन्त्यं (அசிந்த்யம்) எண்ணுதற்கியலாது एतत् (ஏதத்) இதை किं वर्णयाम (கிம் வர்ணயாம) என்னவென்று வர்ணிப்போம்! भूरि (பூரி) மிகுதியாக असुरक्षयकारि (அஸுரக்ஷயகாரி) அசுரர்களை நாசம் செய்யும் अतिवीर्यं (அதிவீர்யம்) அதிசய பராக்கிரமத்தை किंच (கிம் ச) என்னவென்போம்! आहवेषु (ஆஹவேஷு) போர்களில் तव (தவ) உனது अति चरितानि (அதி சரிதாநி) அதிசயச் செயல்கள் यानि (யாநி) எவைகளோ (அவைகளை) किं च (கிம் ச) என்னவென்போம்!

அமரர் அசுரர் இவர்களுக்கிடையே உனது உருவம் மனதால் நினைத்துப்பார்க்கக்கூட இயலாது. வாயால் வர்ணிப்பது எங்ஙனம்? வாக்கும் மனதும் எட்டிப்பிடிக்க முடியாத உன்னை உடற்செயலா பிடிக்கமுடியும்? போரில் உனது அற்புதச் செயல்களுக்கு ஈடுசொல்ல எங்கள் செயலாற்றல்களால் எவ்வாறு முடியும்?

தாத்பர்யம்:

தேவர்கள் ஈச்வரியைத் துதி செய்கின்றனர். மனதால் அவளது உருவை தியானிக்கமுடியாதபோது வாயிலிருந்து துதிச்சொற்கள் எவ்வாறு வெளிப்படும்? அவளது உருவம் மிக சூக்ஷ்மமாதலால் அறிந்து கொள்ளமுடியவில்லை என்றாலும் ஸ்தூலமாக அவள் தோன்றி வீரத்தை வெளிப்படுத்தி எதிரிகளுடன் போர் புரிந்தபோதும் அவளைத்தெரிந்து உணர முயற்சி செய்தது அனைத்தும் வீணே. ஆதலால் மனம், வாக்கு, காயம் இம்மூன்றிற்கும் எட்டாதது பராசக்தியின் ஸ்வரூபம் எனத் தெளிந்து தேவர் துதிக்கின்றனர்.

சிருஷ்டி ரகசியம்

हेतुः समस्तजगतां त्रिगुणाऽपि दोषैः
न ज्ञायसे हरिहरादिभिरप्यपारा ।
सर्वाश्रयाखिलमिदं जगदंशभूतं
अव्याकृता हि परमा प्रकृतिस्त्वमाद्या ॥ ५ ॥

ஹேது: ஸமஸ்தஜகதாம் த்ரிகுணாபி தோஷை:
ந ஞாயஸே ஹரிஹராதிபி ரப்யபாரா ।
ஸர்வாச்ரயாகிலமிதம் ஜகதம்சபூதம்
அவ்யாக்ருதா ஹி பரமா ப்ராக்ருதி ஸ்த்வமாத்யா ॥ 5 ॥

त्वं (த்வம்) நீ समस्तजगतां (ஸமஸ்தஜகதாம்) அகில உலகிற்கும் हेतुः (ஹேது:) காரணம் त्रिगुणा अपि (த்ரிகுணா அபி) ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களாக

ஆனபோதிலும் दोषैः (தோஷை:) குற்றங்களால் न ज्ञायसे (ந ஞாயஸே) அறியப்படுவதில்லை (அதாவது உன்னிடம் குறைபாடுகள் கிடையாது) हरिहरादिभिः अपि (ஹரிஹராதிபி: அபி) விஷ்ணு சிவன் முதலியவர்களாலும் अपारा (அபாரா) அறியமுடியாதவள் सर्वाश्रया (ஸர்வாச்ரயா) அனைத்திற்கும் அடைக்கலம் इदं (இதம்) இந்த अखिलं (அகிலம்) எல்லா जगत् (ஜகத்) உலகும் अंशभूतं (அம்சபூதம்) உனது அம்சமாம் हि (ஹி) ஏனெனில் अव्याकृता (அவ்யாக்ருதா) நீ அவ்யக்தமாக (வெளிப்படாமல்) இருப்பவள் परमा (பரமா) உயர்ந்த आद्या प्रकृतिः (ஆத்யா ப்ரக்ருதி:) மூல ப்ரக்ருதி.

நீ அவ்யக்தமாயிருக்கும் மூல ப்ரக்ருதி, வ்யக்தமான உலகிற்குக் காரணம். முக்குண உருவம் கொண்டாலும் அதன் குறைபாடுகளுடன் ஒட்டிக்கொள்ளாதவள். ஹரியும் ஹரனும் உனது வரம்பைக் காண்கிலர். அனைத்திற்கும் அடைக்கலமாம் உனது அம்சமே இவ்வுலகம்.

தாத்பர்யம்:

இந்த ச்லோகம் சிருஷ்டியின் ரகசியத்தை அறிவுறுத்துகின்றது. முதன் முதலில், சகல சிருஷ்டியும் ஏற்படுவதற்குமுன், ஒன்றே ஒன்றுதான் இருந்தது. அது ஜடம்போல் செயலற்றுக் கிடந்தது. அதை ஓர் உணர்வு தூண்டிற்று. இந்த உணர்வு அந்த ஒன்றிலிருந்தே ஏற்பட்டது. உணர்வு ஏற்பட்டவுடன் சக்தி பிறந்தது. அந்த ஒன்றை சிவன் என்றும் புருஷன் என்றும் கூறுவர். சக்தியை ப்ரக்ருதி எனவும் உரைப்பர்.

ப்ர (ப்ர) என்றால் 'ப்ரக்ருஷ்டமான', சிறந்த' என்று பொருள். க்ருதி (க்ருதி) என்பது சிருஷ்டிச் செயல். சிருஷ்டியில் சிறந்து நின்றவள் ப்ரக்ருதி

प्रकृष्टवाचकः प्रश्च कृतिश्च सृष्टिवाचकः ।
सृष्टौ प्रकृष्टा या देवी प्रकृतिः सा प्रकीर्तिता ॥

ப்ரக்ருஷ்டவாசக: ப்ரச்ச க்ருதிச்ச ஸ்ருஷ்டிவாசக: ।
ஸ்ருஷ்டௌ ப்ரக்ருஷ்டா யா தேவீ ப்ரக்ருதி: ஸா ப்ரகீர்த்திதா ॥

என்று ஸ்ரீ தேவிபாகவதம் கூறும். எல்லாவற்றிற்கும் ப்ரக்ருதி காரணமாதலால் இவளை மூலப்ரக்ருதி, முதல்வள் என்று பலவாறு கூறுகின்றனர். முதன் முதலில் வெளிப்படாமல் இருக்கும் இவளை அவ்யாக்ருதா என்றும் அவ்யக்தா என்றும் கூறுவர். பிறகு இவளிடமிருந்தே சிருஷ்டியின்போது சகலமும் வெளிப்படுகின்றன. பிரளயத்தின்போது அனைத்தும் இந்த அவ்யக்தத்தில் லயமடைகின்றன. வெளிப்பட்டும் வெளிப்படாமலும் இருக்கும் அனைத்தும் அவளது உருவே இதைத்தான்

मूलप्रकृतिरव्यक्ता व्यक्ताव्यक्तस्वरूपिणी ।

மூலப்ரக்ருதிரவ்யக்தா வ்யக்தாவ்யக்தஸ்வரூபிணீ ।

என்று ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமமும்

अव्यक्तात् व्यक्तयः सर्वाः प्रभवन्त्यहरागमे ।
रात्र्यागमे प्रलीयन्ते तत्रैवाऽव्यक्तसंज्ञके ॥

அவ்யக்தாத் வ்யக்தய: ஸர்வா: ப்ரபவந்த்யஹராகமே ।
ராத்ர்யாகமே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்தஸம்ஜ்ஞகே ॥

என்று ஸ்ரீமத் பகவத்கீதையும் கூறுகின்றன.

இந்த ப்ரக்ருதியே மஹாமாயை எனப்படுவாள். मायां तु प्रकृतिं विद्यात् मायिनं तु महेश्वरम् (மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாத் மாயினம் து மஹேச்வரம்) என்று ச்ருதி கூறும். இந்த மஹாமாயையின் தத்துவத்தை தேவீ மாஹாத்மியம் வெகு அழகாக எடுத்துச் சொல்லுகின்றது :

ज्ञानिनामपि चेतांसि देवी भगवती हि सा
बलादाकृष्य मोहाय महामाया प्रयच्छति ॥

ஞானிநாமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹி ஸா ।
பலாதாக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி ॥

ஞானிகளின் மனங்களேயும் இவள் பலமாகக் கவர்ந்து மயக்கத்தில் ஆழ்த்துவாள். இவ்வாறு செய்வதற்கு அவள் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களின் உருக்கொள்ளுகின்ருள். देवात्मशक्तिं स्वगुणैर्निगूढां (தேவாத்மசக்திம் ஸ்வகுணைர் நிகூடாம்) என்று ச்ருதியும் दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया (தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா) என்று பகவத்கீதையும் கூறியிருப்பதைக் காண்க.

தமஸ் என்ற குணம் இருள், அக்ஞானம், ஜடத்தன்மை முதலியவைகளேக் குறிப்பது. ரஜஸ் என்ற குணம் அகந்தை, செயலாற்றும் வேகம், தைர்யம் முதலியவைகளேக் குறிக்கும். ஸத்வகுணமென்ருல் சாந்தம், அமைதி, ஆனந்தம் இவையெல்லாம் நம் மனக்கண் முன்னே தோன்றும். சகல ஜீவராசிகளும் இம்மூன்று குணங்களுக்கு வசப்பட்டு இருக்கின்றன.

3

குணம் என்ருல் 'கயிறு' என்றும் பொருள். இந்த சிலேடையை உபயோகித்து ரிக்வேத ரிஷிகள் சுனச்சேபன் கதையைச் சொல்லியுள்ளார்கள். வாழ்வே வேள்வி; மனிதனே பசுவாக யூபஸ்தம்பத்தில் மூன்று கயிறுகளால் (முக்குணங்களால்) கட்டப்பட்டிருக்கின்ருன் என்று கூறியுள்ளனர். ப்ரக்ருதியும் இந்த குணங்கள் மயமாகின்ருள். ஆனல் இச்சிருஷ்டிக்கு வெளியேயும் அவள் இருப்பதால் இக்குணங்களின் குறைபாடுகள் அவளுக்கு ஏற்படுவதில்லை. படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களை இந்த முக்குண உருக்கொண்டே செய்கின்ருள். சிருஷ்டியில் இம்முக்குணங்களுக்கேற்ப, கருபபு, சிவப்பு, வெளுப்பு என்று நிறங்கள் பூண்டு மஹாகாளி, மஹாலக்ஷ்மி, மஹாஸரஸ்வதி என்ற மூர்த்தி பேதங்களாய்த் திகழ்கின்ருள். अजामेकां लोहित शुक्लकृष्णां (அஜாமேகாம் லோஹிதசுக்லக்ருஷ்ணும்) என்ற ச்ருதி வசனமே இதற்குப் போதிய சான்று.

पारं (பாரம்) என்ருல் கரை அல்லது வரம்பு. अपारा (அபாரா) என்ருல் எல்லையற்றவள், வரம்பு கூறி நிர்ணயிக்க இயலாதவள் என்று பொருள்.

இந்த உலகு ஈச்வரியின் अंशभूतं (அம்சபூதம்) என்று கூறப்பட்டது. सृष्टि (ஸ்ருஷ்டி) என்ற சொல் सृज् (ஸ்ருஜ்) என்ற தாதுவிலிருந்து தோன்றுகிறது. सृज् (ஸ்ருஜ்) என்பதற்கு 'விட்டு விடுதல்' என்று பொருள்; विसर्जन (விஸர்ஜனம்) முதலிய பதங்களில் இப்பொருளே குறிக்கப்படுகின்றது. ஆகையால்

கடவுள் தன்னிடமிருந்து விட்டுவிட்ட ஒரு பங்கிற்கு ஸ்ருஷ்டி (ஸ்ருஷ்டி) என்று பெயர். இந்த அபிப்பிரா யத்தையே पादोऽस्य विश्वा भूतानि (பாதோஸ்ய விச்வா பூதாநி) என்று ச்ருதி சொல்லுகின்றது. இவ்வுலகம் கடவுளது அம்சமாக இருப்பதால்தான் இந்த அம்சம் அதனது முழுமையுடன் சேருவதற்கு சாத் தியமாகின்றது. கடவுளின் உருவிலும் பங்கிலும் தோன்றிய மனிதன் பூரண தெய்வத்தன்மையைப் பெறுதல் சாத்தியம் என்று ஏற்படுகின்றது.

இந்த ச்லோகம் எளிய பதங்களால் ஆனபோதி லும் ஆழ்ந்த கருத்துகள் கொண்டது. இதை அப் படியே சாதாரணமாக மொழி பெயர்த்தால் ஆழ்ந்த கருத்துகள் அனைத்தும் உடனே தெரிகின்றன. ஆனால் இவ்வாறு செய்யாமல் தங்களது பாண்டித்யத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் வியாக்யானம் செய் தவர்கள். परमा (பரமா) என்றால் உத்க்ருஷ்டமானவள், உயர்ந்தவள் என்று பொருள். परः आत्मा मीयते अनया इति परमा (பர: ஆத்மா மீயதே அனயா இதி பரமா) பர: என்றால் ஆத்மா; அதை அளவிடுபவள் பரமா என்று ஒருவர் கூறியுள்ளார். परा सा परमा (பரா மா பரமா) மஹாலக்ஷ்மிதான் பரமா என்று மற்றவரின் கூற்று. अव्याकृत (அவ்யாக்ருத) என்ற பதம் வேதாந்தத்தில் மிகப் பிரசித்தி பெற்றதே; வெளிப்படாத, அவ்யக்த மான என்று அதன் பொருள். अः (அ:) என்றால் விஷ்ணு; அவரால் பத்திரமாக வக்ஷஸ்தலத்தில் போற்றப்படுபவள் अव्याकृता (அவ்யாக்ருதா) என்று ஒருவர் சாதிக்கின்றார். अविना सूर्येण आ समन्तात् कृता (அவிஞ

சூர்யேண ஆ ஸமந்தாத் க்ருதா) அவி என்ருல் சூரியன் அவனுல் சுற்றிலும் செய்யப்பட்டவள் अव्याकृता (அவ் யாக்ருதா) என்று இன்னொருவர் சொல்லி “சூரியன் தேவியின் மயிர்க்கால்களை யெல்லாம் தனது கிரணங் களால் நிரப்பினுன்” समस्तरोमकूपेषु निजरश्मीन् दिवाकरः (ஸமஸ்தரோமகூபேஷு நிஜரச்மீன் திவாகர:) என்ற தேவீமாஹாத்மிய வசனத்தையும் மேற்கோளாக எடுத்துக் காட்டியிருக்கின்ருர்!

நாம் இவைகளைக் குறிப்பிடக் காரணமுளது. பழைய உயரிய க்ரந்தங்களில் எல்லாம் தத்துவங்கள் ததும்பி நிற்கின்றன. சாதாரணமாக அவைகளை நேராக அர்த்தம் செய்தால் தத்துவங்கள் உடனே நமக்குப் புலனுகின்றன. ஆனுல் துரதிர்ஷ்டவசமாக இவைகளைத் தொன்று தொட்டு வியாக்கியானம் செய்து வருபவர்கள் பதங்களை மனம் போனவாறு சிதைத்துத் தங்களது இலக்கண சாமர்த்தியத்தை வெளிப்படுத்தினுர்களேயன்றி இவைகளின் உண் மைப் பொருளைக் கூற முன்வந்தாரிலர். ஒருவேளை, உண்மைப் பொருள்தான் தெள்ளென விளங்கு கின்றதே, அதைச் சொல்லவா வியாக்கியானம் என்று எண்ணினுர்கள் போலும்! வியாக்கியானம் செய்தவர் களைப் பின்பற்றியே பொருள் கூறவேண்டும் என்பது நம் நாட்டினரின் மரபு இதனுல் உண்மைப்பொருள் என்று மூடுமந்திரமாகவே போய்விடுகின்றது; நாட் டின் அறிவு வளர்ச்சி தடைப்படுகின்றது. ஆதலால் மூலக்ரந்தத்திற்கே சென்று அறிந்தால், அது உண்மை அறிவாகும்.

வேள்வித் தத்துவம்

यस्याः समस्तसुरता समुदीरणेन
तृप्तिं प्रयाति सकलेषु मखेषु देवि ।
स्वाहासि वै पितृगणस्य च तृप्तिहेतु-
रुच्चार्यसे त्वमत एव जनैः स्वधा च ॥ ६ ॥

யஸ்யா: ஸமஸ்தஸுரதா ஸமுதீரணேந
திருப்திம் ப்ரயாதி ஸகலேஷு மகேஷு தேவி ।
ஸ்வாஹாஸி வை பித்ருகணஸ்ய ச த்ருப்திஹேது-
ருச்சார்யஸே த்வமத ஏவ ஜனை: ஸ்வதா ச ॥ 6 ॥

देवि (தேவி) தேவீ, सकलेषु (ஸகலேஷு) எல்லா मखेषु (மகேஷு) வேள்விகளிலும் (यस्याः) (யஸ்யா:) எவளுடைய समुदीरणेन (ஸமுதீரணேந) உச்சாரணத்தால் समस्तसुरता (ஸமஸ்தஸுரதா) தேவதைகள் அனைத்தும் तृप्तिं (திருப்திம்) திருப்தியை प्रयाति (ப்ரயாதி) அடைகின்றதோ स्वाहासि वै (ஸ்வாஹாஸி வை) அந்த ஸ்வாஹாவாக இருக்கின்றாய் त्वं (த்வம்) நீ पितृगणस्य च (பித்ருகணஸ்ய ச) பித்ருக்கள் கூட்டத்திற்கும் तृप्तिहेतुः (த்ருப்திஹேது:) திருப்திக்குக் காரணமாகின்றாய் अत एव (அத ஏவ) அதனால்தான் जनैः (ஜனை:) ஜனங்களால் स्वधा च (ஸ்வதா ச) ஸ்வதா என்றும் उच्चार्यसे (உச்சார்யஸே) சொல்லப்படுகின்றாய்.

எல்லா வேள்விகளிலும் தேவதைகளைத் திருப்தி செய்யும் ஸ்வாஹா நீ, பித்ருக்களைத் திருப்தி செய்யும் ஸ்வதாவும் நீயே.

தாத்பர்யம் :

அக்னிக்கு இரு பத்தினிகள் என்பர். ஒருவள் ஸ்வாஹா, மற்றவள் ஸ்வதா. தேவர்களுக்கு ஹவிர்ப் பாகம் அளிக்கும்போதெல்லாம் इन्द्राय स्वाहा, विष्णवे स्वाहा (இந்த்ராய ஸ்வாஹா, விஷ்ணவே ஸ்வாஹா) என்று இவ்வாறு ஸ்வாஹா மூலமாக அளிக்கவேண்டும். பித்ருக்களுக்குப் பங்கு அளிக்கும்போது पितृभ्यः स्वधा (பித்ருப்ய: ஸ்வதா)என்று ஸ்வதா மூலமாகச் செலுத்த வேண்டும். 'தேவீ ஸூக்தம்' என்ற ரிக்வேத ஆம்ப்ருணீ ஸூக்தம் प्रथमा यज्ञियानां (ப்ரதமா யக்ஞியா நாம்) என்று தேவியைக் கூறும். தவிர त्वं स्वाहा त्वं स्वधा (த்வம் ஸ்வாஹா த்வம் ஸ்வதா) என்று தேவீ மாஹாத் மியத்தில் பிரும்மன் தேவியைத் துதி செய்கையிலும் स्वाहाकारे तृप्यत्दैवं (ஸ்வாஹாகாரே த்ருப்யத்தைவம்) என்று உமாஸஹஸ்ரத்தில் கணபதி முனிவரும் கூறியிருப் பதைக் காண்க. ஆகையால் தேவியே ஸ்வாஹா வாகவும் ஸ்வதாவாகவும் இருக்கின்றாள். அக்னி ருத்ர னின் ஸ்வரூபம் என்று ச்ருதிகள் கூறும். ஆகவே அக்னியின் பத்தினிகள் சக்தி ரூபங்களாகின்றனர்.

தவிர, அக்னியை வேள்வியில் முதல்வன் என் றும், தேவதூதன் என்றும், மரிக்கும் மனிதரிடையே மரிக்காத அமரனவன் என்றும் வேதம் கூறும். அவன் தான் மானிடருக்கும் தேவருக்குமிடையே யுள்ள தொடர்புச் சங்கிலி. எத்தேவனை அடையவேண்டுமா யினும் அவன் மூலமாகத்தான் அடையவேண்டும் அவனது சக்திகளான ஸ்வாஹா, ஸ்வதா இவர்கள்

வழியாகவே செலுத்தவேண்டும். உள் தத்துவத்தை நோக்கின், வேள்வி என்பது நம் வாழ்வே. நம்முள்ளே மேல் நோக்கிக் கிளம்பும் ஆர்வமே இவ்வக்னி. இந்த அடங்கா ஆர்வம் மூலமாக நம்மைப் பரமனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். ஸ்வாஹா ஸ்வதா என்று உருக்கொண்ட சக்தியே இவ்வர்ப்பணத்தை ஏற்கின்றாள். இவ்வாறு மனிதன் தன்னிடமுள்ள ஒவ்வொரு பங்கையும் தேவனுக்கு அர்ப்பணம் செய்யச் செய்ய தேவனது ஒளியும் அருளும் அப்பங்கில் வந்து நிரம்புகின்றது. எவ்வளவு மனிதன் அர்ப்பணம் செய்கின்றானோ அவ்வளவே தெய்வம் தன்னைக் கொடுக்கின்கின்றது. இதைத்தான் தேவீ மாஹாத்மியத்தில்

ददाति प्रतिगृह्णाति नान्यथैषा प्रसीदति ।

ததாதி ப்ரதிக்ருஹ்ணாதி நான்யதைஷா ப்ரஸீததி ।

"கொடுக்கின்றாள், ஏற்றுக்கொள்ளுகின்றாள்; இவள் வேறு ஒரு விதத்திலும் பிரசன்னமாவதில்லை" என்று சூத்திரம்போல் கூறினர். ஏனெனில் வேள்வி என்பது மிகப் பெரியதோர் கொடுக்கல் வாங்கல். மனிதனது அர்ப்பணத்தால் தேவன் ஜீவிக்கின்றான்; தேவனது அருளால் மனிதன் பிழைக்கின்றான். இது இயற்கை நியதி. எப்படி மண்ணிலுள்ள சத்தால் செடிகொடிகள் ஜீவிக்கின்றனவோ, செடிகொடிகளின் ஜீவசத்தால் மிருகங்களும் மனிதனும் பிழைக்கின்றார்களோ, அவ்வாறே மனிதனிடமுள்ள சாரத்தைக் கொண்டு தேவன் வளர்கின்றான். மனிதன் செடிகொடிகளை வளர்ப்பதுபோல், பதிலுக்கு தேவனும் மனிதனிடம் தெய்வ தன்மையை ஏற்படுத்துகின்றான். இதைத்தான் பகவத்கீதையும்

देवान् भावयतानेन ते देवा भावयन्तु वः ।
परस्परं भावयन्तः श्रेयः परमवाप्स्यथ ॥

தேவான் பாவயதாநேன தே தேவா பாவயந்து வ: ।
பரஸ்பரம் பாவயந்த: ச்ரேய: பரமவாப்ஸ்யத ॥

என்றது. இந்தக் கொடுக்கல் வாங்கல்தான் வேள்வி என்பது என்று வேதம் முரசு கொட்டிற்று. பின்னுளில் இத்தத்துவத்தை மாந்தர் மறந்துவிட்டனர். இந்தத் தத்துவத்தையே மகாகவி காளிதாஸர் தனது ரகுவம்சத்தில்,

दुदोह गां स यज्ञाय सस्याय मघवा दिवम् ।
सम्पद्विनिमयेनोभौ दधतुर्भुवनद्वयम् ॥

துதோஹ காம் ஸ யக்ஞாய ஸஸ்யாய மகவா திவம் ।
ஸம்பத்விநிமயேனேபௌ தததுர்புவனத்வயம் ॥

"அம்மன்னவன் வேள்விக்காக பூமியைக் கறந்தான். இந்திரன் பூமியில் பயிர் பச்சைகள் ஏற்படவேண்டி வானத்தைக் கறந்தான். இப்படி இருவரும் தங்களது செல்வத்தை மாற்றிக்கொண்டு விண்ணையும் மண்ணையும் காத்தனர்" என்று வெகு அழகாகக் கூறியிருக்கின்றார்.

வேள்வி தேவனுக்காகச் செய்கின்றோம் என்று கூறினேப். பித்ருக்களுக்கும் செய்யவேண்டும். சிராத்தம் முதலிய சடங்குகள் யாவும் பித்ருக்களுக்குச் செய்யும் வேள்வியே. பித்ருக்கள் என்பவர் யாவர்?

பித்ருக்கள் என்பதற்கு நம் தகப்பன்மார்கள், நம் முன்னோர்கள் என்று பொருள். இவர்களுக்கு நாம் ஏன் வேள்வி புரியவேண்டும் என்ற கேள்வி எழுகின்றது. இவர்களை வேள்வியில் இருவிதமாகப் பிரித்துள்ளார்கள். அங்கிரஸ், ப்ருகு, அதர்வன் முதலிய ऋषयो दिव्या: (ரிஷயோ திவ்யா:) தெய்வத்தன்மை வாய்ந்த ரிஷிகள். இவர்கள் தேவர்கள் மாதிரியே சில சக்திகள் பெற்று சிருஷ்டியில் இடம் பெற்றுள்ளார்கள். இரண்டாவது பிரிவு पितरो मनुष्या: (பிதரோ மனுஷ்யா:) நமது மானிட தகப்பன் பாட்டன்மார்கள். இவர்கள் எல்லாரும் ஸோமரஸத்தில் பிரியங்கொண்டவர்கள், ஒன்பது பசுக் (அறிவு ஒளி) களை உடையவர்கள்.

अङ्गिरसो नः पितरो नवग्वाः अथर्वाणो भृगवः सोम्यासः ।

அங்கிரஸோந: பிதரோ நவக்வா: அதர்வாணோ ப்ருகவ: ஸோம்யாஸ

என்று ரிக்வேதம் கூறும். இந்த பித்ருக்கள் நமக்கு முன்னால் அமரத்தன்மையை அடையப் பாடுபட்டவர்கள். நம் முன்னோர்களான இவர்கள் சாதனையில் நமக்கு முன்னால் சென்றவர்கள்.

प्रेहि प्रेहि पथिभिः पूर्व्येभिर्यत्रा नः पूर्वे पितरः परेयुः ।

ப்ரேஹி ப்ரேஹி பதிபி: பூர்வ்யேபிர்யத்ரா ந: பூர்வே பிதர: பரேயு:

என்று வேதம் கூறும். மேலும்,

वीळु चिद् दृळ्हा पितरो न उक्थैरद्रिं रुजन्नङ्गिरसो रवेण ।
चक्रुर्दिवो बृहतो गातुमस्मे अहः स्वर्विविदुः केतुमुस्राः ॥

வீளு சித் த்ருன்ஹா பிதரோ ந உக்தை:
அத்ரிம் ருஜன் அங்கிரஸோ ரவேண ।
சக்ருர் திவோ ப்ருஹதோ காதுமஸ்மே
அஹ: ஸ்வர்விவிது: கேதுமுஸ்ரா: ॥

'நம் தகப்பன்மார்கள் தங்களது வாக்கால் கெட்டியான, உறுதியான இடங்களைப் பெயர்த்தனர்; ஆம், அங்கிரஸர்கள் தங்களது சப்தத்தால் மலையை உடைத்தனர்;பரம விண்ணுலகிற்கு வழியை எங்களிடம் ஏற்படுத்தினர்; பகலையும் சூரிய உலகையும் ஞான திருஷ்டியையும், ஒளி என்னும் பசுக்களையும் கண்டு பிடித்தனர்'' என்று ரிக்வேதம் (I.71. ii)முரசு கொட்டிற்று. ஆகையால் பித்ருக்களுக்கு, அதாவது நம் முன்னோர்களுக்கு வேள்வி புரிதல் முக்கியமாகின்றது.விண்ணுலகிற்கு, ஓர் அமரத்துவத்திற்கு நமக்கும் வழி காட்டவே ஏற்கனவே அவ்வழியே சென்று லக்ஷ்யத்தை அடைந்த பித்ருக்களின் உதவி கோரப்படுகின்றது.

இந்த பித்ருக்களைத் திருப்தி செய்யும் ஸ்வதா என்னும் சொல் தேவியின் ஸ்வரூபமாகும்.

सरस्वति या सरथं ययाथ स्वधाभिर्देवि पितृभिर्मदन्ती ।

ஸரஸ்வதி யா ஸரதம் யயாத ஸ்வதாபிர்தேவி பித்ருபிர்மதந்தீ ।

முதலிய ரிக்குகளைக் காண்க. தவிர இவர்களை வஸுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள் என்றும் விச்வே தேவர்கள் என்றும் பிரித்துக் கூறுவார்கள். தேவி ஸ்வதாவாக இருந்து பித்ருக்களைத் திருப்தி செய்கின்ருள்

என்ற பொருளை ஒட்டியே தேவீ ஸூக்தம் अहं रुद्रेभिर्वसुभिश्चराम्यहमादित्यैरुत विश्वदेवैः (அஹம் ருத்ரேபிர் வஸுபிச் சராம்யஹமாதித்யைருத விச்வதேவை:)என்று சொல்லியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆதலால் அன்னையின் சக்திதான் ஆர்வத்தியுடன் சேர்ந்து ஆத்மஸமர்ப்பணத்திற்கு வழி வகுக்கின்றது.

வித்யையின் ஸ்வரூபம்

या मुक्तिहेतुरविचिन्त्यमहाव्रता त्वं
अभ्यस्यसे सुनियतेन्द्रियतत्त्वसारैः ।
मोक्षार्थिभिर्मुनिभिरस्तसमस्तदोषैः
विद्याऽसि सा भगवती परमा हि देवि ॥ ७ ॥

யா முக்திஹேதுரவிசிந்த்யமஹாவ்ரதா த்வம்
அப்யஸ்யஸே ஸுநியதேந்த்ரியதத்வஸாரை: ।
மோக்ஷார்த்திபிர்முனிபிரஸ்தஸமஸ்ததோஷை:
வித்யாஸி ஸா பகவதீ பரமா ஹி தேவி ॥ 7 ॥

देवि (தேவி) ஹே தேவீ ! या (யா) எது अविचिन्त्यमहाव्रता (அவிசிந்த்யமஹாவ்ரதா) எண்ணுதற்குக்கூட இயலாத பெரும் விரதங்களை உடையதோ मुक्तिहेतु: (முக்திஹேது:) விடுதலைக்குக் காரணமோ सा (ஸா) அந்த परमा (பரமா) உத்க்ருஷ்டமான विद्या (வித்யா) வித்யையாக त्वं (த்வம்) நீ असि हि (அஸி ஹி) இருக்கிறாய் அன்றோ भगवती (பகவதீ) சர்வ வல்லமையுள்ள நீ अस्त-

समस्तदोषैः (அஸ்தஸமஸ்ததோஷை:) குற்றங்களனைத்தை யும் விலக்கி सुनियतेन्द्रियतत्त्वसारैः (ஸுநியதேந்த்ரியதத்வ ஸாரை:) புலன்களை நன்கு அடக்கி உண்மைப் பொரு ளின் சாரமுணர்ந்து मोक्षार्थिभिः (மோக்ஷார்த்திபி:) விடு தலையை வேண்டும் मुनिभिः (முனிபி:) முனிவர்களால் अभ्यस्यसे (அப்யஸ்யஸே) அப்யசிக்கப்படுகின்றாய்.

முக்திக்குக் காரணமான உனது வித்யை உன் உருவமே. கடும் விரதங்கள் கொண்ட அவ்வித்யை முக்திப்பேறில் ஆசைகொண்டு குற்றங்கள் களைந்து, புலன்கள் அடக்கி உண்மைப் பொருளின் சாரமுண ரும் முனிவர்கள் பழகவே தகுதி.

தாத்பர்யம்:

मोक्ष, मुक्ति (மோக்ஷ முக்தி) என்ற இப்பதங்கள் எளிதில் அனைவருக்கும் புரியும். ஆயினும் அவைகளை விடுதலை என்று மொழிபெயர்த்திருப்பது உண்மைப் பொருளை விளக்கவே. மோக்ஷம் என்பது ஏதோ ஒரு லோகமல்ல. இறந்த பிறகு புண்ணியம் செய்தவர் கள் போகுமிடம் மோக்ஷமென நினைப்பது தவறு. உட லின் கட்டுக்கடங்காத செயல்களிலிருந்தும், உள் ளத்தே எழும் உணர்ச்சிகளிலிருந்தும், மனதின் ஓயாத நினைப்பிலிருந்தும், சிறிது சிறிதாகப் படிப் படியாக விடுபட்டு, ஜீவன் அத்யாத்ம நிலைகளுக்குச் செல்வதையே மோக்ஷமென்பார்கள். ஜீவித்திருக் கும்போதே விடுதலை பெற்று ஜீவன்முக்தனாக வாழ லாம் என்பதை உணர்த்தவே अत्र ब्रह्म समश्नुते (அத்ரப்ரஹ்ம ஸமச்நுதே) இங்கு ப்ரம்மத்தை

அடைகின்முன் अमृत इह भवति (அம்ருத இஹ பவதி) இங்கு அமரனுகின்முன் என்று ஆங்காங்கே ச்ருதிகள் கூறுகின்றன. இவ்வாறு விடுதலை ஏற்படுவதற்குப் பெரும் அறிவு வேண்டும்.

இந்த அறிவு தான் विद्या (வித்யா) என்று சொல்லப்பட்டிருக்கின்றது. எல்லா அறிவைக் காட்டிலும் மேலானது என்பதற்காக परमा (பரமா) என்று குறித்தனர். எந்த அறிவில் உலகிலுள்ள வித்யைகளனைத்தும் அடக்கமோ, எந்த அறிவு பரமனைப் பற்றிய பூரண அறிவோ அதைத்தான் இங்கே परमा विद्या (பரமா வித்யா) என்றனர். இந்த வித்யையை ஸ்ரீவித்யை என்று கூறுவர். இந்தப் பெரும் அறிவுக்குக் கொண்டு செல்லும் மந்த்ரம், யந்த்ரம், பாவனை, உபாசனை முறை இவையெல்லாம் வித்யையின் அங்கங்களாதலால் அவைகளெல்லாம் ஈச்வரியின் ரூபங்கள் என்றும் அவைகளைப் பொதுவாக ஸ்ரீவித்யை என்றும் கூறுவார்கள். இந்த அங்கங்களாலேயே வித்யையின் பரமதத்துவத்தை உணர்ந்து அதன் சாரத்தை கிரகிக்க முடிகின்றது. பிறகு தினவாழ்விலும் உண்மைத் தத்துவத்தின் சாரம் பிரதிபலிக்குமாறு வித்யையைப் பழக முடிகின்றது. இதைத்தான் तत्त्वसारैः अभ्यस्यसे (தத்வஸாரை: அப்யஸ்யஸே) என்றனர்.

முக்தி என்முல் என்னவென்று விளக்கினேம். அம்மாதிரியான முக்தியில் அடங்காத ஆர்வம் கொண்டு இந்த வித்யையைப் பழகவேண்டும். வித்யை मुक्तिहेतुः (முக்திஹேது:) முக்திக்குக் காரணமாதலின்

முக்தியை வேண்டியே இதை அப்யசிக்கவேண்டும். சுகம், துக்கம், விருப்பு, வெறுப்பு முதலிய த்வந்த்வங்களிலிருந்து விடுபட்டு, மரிக்கும் தன்மையிலிருந்து முக்தி பெற்று, தெய்விக உணர்வில், தெய்விக ஆனந்தத்தில் திளைத்து, தெய்விக இருப்பில் நிலைபெற வேண்டும் என்ற அவா உடையோருக்கே இவ் வித்யை பயன்படும். இதை உணர்த்தவே मोक्षार्थिभिः (மோக்ஷார்த்திபி:) என்று சொல்லியிருக்கின்றது. மேலும் குற்றம், குறைபாடு, அஞான இருள் அனைத்தையும் விலக்கி, தெய்வ ஒளிக்கு இடமளிக்க வேண்டும். கடவுள் உள்ளே குடிகொள்ளவேண்டி அங்கிருக்கும் குப்பைகளை அப்புறப்படுத்த வேண்டும். தெய்வதாரை மேலிருந்து விழுந்து நிரம்பவேண்டி இந்தப் பாத்திரத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். குற்றங்களையும் குறைபாடுகளையும் அறிந்து நீக்காவிடில் தெய்வ ஒளி அருகே அணுகாது; வித்யை சித்திக்காது. அதனுல்தான் अस्तसमस्तदोषैः (அஸ்தஸமஸ்ததோஷை:) என்று கூறப்பட்டது.

வித்யையைப் பழகும் வழிகள் வாம மார்கம் தக்ஷிண மார்கம் என்று இரண்டு என்பார்கள். பண்டைய நாட்களில் இவ்வாறு பிரித்தபோது ஆனந்த வழி என்றும் அறிவு வழி என்றும் குறிக்கவே பிரித்தனர். அதாவது, மனிதனின் இயற்கை, அறிவினுல் சிறிது சிறிதாக முக்தி (விடுதலை) பெறுதல்; இதுதான் தக்ஷிண மார்கம். வாம மார்கம் என்பது இயற்கையின் நியதிகளுக்கு சந்தோஷத்துடன் உட்பட்டு

முக்தியை அடைவது. பின்னாளில் இந்த உண்மைப் பொருள் மறைந்து போய் அனாசாரங்கள் ஏற்பட்டு வழிகளுக்கே அப்க்யாதி ஏற்பட்டுவிட்டது. வாம மார்கத்தின் உண்மைத் தத்துவத்தை உணர வேண்டும்.

சாதனைக்கு தைரியமும் உற்சாகமும் மிக அவசியம். மனோபலம் வேண்டும். பலஹீனர்களால் அடைய முடியாது नायमात्मा बलहीनेन लभ्यः (நாயமாத்மா பலஹீநேன லப்ய:) என்று ச்ருதி கூறும். தீரர்கள் தான் பரமனின் காரணத்தை அறிகின்றார்கள் तस्य धीराः परिजानन्ति योनिम् (தஸ்ய தீரா: பரிஜானந்தி யோநிம்) என்று வேதம் அறிவுறுத்தியது. வேதத்தில் தீரர்கள் என்று குறிப்பிட்ட பொருளுக்கிணங்க தந்த்ரங்கள் வீரர்கள் என்று உபயோகித்தன. வீராசாரம் கடும் விரதங்கள் கொண்டது. கத்தி முனையில் நடப்பது போன்றது. பேரின்பத்திற்கான வழிகளை சிற்றின்பத்திற்கு உபயோகித்தால் அடியோடு அழிந்து நாசமாவார்கள் சாதகர்கள். ஆதலால்தான் வித்யையை अविचिन्त्यमहाव्रता (அவிசிந்த்யமஹாவ்ரதா) என்றனர்.

தவிர, வாமமார்கத்தை சரியாகப் புரிந்துகொள்ளாததற்குக் காரணம் சங்கேத பதங்களை சங்கேதங்கள் என்று உணராமல் அவைகளின் சாதாரணப் பொருளை கிரகித்துக்கொண்டதே. உதாரணமாக, मधु (மது) என்றால் சாராயம் என்று கிரகித்துக்கொள்ளாமல் ஆனந்தம் என்று அதன் மறைபொருளை உணரவேண்டும். சாதகன் மதுவுட்கொள்ளவேண்டும்

என்றால் என்ன என்று இப்போது விளங்கும். இதே தவறை வேதரிக்குகளைப் படித்துணரும் போதும் செய்கின்றனர். ரிஷிகள் சோமபானம் செய்தனர் என்றால் தெய்வக் களிப்பைப் பருகினர் என்றறியாமல் வேறுவிதமாக எண்ணிக்கொள்கின்றனர். ஆராய்ந்து பார்த்தால், தந்த்ரங்கள் இவ்வாறு சங்கேதங்களை உபயோகிக்க வேதத்தினிடமிருந்தே கற்றுக்கொண்டன என்பது விளங்கும்.

இவ்வாறு சங்கேதங்களின் உண்மைப் பொருள் விளங்கி, தத்துவத்தின் சாராம்சமுணர்ந்து, சாதனையை சிற்றின்பத்திற்காக உபயோகியாமல் புலன்களை அடக்கி அப்யசிக்கவேண்டும் என்பதற்காக सुनियतेन्द्रियतत्त्वसारैः (ஸுநியதேந்த்ரிய தத்வஸாரை:) என்று ரத்னச் சுருக்கமாக சுலோகத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

நாதோபாஸனை

शब्दात्मिका सुविमलर्ग्यजुषां निधान-
मुद्गीथरम्यपदपाठवतां च साम्नाम् ।
देवि त्रयी भगवती भवभावनाय
वार्ता च सर्वजगतां परमार्तिहन्त्री ॥ ८ ॥

சப்தாத்மிகா ஸுவிமலர்க்யஜுஷாம் நிதானம்
உத்கீதரம்யபதபாடவதாம் ச ஸாம்நாம் ।
தேவி த்ரயீ பகவதீ பவபாவநாய
வார்த்தா ச ஸர்வஜகதாம் பரமார்த்திஹந்த்ரீ ॥ 8 ॥

देवि (தேவி) ஹே தேவி भगवती (பகவதி) சர்வவல்லமையுள்ள நீ शब्दात्मिका (சப்தாத்மிகா) சப்த ஸ்வரூபம் सुविमल- ऋक्-यजुषां (ஸுவிமல-ரிக்-யஜுஷாம்) மிகவும் பரிசுத்தமான ரிக், யஜுர் என்ற வேதங்களுக்கும் उद्गीथरम्यपदपाठवतां (உத்கீதரம்யபதபாடவதாம்) ப்ரணவ மந்திரத்தால் அழகிய பதப்பிரிவுகளை உடைய साम्नां (ஸாம்நாம்) ஸாமவேதத்திற்கும் निधानं (நிதானம்) புதையல் त्रयी இந்த மூன்று வேதங்களாயிருப்பவள். सर्वजगतां (ஸர்வஜகதாம்) அகில உலகின் परमार्तिहन्त्री (பரமார்த்திஹந்த்ரீ) பெரும் இன்னல்களைத் துலைக்கும் நீ भवभावनाय (பவபாவநாய) வாழ்வு நடப்பதற்காக वार्ता च (வார்த்தா ச) பேச்சு வார்த்தையுமாவாய்.

நாதப்ரம்மமாகிய நீ ரிக் யஜுர் ஸாமம் என்ற மூன்று வேதங்களுக்குள்ளே கிடைக்கும் புதையல். சப்த உருக்கொண்ட நீ அருளாவேச வாக்குகளில் நிறைந்திருப்பதுபோல் சாதாரண மனிதர் வாழ்வின் பேச்சு வார்த்தைகளிலும் நிறைந்துள்ளாய்.

தாத்பர்யம்:

சிருஷ்டிக்கு முன்னால் முதன் முதலில் ஒன்று ஜடம்போல் இருந்தது என்றும் அதை ஓர் சக்தி தூண்டிற்று என்றும் கூறினோம். இந்தத் தூண்டுதலால் ஓர் சலனம் ஏற்பட்டது. இந்த சலனமே சப்த உருக்கொண்டு சிருஷ்டிக்குக் காரணமாகியது என்பர். தண்ணீரில் ஓர் சிறிய கல்லைப் போட்டால் சுற்றிலும் அலைகள் எழும்பி, எழும்பி விரிந்துகொண்டே

போவதுபோல், இந்த சலனத்தால் ஏற்படும் சப்த அலைகள் சுற்றிலும் பரவிக்கொண்டே போகின்றன. இதற்கு ஓர் முடிவு கிடையாது. இவ்வாறு சிருஷ்டிக்குக் காரணமான ஒலியை நாதப்ரம்மம் என்றும் அக்ஷரம், அழியாப் பொருள் என்றும் அழைப்பார். பின்னுளில் சப்தம் பாஷைகளாகப் பரிணமித்தபோது எழுத்துக்களை அக்ஷரங்கள் என்றே வழங்கினர். சிருஷ்டிக்குக் காரணம் ப்ரக்ருதி என்ற சக்தி என்று முன்பு கூறினேம். இந்த ச்லோகத்திலிருந்து சப்த உருக்கொண்ட சக்தி, நாதப்ரம்ம ரூபிணிதான் சிருஷ்டிக்குக் காரணம் என்று தெரிகின்றது.

சப்தம் என்பது அக்ஷரம், அழியாப் பொருள். அது சக்தியின் உருவம் என்று வேத ரிஷிகள் அனுபவத்தில் கண்டனர். "அங்கிரஸ் ரிஷிகள் தங்களது வாக்கால் குகைப் பாறைகளை உடைத்தனர், உடைத்து விருத்திரன் என்ற இருளால் மூடியிருந்த ஞான ஒளிகளை திரும்பப் பெற்றனர்" என்று ஆங்காங்கே வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. மந்த்ரங்களால் ஹ்ருதய குகையைப் பெயர்த்து அதற்குள் மறைந்திருக்கும் தெய்வ ஒளியை அடையமுடியும் என்று உணர்ந்து, தந்த்ரங்கள் மந்த்ரங்களை உலகிலுள்ள எல்லாவற்றைக் காட்டிலும் மேலானதாகவும் ரகசியமாயும் கருதின. ஓர் விதையிலிருந்து மரம் முளைப்பதுபோல் இந்த அக்ஷரப் பொருளிலிருந்தே உலகம் தோன்றியது என்று தெளிந்து, பீஜாக்ஷரங்களை மந்த்ரங்களின் ஜீவநாடியாக்கின. மேலும் சப்தத்தை

பரா, பச்யந்தீ, மத்யமா, வைகரீ என்று நான்காகப் பிரித்துக் கூறின. தேவி இந்த நான்கு விதமாகவும் இருக்கின்ருள்.

परा प्रत्यक्चितीरूपा पश्यन्ती परदेवता ।
मध्यमा वैखरीरूपा........

பரா ப்ரத்யக்சிதிரூபா பச்யந்தீ பரதேவதா ।
மத்யமா வைகரீரூபா......

என்று ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாமம் கூறும்.

ஏதாவது ஒரு வார்த்தையைச் சொல்லவேண்டும் என்ருல் அதைப்பற்றி எண்ணவேண்டியிருக்கின்றது. அது அகக்கண்ணிற்குப் புலப்படவேண்டியிருக்கின்றது. பிறகு அது பாஷையாக மாற்றப்பட்டு வெளியில் உச்சரிக்கப்படவேண்டியிருக்கிறது. சப்தத்தை மனதால் எண்ணுவதற்குக்கூட முன்னுல் இருக்கும் நிலையை பரா என்பார்கள். அகக் கண்ணிற்குத் தெரியும்போது பச்யந்தீ எனவும் நடு நிலையில் மத்யமா என்றும் வார்த்தையாக தோற்றத்துடன் வெளியே வரும்போது வைகரீ என்றும் குறிப்பார்கள்.

ரிஷிகள் மனதால் எண்ணி வேதத்தை எழுதினுர்கள் அல்ல. பரா பச்யந்தீ இந்த நிலைகளில் நின்ற அவர்களுக்கு வேதம் அகக்கண்ணிற்குப் புலப்பட்டது. உண்மை காண்போர், சத்தியம் கேட்போர் कवयः सत्यश्रुतः (கவய: ஸத்யச்ருத:) என்று வேதம் கூறும். ஆதலால்தான் வேதம் அபௌருஷேயம் என்கிறேம்.

அதனாலேயே மிகவும் பரிசுத்தமானது सुविमल (ஸுவிமல) என்று ச்லோகத்தில் சொல்லப்பட்டது. வேத ரிக்குகளில் தேவியின் பச்யந்தீ உருவம் புதையல்போல் மறைந்து கிடக்கின்றது. பூமி புதையலை தன்னுள்ளே வைத்துக் காப்பதுபோல் வேதங்கள் ஈச்வரியின் ரூபத்தை தம்முள்ளே வைத்துக் காக்கின்றன चक्षुष्मन्तोऽनुपश्यन्ति (சக்ஷுஷ்மந்தோ நுபச்யந்தி) என்றபடி கண்ணுள்ளவர்கள் கண்டு அறிகின்றனர்.

उद्गीथः (உத்கீத:) என்பது ஸாமவேதத்தில் முக்கியமானதொரு பாகம். அல்லது उद्गीथः प्रणवो मन्त्रः सर्वव्यापी निरञ्जनः (உத்கீத: ப்ரணவோ மந்த்ர: ஸர்வ வ்யாபீ நிரஞ்ஜன:) என்று சொல்லியிருப்பதால் उद्गीथः (உத்கீத:) என்றால் ப்ரணவ மந்த்ரம் என்று அறியவும். இந்த அர்த்தத்தை ஒட்டியே उद्गीथरम्यपदपाठवतां (உத்கீதரம்யபதபாடவதாம்) என்பதற்குப் பொருள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ओमिति सामानि गायन्ति (ஓமிதி ஸாமாநி காயந்தி) என்று தைத்திரீயமும் கூறும். விரிவாக அறிய வேண்டுவோர் சாந்தோக்ய உபநிஷத்தைப் பார்க்க.

தேவியைப் பரா பச்யந்தீ என்று கூறினோம். அவளே மத்யமா வைகரீ என்பதைக் குறிக்கவே அவள் தினவாழ்வில் மனிதர்களிடையே நிலவும் பேச்சு வார்த்தையாயிருக்கின்றாள் என்று கூறப்பட்டது. தேவர்களுக்குப் பிடித்த அருளாவேச வாக்குகளாக இருப்பதுபோலவே மனிதர்களுக்குகந்த உலகத்திய பேச்சாக இருக்கின்றாள். இந்த அபிப்பிரா

யத்தையே தேவீ ஸூக்தம் अहमेव स्वयमिदं वदामि जुष्टं देवेभिरुत मानुषेभिः (அஹமேவ ஸ்வயமிதம் வதாமி ஜுஷ்டம் தேவேபிருத மாநுஷேபி:) என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ச்லோகத்தில் மிகவும் உயரிய தத்துவம் விளக்கப்பட்டது. சாதகன் வேதங்கள் ஸ்ம்ருதிகள் சாஸ்த்ரங்கள் இவைகள்தான் ஈச்வரியின் ஸ்வரூபங்கள் என்று நின்றுவிடாமல் சாதாரண உலகத்திய பேச்சு, இரைச்சல், சத்தம் எல்லாம் அவளது உருவங்கள் என்பதையும் அறியவேண்டும். இவ்வாறு உலகத்திலுள்ள சப்தமனைத்தும் மஹாஸரஸ்வதியின் ஸ்வரூபம் எனத் தெளிந்து அந்த அனுபவம் சாதகனுக்கு சதா இருக்குமாகில் அவனது பேச்சு எல்லாம் மந்த்ரமாகவே ஆகின்றன. அவன் உண்மையாக நாதோபாஸனை செய்கின்றான்.

நான்கு மஹாசக்திகள்

मेधासि देवि विदिताखिलशास्त्रसारा
दुर्गासि दुर्गभवसागरनौरसङ्गा ।
श्रीः कैटभारिहृदयैककृताधिवासा
गौरी त्वमेव शशिमौलिकृतप्रतिष्ठा ॥ ९ ॥

மேதாஸி தேவி விதிதாகிலசாஸ்த்ரஸாரா
துர்காஸி துர்கபவஸாகரநௌரஸங்கா ।
ஸ்ரீ: கைடபாரிஹ்ருதயைககருதாதிவாஸா
கௌரீ த்வமேவ சசிமௌலிக்ருதப்ரதிஷ்டா ॥ 9 ॥

देवि (தேவி) ஹே தேவீ! त्वमेव (த்வமேவ) நீயே शशि-मौलिकृतप्रतिष्ठा (சசிமௌலிக்ருதப்ரதிஷ்டா) மதியைத் தலையிலணிந்த மகாதேவன் நிலை நிறுத்திய गौरी கௌரீ. कैटभारिहृदयैककृताधिवासा (கைடபாரிஹ்ருதயைக க்ருதாதிவாஸா) கைடபனின் சத்ருவாம் விஷ்ணுவின் ஹ்ருதயத்தில் ஏகபோகமாய் குடிபுகுந்த श्रीः (ஸ்ரீ:) லக்ஷ்மி. विदिताखिलशास्त्रसारा (விதிதாகிலசாஸ்த்ரஸாரா) அகில சாத்திரங்களின் சாரமுணர்ந்த मेधासि (மேதாஸி கலைமகளாகிறாய் दुर्गभवसागरनौः (துர்கபவஸாகரநௌ:) கடக்க முடியாத சம்சாரக் கடலுக்கு மரக்கலமான दुर्गा (துர்கா) துர்கையாகிற நீ असङ्गा असि (அஸங்கா அஸி) ஒன்றிலும் சேர்ந்துகொள்ளாமலிருக்கிறாய்.

முடியில் மதி பூண்ட மஹாதேவன் தனது பாதியில் வைத்த மஹாகாளி நீ. மாதவனின் மார்பகத்தே மகிழும் மஹாலக்ஷ்மி நீ. சாஸ்திரங்களின் சாரமுணர்ந்த சரஸ்வதி நீ. இந்த உருவங்களுக்கு மேற்பட்டு ஒன்றிலும் சேர்ந்துகொள்ளாமல் பவக் கடலுக்கு மரக்கலமாய் நிற்கும் மஹேச்வரியும் நீயே.

தாத்பர்யம்:

இந்த ச்லோகத்தில் சிருஷ்டியில் பிரகாசிக்கும் தேவியின் நான்கு ரூபங்களைப் பற்றிக் கூறப்பட்டது. சிருஷ்டி ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களாலானது என்று கூறினோம். இந்த முக்குணங்களுக்கேற்ப ஈச்வரியும் மூன்று மூர்த்திகளை எடுத்துக்கொள்ளுகின்றாள். கருப்பு, சிவப்பு, வெளுப்பு என்று நிறங்கள் பூண்டு, தான் ஒருவளாயினும் சிருஷ்டியின்

வேலைக்காக மஹாகாளி, மஹாலக்ஷ்மி, மஹாஸரஸ்வதி என்று உருவங்கள் கொள்கிறாள். இதையே अजामेकां लोहितशुक्लकृष्णां (அஜாமேகாம் லோஹிதசுக்லக்ருஷ்ணாம்) என்று ச்ருதி கூறும். இந்த மூன்று வர்ணங்கள் கொண்டு முக்குண ரூபமான தேவியைத்தான்

कार्त्तिकीचन्द्रवदना कालिन्दीवीचिदोर्लता ।
अरुणाम्भोजचरणा जयति त्रिरुचिः शिवा ॥

கார்த்திகீசந்த்ரவதனா காலிந்தீவீசிதோர்லதா ।
அருணாம்போஜசரணா ஜயதி த்ரிருசி: சிவா ॥

"கார்த்திகை மாதத்து சந்திரன் போன்ற முகத்தினள், யமுனை நதியின் அலைகள்போன்ற கொடிக்கைகளுடையாள். செந்தாமரைத் திருவடியாள், அவள் முந்நிறம் பூண்டு திகழ்கின்றாள்" என்று உமாஸஹஸ்ரத்தில் வாஸிஷ்ட கணபதி முனிவர் வர்ணித்தார். இந்த மூன்று மூர்த்திகளை தேவதைகளாகக் கொண்டு மூன்று சரித்திரங்களால் ஆனதுதான் தேவீ மாஹாத்மியம் என்ற எழுநூறு ச்லோகங்கள். இந்த மந்த்ர சாஸ்திரத்தின் ரகஸ்யத்தைத்தான் இந்த ச்லோகம் கூறுகின்றது. ஏனெனில் தேவீ மாஹாத்மியத்தின் மந்த்ரமான சண்டீ நவாக்ஷரிக்கு தேவதைகள் இம் மூன்று மூர்த்திகளே. மந்த்ரமும் இம்மூன்று தேவதைகளின் பீஜாக்ஷரங்களாலேயே ஆனது.

இம்மூன்று உருவங்கள்தான் தேவீ மாஹாத்மியத்தில் சொல்லப்படுகின்றன என்பது பலரின் கொள்கை. நான்காவது உருவமும் கூறப்படுகின்றது

என்பதற்கு இந்த ச்லோகமே அத்தாட்சி. அன்னையின் அதி ரகஸ்யமான இந்த நான்கு உருவங்களையும் யோகக் கண்களால் பார்த்து நமக்கு தத்துவத்தைப் புகட்டியவர் பகவான் ஸ்ரீ அரவிந்தர் அவர்களே யாவர். 'நூதன' ரிஷியான அவர்களது தர்சனமும் புதிதே. இதையே ப்ரம்மஸ்ரீ கபாலி சாஸ்திரிகள் தமது மாத்ருதத்வ ப்ரகாசத்தில்

भव्यं यदाह भगवान् भुवनसवित्रीरहस्यमतिगहनम् ।
नव्यं तदिदं दर्शनमुर्वीकल्याणभाजनं गेयम् ॥

பவ்யம் யதாஹ பகவான் புவனஸவித்ரீரஹஸ்யமதிகஹனம் ।
நவ்யம் ததிதம் தர்சனமுர்வீகல்யாணபாஜனம் கேயம் ॥

என்றார்கள்.

शशिमौलिकृतप्रतिष्ठा गौरी (சசிமௌலிக்ருத ப்ரதிஷ்டா கௌரீ) என்பதால் மஹாகாளி குறிக்கப்படுகின்றாள்.

ஸ்ரீ கபாலி சாஸ்திரிகள் தமது மாத்ருதத்வ ப்ரகாசத்தில் இவளை வர்ணிக்கையில்

झञ्झामारुतचण्डकृत्यविभवे तस्याः स्फुटो भ्राजते
सर्वो दैवतभाव उत्प्लुतगतिः सा ह्याशुतायै स्थिता ।
सद्यः सिद्धिकृते समर्थविषये क्षिप्रं समक्षं परा-
घातायाप्रतिरुद्धविक्रमधृते धुर्यप्रहाराय च ॥

ஜஞ்ஜாமாருதசண்டக்ருத்யவிபவே தஸ்யா:ஸ்புடோ ப்ராஜதே
ஸர்வோ தைவதபாவ உத்ப்லுதகதி: ஸா ஹ்யாசுதாயை ஸ்திதா
ஸத்ய: ஸித்திக்ருதே ஸமர்த்தவிஷயே க்ஷிப்ரம் ஸமக்ஷம் பரா-
காதாயாப்ரதிருத்தவிக்ரமத்ருதே துர்யப்ரஹாராய ச ॥

என்று கூறுகிறார்கள்.

சக்தியும் பலமும்தான் அவளது குணங்கள். இடையூறுகளைப் பெயர்த்து முட்டுக்கட்டைகளைத் தகர்த்து புயல்போல் பாய்ந்து, ஊழிக்கனல் என எங்கும் பரவி, பாபத்தைப் பொசுக்கி, சாதகனது பிடரியைப் பிடித்து உந்தி அவனை லக்ஷ்யத்தை அடையச் செய்வாள். அவனிடம் சோம்பேறித்தனத்தையும் தெய்வக் கருமத்தில் அசட்டையையும் பொறுக்க மாட்டாள். சம்மட்டி கொண்டு அடிப்பதுபோல் முரட்டுத்தனமாகவாவது அவனது கோணல்களை நிமிர்த்தி சரியாக்குவாள். அசுரர்களுக்கு அவளைக் கண்டால் குலைநடுக்கம். சாதனைக்கு குறுக்கே நிற்கும் அசுரசக்திகளனைத்தையும் அவள் பூண்டோடு பிடுங்கி எறிந்துவிடுவாள். அண்டமெல்லாம் கிடுகிடுக்க பயத்தைப் பரப்புவாள் அவள். ஆயினும் அவளது தாயின் உள்ளத்தே அன்பு வெள்ளம் கரை புரண்டு ஓடும். அசுரர்களை அடிக்கும் அவளது கை அன்பர்களை அணைக்கும். அவளிடம் அன்புகொண்டோருக்கு பயமென்பதே கிடையாது. அவர்கள் சாதிக்கமுடியாதது உலகில் ஒன்றுமில்லை. தீரர்களும் வீரர்களும் பலசாலிகளும் அவளிடம் அடங்காக் காதல் கொள்வார்கள், அவளது அடிகள் அவர்களது திமிரை யடக்கி அவர்களை நல்வழிப் படுத்தவே என்று உணர்வார்கள். அரிய பெரிய காரியங்களைச் சாதிக்க வேண்டுமாயின் அவளையே நாடுவார்கள். பலவீனர்கள்தான் அவளைக் கண்டு பயந்து அவளது அருகே அணுகார்கள். அவளிருப்பதால்தான் நூற்றுக்

கணக்கான வருஷங்கள் கழித்து ஆகக்கூடியது ஒரு க்ஷணத்தில் நிறைவேறி விடுகின்றது.

कैटभारिहृदयैककृताधिवासा श्री: (கைடபாரிஹ்ருதயைக க்ருதாதிவாஸா ஸ்ரீ:) என்பது மஹாலக்ஷ்மியைக் குறிக்கின்றது. நிலைத்து நிற்கும் பேரழகு, ஒருவருக்கும் புரியாதவாறு எங்குமிருக்கும் ஒருவிதக் கவர்ச்சி, ரகசிய மகிழ்ச்சி, அனைத்தையும் வசீகரித்து தெய்வ சுருதியுடன் இழைந்து லயப்படுத்துதல்—இவையெல்லாம் மஹாலக்ஷ்மியின் ஆற்றல்கள். மனிதர் மனங்களை மயக்கி மோகினி என நிற்பாள் அவள். அவளை விரும்பாதார் யாருமிலர்.

அவளது மோகன சக்தி எத்தகையது என்று மாத்ருதத்வ ப்ரகாசத்தில் விளக்குகின்றார் ஸ்ரீ சாஸ்திரிகள்.

एतद्बलवन्मोहनमन्त्रोऽप्रतिहतविश्वाकृष्टिसमर्थः ।
वस्तूनि च भूतानि च शक्तीराकृष्य दृढं धारयमाणः ॥

எதத்பலவந்மோஹநமந்த்ரோப்ரதிஹதவிஸ்வாக்ருஷ்டிஸமர்த்த:
வஸ்தூநி ச பூதாநி ச சக்தீராக்ருஷ்ய த்ருடம் தாரயமாண: ॥

அவளது அருகே இருந்து அடங்கா ஆனந்தமடையத் தவம் புரிவோர் பலர். அவளது மோகன வலையில் மாட்டிக்கொள்ள வேண்டி ஏங்குவோர் பலர். அவளது கடைக்கண் வீழ்ந்தால் மனிதனது ஆத்மா அப்படியே வசிகரிக்கப்பட்டு விடுகின்றது. அவள்

எழில் மிகு புன்னகையை வீசினால் ஆனந்தக் கடலில் திளைக்கின்றனர் மாந்தர். அவளது திருவடி பட்ட இடங்களில் எல்லாம் பேரின்ப ஊற்று சுரக்கின்றது. ஆனால் இந்த ஜகன்மோகினியை ஓரிடத்தில் நிலை பெற்று இருக்கச்செய்வது என்பது மிக சிரமம். எங்கும் எழில், சுத்தம்—வாக்கிலும் மனதிலும் சுத்தம், அழகு, அவைகளது இணைப்பு; செய்யும் செய்கைகள் எல்லாவற்றிலும் அந்தரங்க சுத்தி, தெய்வ எழிலின் பிரதிபலிப்பு; வாழ்விலும் சுற்றுப்புறத்திலும் சுத்தம், அழகு, தெய்வத்துடன் இணைப்பு; இவையனைத்தையும் கேட்கின்றாள் மஹாலக்ஷ்மி. ஏதாவது ஒன்று குறைந்தாலும் அவள் உடனே வேறு இடத்திற்கு ஓடிவிடுகின்றாள். அசுத்தம், குப்பை, தரித்திரம் இவைகள் பக்கம் அவள் திரும்பிப் பார்ப்பதே இல்லை. தரித்திரபுத்தி, அல்பமான நடத்தை, கெட்ட எண்ணங்கள், இவைகள் உள்ள மனிதரிடம் அவளுக்கு அடங்கா அருவருப்பு ஏற்பட்டு ஓடிவிடுகின்றாள். பொய், பொறாமை சூது வாது, சண்டை சச்சரவு, கருமித்தனம், சுயநலம் இவைகள் குடிகொண்ட வீடங்களில் அவள் குடிகொள்வதில்லை. அன்பும் அழகுமே அவளை அழைக்கின்றன. அவளது அருள் ஏற்பட்டால் வாழ்வே ஓர் ஆனந்தக் கவிதையாகின்றது.

चेतोहरोऽप्यतिजुगुप्सितो भवेत्
सर्वोऽपि जीवकलया यया विना ।
सा वर्ण्यतां कथमपारचारुता-
पीयूषसिन्धुरखिलेन्द्रसुन्दरी ॥

சேதோஹரோப்யதிஜுகுப்ஸிதோ பவேத்
ஸர்வோபி ஜீவகலயா யயா வினா ।
ஸா வர்ண்யதாம் கதமபாரசாருதா
பீயூஷஸிந்துரகிலேந்த்ரஸுந்தரீ ॥

என்று உமாஸஹஸ்ரத்தில் வாஸிஷ்ட கணபதி முனிவர் கூறியபடி

"எவளது ஜீவகலையில்லாவிடில் உள்ளத்தை வசீகரிக்கும் வஸ்துக்களும் அருவருப்பை அளிக்குமோ அந்தக் கரைகாணு எழிலமுதுக் கடலெனத் திகழும் அகிலேசனின் அழகியை வர்ணிப்பது எங்ஙனம்?"

विदिताखिलशास्त्रसारा मेधा (விதிதாகிலசாஸ்த்ரஸாரா மேதா) என்பது மஹாஸரஸ்வதியைச் சொல்லுகின்றது. சகல சாஸ்திரங்களின் சாரமுணர்ந்தவள்; அவைகளின் நுட்பங்களையும் நுணுக்கங்களையும் ஒழுங்கு முறையையும் அறவே அறிந்தவள். அவள் தான் தேவியின் செயலாற்றல். எண்ணிய கருமங்களை நன்கு முடிப்பது, மாசு மறுவின்றி பிழையேதுமின்றி சகலத்தையும் செய்வது, சிறிய அல்ப வேலைகளிலும் பூரணத்திற்காகப் பாடுபடுவது, சலியாத உழைப்பு, எந்தக் காரியத்திலும் திறமை, ஆற்றல் இவையெல்லாம் அவளது குணங்கள். ஓர் சிற்பி வெறும் கல்லை உயிர்ச் சித்திரமாக்கவேண்டி செதுக்கிச் சமைத்து அச்சித்திரத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் அழகு மிளிரச் செய்து அதன் ஒவ்வொரு மயிர்க்காலிலும் ஜீவசக்தியும் பரிபூரணமும் புகுமாறு செய்ய முயற்

சிப்பதுபோல், மஹாஸரஸ்வதி சாதகனைச் செதுக்கிப் பக்குவப்படுத்தி, அவனது குற்றம் குறைபாடுகளைக் களைந்து, அவனது உடலிலுள்ள ஒவ்வொரு அணுவும் பரிபூர்ணமாகுமாறு உழைக்கின்றாள். அவள் மெதுவாகத்தான் உழைப்பாள். சாதகனுக்குச் சலிப்பு ஏற்படலாம்; அவளுக்கு ஒருநாளும் ஏற்படுவதில்லை. அவள் காரியம் செய்து முடித்தால் அப்பழுக்கின்றி, தெய்வ ஒளி வீசி நிற்கும். அவள் மிகப் பொறுமைசாலி. தள்ள வேண்டியதைத் தள்ளி, அந்தந்த உரிய இடத்தில் ஒழுங்காக வைத்து, ஒன்றையும் மறக்காமல் சகலத்தையும் குற்றமற்று, அழகு நிறைந்து, சுத்தமாய், பூரணமாய் இருக்கச் செய்வாள். எல்லா சக்திகளையும்விட அவளே மனிதனிடம் மிகப் பொறுமை உள்ளவள். மனிதனது குறைபாடுகளைக் கண்டு அவள் முகம் சுளிக்கமாட்டாள். அந்தரங்க சுத்தி நேர்மை இவற்றுடன் முன்னேறிச் செல்லும் மனிதருக்கு அவள் என்றும் கைகொடுப்பாள்.

अनादरादुद्यममान्द्यतो वा जुगुप्सतेऽम्बाऽनवधानतायाः ।
सरस्वतीमातुरिमे हि दोषाः स्वभावबाह्याः सुतरां विगर्ह्याः ॥

அனாதராதுத்யமமாந்த்யதோ வா ஜுகுப்ஸதேம்பாநவதாநதாயா:
ஸரஸ்வதீமாதுரிமே ஹி தோஷா: ஸ்வபாவபாஹ்யா: ஸுதராம் விகர்ஹ்யா: ॥

என்று மாத்ருதத்வ ப்ரகாசத்தில் கூறியபடி அரைகுறை வேலை, அலட்சியம், சோம்பேறித்தனம்,

அவசரம், ஒழுங்கீனம், கருவிகளையும் புத்திசாலித் தனத்தையும் தவருக கெட்ட வழியில் உபயோகிப்பது இவையெல்லாம் அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காது. அவளது முறுவல் ஒளியால் நம்முள்ளே இருட்டைப் போக்கி நாம் தத்தித் தத்தி நடந்தாலும் நமது கையைப் பிடித்துக்கொண்டு தைரிய மொழிகள் கூறி நம்மை ஓர் பரிபூரணத்திற்கு நடத்திச் செல்கிருள். அன்னையின் மற்ற சக்திகளெல்லாம் தங்களது பூரணத்திற்கு அவளையே நாடுகின்றன.

அன்னையின் இம்மூன்று சக்திகள் அனைவருக்கும் தெரியுமாறு முக்குண உருக்கொண்டு உலகில் செயல் புரிகின்றன. இவைகளுக்கு மேலாய் ஒன்றிலும் சேராமல், தனித்து நின்று, சிருஷ்டிக் கடலைத் தாண்டும் மரக்கலமென ஒரு சக்தி இருக்கின்றது दुर्भवसागरनौः असङ्गा (துர்கபவஸாகரநௌ: அஸங்கா) என்று அந்த சக்தியைத்தான் குறித்தனர். அவளே மஹேச்வரி, ராஜராஜேச்வரி. எண்ணும் மனதிற்கும் இச்சைக்கும் மேல் அவள் அமர்ந்து உலகத்திய போக்குகளையும் அன்னையின் சக்திகளின் ஆற்றல்களையும், இயற்கை நியதிகளையும் கவனித்தபடி இருக்கின்ருள். மேலே கதவைத் திறந்து அறிவுப் பொக்கிஷங்களைக் காட்டும் மஹாசக்தி அவள். என்றும் சாந்தமாய், அமைதியாய், கம்பீரமாய் சகலத்தையும் அறிந்துணர்ந்து பரம அறிவு வடிவமாய் இருப்பவளவள். அவளது சக்தியும் பலமும், அறிவும் ஆற்றலும், சாந்தமும் எதையும் ஆட்கொள்ள முடியும். அவளுக்கு யாரிடமும் விருப்பு, வெறுப்பு என்பது கிடையாது; பக்ஷபாதமற்று அவர

வர்களது இயல்புக்கேற்ப அவரவர்களை நடத்திச் செல்கின்ருள். கண்ணுள்ளவர்களுக்கு அரிய காட்சிகளைக் காண்பிக்கின்ருள்.

मूढाश्च ये जडधियः कुधियश्च ये वा
तांस्तांस्तदान्ध्यमनुसृत्य नयत्यभिज्ञा ।

மூடாச்ச யே ஜடதிய: குதியச்ச யே வா
தாம்ஸ்தாம்ஸ்ததாந்த்யமனுஸ்ருத்ய நயத்யபிக்ஞா ।

என்று மாத்ருதத்வத்தில் கூறியபடி முட்டாள்களை அவர்களது கண்மூடித்தனத்தின்படியே நடத்திச் செல்கின்ருள் ஏனெனில் அவள் असङ्गा (அஸங்கா) ஒன்றிலும் பற்று அற்றவள். ஆயினும் அவளது கருணையை அளவிட முடியாது. அவள் அனைவருக்கும் அன்னை. அசுரனையும் ராக்ஷஸனையும் பிசாசனையும் கூட தனது புதல்வர்கள் என்றே நடத்துகின்ருள். அவள் தள்ளி ஒதுக்கிவைத்தாலும், 'பிற்பாடு பார்த்துக்கொள்ளலாம், இப்போது வேளை வரவில்லை' என்றே செய்கின்ருள். அவள் கொடுக்கும் தண்டனையும் அவளது அருளே. ஏனெனில் சத்தியமும் ஞானமுமே அவளுக்கு முக்கியம். அவைகளுக்கு நம்மை அழைத்துச் செல்கின்ருள்.

இந்த மாபெரும் சக்திகள் நான்கும் இல்லாமல் உலகமே கிடையாது. இந்த உண்மையை அறிந்தே பண்டைய நாட்களில் வர்ணுசிரமம் என்ற கோட்பாடை ஏற்படுத்தினர். மஹேச்வரியின் அபார அறிவு, பற்றற்ற தன்மை, சமநோக்கு உள்ளவனை

பிராமணன் என்றனர். மஹாகாளியின் வீரமும் பலமும் ரக்ஷண சக்தியும் கெடுதியை அழித்து நல்லதைக் காக்கும் குணமும் எவனுக்கு இயல்பாக ஏற்பட்டதோ அவனை க்ஷத்திரியன் என்றனர். மஹாலக்ஷ்மியின் சம்பத்தும் ஐச்வர்யமும் வைச்யனுக்கு லக்ஷ்யமாயின. மஹாஸரஸ்வதியின் வேலைத்திறன், செயல் நுட்பம் எல்லாம் சூத்திரனைச் சார்ந்தன. புருஷ ஸூக்தத்தில் பரம புருஷனின் அவயவங்களாகவே இப்பிரிவுகளைக் கூறினர். உடலின் அவயவங்களுக்குள்ளே ஏற்றத் தாழ்வு உண்டா? இந்த நான்கும் சிறப்புற்றிருந்தால்தான் சமுதாயம் சீர் வளர்ந்து வளம் மிகுந்து இருக்கும். ஆனால் இந்த உண்மையான பெரிய தத்துவத்தை உள்ளடக்கிய சாதுர்வர்ண்யம் அழிந்து போய் வர்ணஸங்கரம் ஏற்பட்டு எல்லாம் குழப்பமாயும் குளறுபடியாயும் முடிந்துவிட்டது. உண்மை க்ஷத்திரியனும் வைச்யனும் மறைந்துவிட்டனர். பிராமணனும் சூத்திரனுமே இப்போது மிஞ்சி இருக்கின்றனர். பிராமணனும் வெளித தோற்றத்திலேதான் பிராமணனாயிருக்கின்றான். அவனும் அறிந்து வருகின்றான். ஆத்மீக சக்தி, ப்ரஹ்மத்தின் தேஜஸ் இவை எவனிடம் நிரம்பி உலகில் எங்கும் வழிந்தோடும்படி இருந்ததோ அவனை பிராமணன் என்றனர். பூணூல் தரிக்கும் பிராமணன் அது ஏதோ பழக்கம் என்று அதை அறியாமல் அது நிஜமாகவே ब्रह्मतेजोऽभिवृद्ध्यर्थं (ப்ரஹ்மதேஜோபிவ்ருத்யர்த்தம்) ப்ரஹ்ம தேஜஸ் வளருவதற்காக என்று அறிந்து தன் வாழ்க்கையை அந்த உன்னத லக்ஷ்யத்திற்கு அர்ப்பணம் செய்தால்

தான் அவனுக்கு கதிமோக்ஷமுண்டு. ஆத்மீக சக்தியும் ப்ரம்ம தேஜஸும் உலகிற்கு முக்கியம். அது இல்லாவிடில் அரக்கர்களின் ராஜ்ஜியமாகும். உலகிற்கே ஆத்மீக சக்தியையும் ப்ரம்ம தேஜஸ்ஸையும் அளிப்பதற்காக இருக்கும் இந்த நம் பாரத பூமியில் பிராமணன் என்ற இப்போதிருக்கும் ஜாதி அழிந்தாலும் ப்ராம்மண்யம் அழியவே அழியாது.

விந்தைக்குரிய விஷயங்கள்

ईषत्सहासममलं परिपूर्णचन्द्र-
बिम्बानुकारि कनकोत्तमकान्तिकान्तम् ।
अत्यद्भुतं प्रहृतमात्तरुषा तथापि
वक्त्रं विलोक्य सहसा महिषासुरेण ॥ १० ॥

ஈஷத்ஸஹாஸமமலம் பரிபூர்ணசந்த்ர
பிம்பானுகாரி கனகோத்தமகாந்திகாந்தம் ।
அத்யத்புதம் ப்ரஹ்ருதமாத்தருஷா ததாபி
வக்த்ரம் விலோக்ய ஸஹஸா மஹிஷாஸுரேண ॥ 10 ॥

ईषत् (ஈஷத்) சிறிது सहासं (ஸஹாஸம்) சிரிப்புடன் கூடியது अमलं (அமலம்) அப்பழுக்கற்றது परिपूर्णचन्द्रबिम्बानुकारि (பரிபூர்ணசந்த்ரபிம்பானுகாரி) முழு மதி மண்டலத்தை ஒத்தது. कनकोत्तमकान्तिकान्तं (கனகோத்தமகாந்திகாந்தம்) நல்ல பொன்னின் பிரகாசம் பெற்று மனோஹரமானது वक्त्रं (வக்த்ரம்) உனது முகம் तथापि

(ததாபி) ஆயினும் आत्तरुषा (ஆத்தருஷா) கோபங் கொண்ட महिषासुरेण (மஹிஷாஸுரேண) மஹிஷாசுர னால் विलोक्य (விலோக்ய) பார்த்து सहसा (ஸஹஸா) உடனே प्रहृतं (ப்ரஹ்ருதம்) அடிக்கப்பட்டது अत्यद्भुतं (அத்யத்புதம்) மிகவும் ஆச்சரியமே.

பொன்னென மின்னும் மேனி, புன்முறுவல் மிளிரும் மதிவதனம், கள்ளங்கபடற்ற முகம். ஆயினும் மஹிஷாசுரன் வெகுண்டெழுந்து அடித்தான் என் பது விந்தையே.

தாத்பர்யம் :

ஈச்வரியின் முகம் பத்தரைமாற்றுத் தங்கம் போல் ஒளி வீசுகின்றது; சதா முகத்தில் புன்முறுவல் தாண்டவமாடுகின்றது. ச்ருதிகளில் பரதத்துவத் தைப் பற்றிச் சொல்லும்போது தங்க மீசையுடை யோன், தங்கக் கொம்புகளுடையோன், தங்கக் கருவு டையோன், हिरण्यश्मश्रुः, हिरण्यशृङ्गः, हिरण्यगर्भः (ஹிரண்ய ச்மச்ரு:, ஹிரண்யச்ருங்க:, ஹிரண்யகர்ப:) என்று பலவாறு சொல்லியிருக்கின்றது. அதையொட்டியே தேவியைப் பொன்மேனியளாகத் துதிக்கின்றனர். कां सोस्मितां हिरण्यप्राकारां (காம் ஸோஸ்மிதாம் ஹிரண்ய ப்ராகாராம்) என்று ஸ்ரீஸூக்தம் கூறுவதைக் காண்க.

பௌர்ணமி தினத்து சந்திரனைப் பழிக்கும் முக முடையவள் தேவி. சந்திரனுக்காகிலும் களங்க முண்டு. இவள் முகம் அப்பழுக்கற்றது अमलं (அமலம்). சந்திரனைக் கண்டால் எப்படி மாந்தர் மனம்

குளிர்ந்து மகிழ்வெய்துமோ அவ்வாறே தேவியின் முகத்தைப் பார்த்தவுடன் உள்ளம் பூரித்து ஆனந்த மடையும் பக்தர்களின் கூட்டம். அம்ருதத்திற்கு இருப்பிடம் சந்திரன் என்பார்கள். தேவியின் முக தர்சனமே அமரத்தன்மையை அளித்துவிடும்.

பொன்னையும் சந்திரனையும் விரும்பாதார் யார்? இவைகளை மிஞ்சிய தேவியின் முகத்தைப் பார்த்த பிறகும் மஹிஷாசுரனுக்கு எப்படி தேவியை எதிர்த்து யுத்தம் செய்யத் தோன்றிற்று என்று தேவர்கள் ஆச்சரியப்படுகின்றனர். கல்லையும் கரையவைக்கும் அன்பு பொங்கும் தேவியின் வதனம்; ஏனோ அது மஹிஷனின் மனதைத் திருப்பவில்லை. மஹிஷாசுரனிடம் எவ்வளவு அசுரகுணம் நிரம்பி இருந்தது என்பதையே இது காட்டுகின்றது.

दृष्ट्वा तु देवि कुपितं भ्रुकुटीकराल-

मुद्यच्छशाङ्कसदृशच्छवि यन्न सद्यः ।

प्राणान्मुमोच महिषस्तदतीव चित्रं

कैर्जीव्यते हि कुपितान्तकदर्शनेन ॥ ११ ॥

த்ருஷ்ட்வா து தேவி குபிதம் ப்ருகுடீகராலம்

உத்யச்சசாங்கஸத்ருசச்சவி யந்ந ஸத்ய: ।

ப்ராணாந்முமோச மஹிஷஸ்தததீவ சித்ரம்

கைர்ஜீவ்யதே ஹி குபிதாந்தகதர்சனேன ॥ 11 ॥

देवि (தேவி) ஹே தேவீ! कुपितं (குபிதம்) சினங் கொண்டு भ्रुकुटीकरालं (ப்ருகுடீகராலம்) புருவ நெறிப் பால் பயங்கரமானதும் उद्यत् शशाङ्कसदृशच्छवि (உத்யத் சசாங்கஸத்ருசச்சவி) உதயமாகும் சந்திரன் போன்ற நிறமுடையதுமான यत् (யத்) எந்த உன் முகத்தை दृष्ट्वा तु (த்ருஷ்ட்வா து) பார்த்தும் महिषः (மஹிஷ:) மஹிஷாசுரன் सद्यः (ஸத்ய:) உடனே प्राणान् (ப்ராணான்) பிராணங்களை न मुमोच (ந முமோச) விடவில்லை என்ற तत् (தத்) அது अतीव (அதீவ) மிகவும் चित्रं (சித்ரம்) விந் தையே हि (ஹி) ஏனெனில் कुपितान्तकदर्शनेन (குபிதாந்தக தர்சநேன) சினங்கொண்ட காலனைப் பார்த்த பிறகு कैः (கை:) எவரால் जीव्यते (ஜீவ்யதே) உயிருட னிருக்கப்படுகின்றது?

புருவங்களை நெறித்து சினங்கொண்டு சிவந்த உனது முகம் பார்க்கவே பயங்கரமானது. அதைப் பார்த்தும் மஹிஷன் உயிரிழக்காதது ஆச்சரியமே. கோபங்கொண்ட யமனைப் பார்த்துவிட்டு ஜீவிப்பா ருண்டா?

தாத்பர்யம்:

தேவியின் அன்பு ததும்பும் முகம் மஹிஷனை வசீ கரிக்கவில்லை. அதை எதிர்த்து நின்றான். தேவிக்கு அடங்காக் கோபம் உண்டாயிற்று. பூர்ண சந்திரன் போலிருந்த முகம் இப்பொழுதுதான் உதயமாகும் பூர்ண சந்திரன்போல் சிவந்து காணப்பட்டது. சினத் தால் முகம் சிவந்ததைக் குறிக்கவே उद्यत् शशाङ्कसदृशच्छवि (உத்யத் சசாங்க சத்ருசச்சவி) என்று உபயோகிக்கப்

பட்டுள்ளது. अमल (அமலம்) என்று சொன்ன முகமும் இப்போது கோபத்தால் களங்கமுற்றது. முயல் மாதிரித் தோன்றும் அடையாளமுடைய சசாங்கனுக்கு (शश முயல் अङ्क அடையாளம்) அதாவது சந்திரனுக்கு சமமாய் இருந்தது என்பதைக் குறிக்கவே शशाङ्क (சசாங்க) என்று உபயோகித்தனர்.

சினத்தால் சிவப்பேறி, புருவங்கள் நெறிய பார்க்கவே பயங்கரமாயிருந்தது தேவியின் முகம். தேவியின் மலர்ந்த முகம் பார்த்த மாத்திரத்தில் அமரத்தன்மையை அளிக்கும் என்று சொன்னோம். தேவியின் கோபங்கொண்ட முகம் பார்த்தமாத்திரத்திலேயே சகலத்தையும் அழித்துவிடும். மஹிஷன் அதைப் பார்த்து உடனே உயிரிழக்காமல் இருந்தது ஆச்சரியமே. அது தேவியின் திருவிளையாடலே. அவளது திருவுளத்தால்தான் மஹிஷன் ஜீவிக்க முடிந்தது. அவனுடன் சண்டை செய்தே அவனை வீழ்த்தவேண்டும் என்று அவள் சங்கல்பம் செய்திருக்கும்போது அவன் எப்படி உடனே உயிரிழப்பான்? ஏனெனில் யமனைப் பார்த்தவர்கள் யாராவது ஜீவித்திருக்கிறார்களா? அதுவும் கோபங்கொண்ட யமனைக் கண்ட பிறகு மீளமுடியுமா? தேவியின் திருவருளே மஹிஷனை அழிக்காமல் விட்டது.

ப்ராணன்கள் ஐந்து என்பார்கள். ஆகையால் 'ப்ராண' என்ற சப்தத்தை வடமொழியில் எப்போதும் பன்மையிலே உபயோகிப்பார்கள். ப்ராண அபான, ஸமான, உதான, வ்யான இவைகளே ஐந்து

ப்ராணன்கள். ஹ்ருதயத்தில் ப்ராணனும் ஆசனத்தில் அபானமும் தொப்புள் புறத்தே ஸமானமும் கழுத்துப் பிரதேசத்தில் உதானமும், இருக்கின்றன என்பார்கள். உடல் முழுதும் வியாபித்து நிற்பதே வ்யானன் என்ற வாயு.

தேவியின் அருள் வேண்டல்

देवि प्रसीद परमा भवती भवाय
सद्यो विनाशयसि कोपवती कुलानि ।
विज्ञातमेतदधुनैव यदस्तमेत-
न्नीतं बलं सुविपुलं महिषासुरस्य ॥ १२ ॥

தேவி ப்ரஸீத பரமா பவதீ பவாய
ஸத்யோ விநாசயஸி கோபவதீ குலாநி ।
விக்ஞாதமேததது னைவ யதஸ்தமேதத்
நீதம் பலம் ஸுவிபுலம் மஹிஷாஸுரஸ்ய ॥ 12 ॥

देवि (தேவி) தேவீ! परमा (பரமா) உத்க்ருஷ்டமான भवती (பவதீ) நீ भवाय (பவாய) வாழ்வின் பொருட்டு प्रसीद (ப்ரஸீத) ப்ரஸன்னமாகு (அருள்புரி) कोपवती (கோபவதீ) கோபம் கொண்டவளாயின் सद्यः (ஸத்ய:) உடனே कुलानि (குலாநி) குலங்களை विनाशयसि (விநாசயஸி) நாசம் செய்து விடுகின்றாய். एतत् (ஏதத்) இது अधुनैव (அதுனைவ) இப்போதே विज्ञातं (விக்ஞாதம்) அறியப்பட்டது. यत् (யத்) ஏனெனில் महिषासुरस्य (மஹிஷாஸுரஸ்ய) மஹிஷாசுரனின் सुविपुलं (ஸுவிபுலம்)

பிரும்மாண்டமான ஏதத் (ஏதத்) இந்த ப³லம் (பலம்) சைனியம் அஸ்தம் நீதம் (அஸ்தம் நீதம்) மறையும்படி செய்யப்பட்டது.

இந்த மஹிஷாசுரனின் பெருஞ்சேனை நிர்மூல மானதைப் பார்த்து இப்போது ஒன்று தெரிந்து கொண்டோம். நீ கோபம் கொண்டால் குலங்களை யெல்லாம் அழித்துவிடுவாய். நாங்கள் வாழவேண்டி எங்களுக்கு அருள்புரி.

தாத்பர்யம் :

இங்கே தேவியின் மஹாகாளி ஸ்வரூபம் துதிக் கப்படுகின்றது. அவளுக்கு கோபம் வருமாயின் சூரு வளி என அடித்து குலங்களை வாரிக்கொண்டு போய் விடுவாள். இந்த மஹிஷாசுரனின் சேனையை ஒருக் கணத்தில் நிர்மூலமாக்கிவிட்டாள் அவள். அவளை எதிர்த்து நிற்கும் அசுர சக்திகள் அனைத்தையும் தவிடுபொடியாக்கிவிடுவாள்.

மஹிஷாசுரன் என்பது தமோகுணத்தைக் குறிக் கின்றது. அஞானம், ஜடத்தன்மை முதலியவற்றை அவைகளின் பரிவாரங்களோடு சேர்த்து துலைத்துவிடு கின்றாள் ஈச்வரி. நம் வாழ்க்கையில் ஜடத்தன்மையை ஒழிக்கும்போது நமது குலத்தையே அவள் ஒழித்து விடாமல் இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கப்படு கின்றது. வாழ்வு நடப்பதற்காக அவள் பிரசன்னமா யிருக்க வேண்டும் என்று கோரப்படுகின்றது. அவள் நல்ல நடத்தையுடையோருக்கு சுபங்களைச் செய்வாள். பாபிகளின் குலங்களை அறவே அழித்து விடுவாள்,

अदुष्टचरितेभ्यः शुभान्यभिदधाना ।
कुलानि मलिनानां हतानि विदधाना ॥

அதுஷ்டசரிதேப்ய: சுபாந்யபிததாநா ।
குலாநி மலிநாநாம் ஹதாநி விததாநா ॥

என்று கணபதி முனிவரும் உமாஸஹஸ்ரத்தில் கூறியுள்ளார்.

நமது கெட்ட குணங்களை மன்னித்து அவள் நம் குலத்தைக் கொல்லாமல் காக்கவேண்டும். இதே அபிப்பிராயமே ச்ருதிகளில் காணப்படுகின்றது. पिता नोऽसि, पिता नो बोधि, मा मा हिंसीः (பிதா நோஸி, பிதா நோ போதி, மா மா ஹிம்ஸீ:) "எங்களது தந்தை நீ. எங்களது தந்தை என்பதை அறிவுறுத்துவதும் நீயே. வேண்டாம், எங்களை ஹிம்ஸிக்க வேண்டாம்". ஸ்ரீ ருத்ரமும்

मा नो महान्तमुत मा नो अर्भकं
मा न उक्षन्तमुत मा न उक्षितम् ।
मा नो वधीः पितरं मोत मातरं
प्रिया मा नस्तनुवो रुद्र रीरिषः ॥

மா நோ மஹாந்தமுத மா நோ அர்பகம்
மா ந உக்ஷந்தமுத மா ந உக்ஷிதம் ।
மா நோ வதீ: பிதரம் மோத மாதரம்
ப்ரியா மா நஸ்தநுவோ ருத்ர ரீரிஷ: ॥

"ஓ ருத்ரனே! எங்களது பெரியோர்களைக் கொல்லாதே. எங்களது குழந்தையையும் வேண்டாம். எங்கள் குலத்தை விருத்தி செய்யும் புத்திரனையும்

கருவிலிருக்கும் மகவையும் கொல்லாதே. எங்களது தாய் தந்தையரையும் வேண்டாம். எங்களுக்குப் பிரியமான உடல்களை ஹிம்ஸிக்காதே" என்று கூறுகின்றது.

தவிர, இந்த ச்லோகத்திற்கு உட்பொருள் விளங்க குல் (குலம்) என்பதின் உட்பொருளை கவனிக்கவேண்டும். மனிதரது சூக்ஷ்ம உடலில் ஆறு ஆதார சக்ரங்கள் இருப்பதாயும் இந்த சக்ரங்களைச் சேர்க்கும் மார்கம் ஸுஷும்னு என்றும் கூறுவார்கள். தந்த்ரத்தில் இந்த ஸுஷும்னு மார்கத்தை குலம் என்று அழைப்பார்கள். சரீரத்திலுள்ள ரகசிய சக்தி இந்த வழியில்தான் சஞ்சரிக்கின்ருள். இம்மாதிரி அவளது சஞ்சாரம் ஏற்படச் செய்வதை குலாசாரம் என்பார்கள். சாதகர்களை கௌலர்கள் என்று அழைப்பார்கள். தேவியை कौलमार्गतत्परसेविता (கௌலமார்கதத்பரஸேவிதா) என்று சொல்லுவார்கள். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமமும் தேவியை

कुलामृतैकरसिका कुलसङ्केतपालिनी ।
कुलाङ्गना कुलान्तस्था कौलिनी कुलयोगिनी ॥

குலாம்ருதைகரஸிகா குலஸங்கேதபாலிநீ ।
குலாங்கநா குலாந்தஸ்தா கௌலிநீ குலயோகிநீ ॥

" குல மார்கத்தில் ஏற்படும் அம்ருதத்தையே விரும்பி சுவைப்பவள் குலவழியில் ஒவ்வொரு ஆதாரத்திலும் தங்கிச் செல்லவேண்டும் என்ற சங்கேதத்தைக்

காத்து அதன்படி நடப்பவள், குலஸ்த்ரீ, குலத்தினுள்ளே இருப்பவள், கௌலர்களுடைய வஸ்து, குலத்தோடு இணைந்திருப்பவள்'' என்று கூறியிருக்கின்றது.

சாதனையில் தமஸ் என்ற மஹிஷாசுரனை மாத்திரமல்லாமல் இன்னும் அநேக அசுர சக்திகளைக் கொல்லவேண்டியிருக்கின்றது. அவ்வாறு குற்றங்களை ஒழிப்பதற்காக குலமார்கத்தில் தேவியை சஞ்சாரம் செய்யும் வண்ணம் சாதகன் அவனது தபஸ் சக்தியால் செய்யும்போது, சில வேளைகளில் பராசக்தியின் பிரவாக வேகம் தாங்காது ஸுஷும்ந மார்கமே சிர்குலையலாம். யோகம் செய்யும்போது விபத்துகள் ஏற்படுவதற்குக் காரணம் உடல் தெய்வ பிரவாகத்தைத் தாங்க சக்தியற்று இருப்பதே. ஆனல் தனது தவமுயற்சி என்று அகந்தை கொள்ளாமல் தன்னை முழுவதும் அவளுக்கு சமர்ப்பணம் செய்து அவள் குலத்தைக் காக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டால், அவள் மேலிருந்து கீழே பிரவகிக்கும் போதே குலத்தை பலமுள்ளதாகச் செய்து குறைகளை நீக்குகின்ருள். அவள் வேகத்தை சகிக்க வேண்டுமாயின் அவள் ப்ரசன்னமாயிருக்கவேண்டும்.

सरोजमतुदन्ती पिबाम्ब मकरन्दम् ।

ஸரோஜமதுதந்தீ பிபாம்ப மகரந்தம் ।

"கமலத்தைக் கசக்காமல் தேனைப்பருகு, தாயே" என்று கணபதிமுனிவரும் உமாஸஹஸ்ரத்தில் துதிக்கின்ருர். இங்கே கமலம் என்று ஆதார சக்ரங்களைக்

குறித்தனர். தேன் அம்ருத ரசத்தைக் குறிக்கின்றது. "குலமார்கத்தை சிரமப்படுத்தாமல் அதில் சஞ்சாரம் செய்து ஆனந்தம் அனுபவி" என்றே அதன்பொருள்.

சாதனை தேவியைக் குறித்தே செய்யப்படுகின்றது. அந்த சாதனையைச் செய்வது சாதகனல்ல; தேவியே அந்த சாதனையை நடத்திவைக்கின்ருள். சாதனையிலுள்ள இடையூறுகளை அவள்தான் நீக்க வேண்டும். அவளே அவளது சக்தியைத் தாங்க நமக்குப் போதிய பலம் அளிக்கவேண்டும். இந்தப் பெரிய தத்துவமே இந்த ச்லோகத்தில் கூறப்பட்டது

நான்குவித புருஷார்த்தங்கள்

ते संमता जनपदेषु धनानि तेषां
तेषां यशांसि न च सीदति धर्मवर्गः ।
धन्यास्त एव निभृतात्मजभृत्यदाराः
येषां सदाऽभ्युदयदा भवती प्रसन्ना ॥ १३ ॥

தே ஸம்மதா ஜநபதேஷு தநாநி தேஷாம்
தேஷாம் யசாம்ஸி ந ச ஸீததி தர்மவர்க:।
தந்யாஸ்த ஏவ நிப்ருதாத்மஜ ப்ருத்யதாரா:
யேஷாம் ஸதாப்யுதயதா பவதீ ப்ரஸந்நா ॥ 13 ॥

येषां (யேஷாம்) எவர்களுக்கு भवती (பவதீ) நீ प्रसन्ना (ப்ரஸன்ன) பிரசன்னமாயிருக்கின்ருயோ ते (தே) அவர்கள் जनपदेषु(ஜநபதேஷு) தேசங்களில் संमता: (ஸம்மதா:)

நன்கு கௌரவிக்கப்படுகின்றனர். तेषां(தேஷாம்) அவர்களுக்கே धनानि (தனானி) செல்வங்களும் यशांसि च (யசாம்ஸி ச) புகழ்களும். तेषां (தேஷாம்) அவர்களது धर्मवर्गः (தர்மவர்க:) தர்மங்கள் न सीदति (ந ஸீததி) கஷ்டப்படுவதில்லை निभृतात्मजभृत्यदाराः (நிப்ருதாத்மஜப்ருத்ய தாரா:) தனக்கடங்கிய புதல்வர்கள், சேவகர்கள் மனைவி இவைகளை உடைய ते एव (தே ஏவ) அவர்களே धन्याः (தந்யா:) புண்ணியசாலிகள். सदा (ஸதா) எப்போதும் अभ्युदयदा (அப்யுதயதா) (அவர்களுக்கு) ஐச்வர்யமளிக்கின்றாய்.

எவர்களுக்கு நீ தயை புரிகின்றாயோ அவர்களது தர்மம் சிறப்பாய் நடக்கின்றது. பொருளீட்டுதலும் பெயரும் புகழும் ஏராளமாய் ஏற்படுகின்றன. மனதிற்குகந்த மனைவி மக்கள் பெற்று இல்லற இன்பத்தை பூரணமாய் அனுபவிக்கின்றார்கள். எப்போதும் முக்தி என்ற ஐச்வர்யத்தை அவர்களுக்கு அளித்துக்கொண்டிருக்கிறாய்.

தாத்பர்யம் :

புருஷார்த்தங்கள் நான்கு என்பார்கள். புருஷார்த்தம் என்பதற்கு மனிதனுயிருப்பதின் பிரயோசனம் என்றே பொருள். இந்த நான்கு புருஷார்த்தங்களையும் புறக்கணித்து மனிதன் வாழ்ந்தால் அவனது வாழ்வே பிரயோசனமற்றதாகின்றது. தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று இப்புருஷார்த்தங்களைக் கூறினர். தமிழர் மரபில் இவைகளையே அறம் பொருள், இன்பம், வீடு என்று வழங்கினர். மோக்ஷம்

என்பதைப் பரமபுருஷார்த்தம் என்பார்கள். ஒரு வன் தனது வாழ்நாளில் இந்த நான்கு வாழ்க்கைப் பயன்களையும் அடைந்துவிட்டால் அவனே பரம புருஷனுகின்ருன் மனிதரது முயற்சி அனைத்தும் இந்தப் பயன்களில் சிறிதாயினும் அடைய வேண்டியே.

धर्मः (தர்ம:) என்பதை அறம் என்றனர். தர்மமும் தானமும் ஒன்றல்ல. “ஏழைகளுக்கு தர்மம் செய்ய வேண்டும்” என்று நடைமுறையில் வழங்கினுலும் தர்மம் என்பதின் உட்பொருள் தானமல்ல. யோகம் என்ற சொல் எப்படி அதன் உண்மைப்பொருளுக்கு மாருகவே பலவாறு உபயோகிக்கப் படுகின்றதோ அவ்வாறே தர்மம் என்ற பதமும் வழங்கி வருகின்றது. ஒரு பொருளின் இருப்பின் விதியையே அதன் தர்மம் என்பர். ஒரு ஸ்திரீ எப்படி இருக்க வேண்டும் என்பதை ஸ்திரீ தர்மம் உணர்த்தும். ஆனுல் கடமையும் தர்மமும் ஒன்றெனக்கொள்ளுதல் தவறு. ஒரு குடும்பம் இருப்பதின் விதியை குடும்ப தர்மம் என்போம். இவ்வாறே ஸமூகதர்மம், தேசதர்மம், லோகதர்மம் என்று படிப்படியாகப் போகும். இந்த தர்மக் கூட்டத்தைத்தான் ச்லோகத்தில் धर्मवर्गः (தர்மவர்க:) என்றனர். “ஒருவன் அவனது தர்மத்தை விடக் கூடாது. பரதர்மத்தைக் காட்டிலும் ஸ்வதர்மமே சிறந்தது” முதலிய வாக்கியங்களின் பொருள் இப்போது விளங்கும். ஒருவனது அத்யாத்ம நோக்குப் பண்படப் பண்பட அவனது தர்மம் அதாவது இருப்பின் நியதி விரிந்துகொண்டே

செல்கின்றது. இதனுலேயே க்ருஹஸ்த தர்மம், ஸன்யாஸ தர்மம் என்றெல்லாம் உபயோகித்தனர். தமிழிலும் இல்லறம், துறவறம் என்றனர். தர்மம் என்பதின் நோக்கு விரிந்தால், மனிதன் சிறிய தர்மத்தை விட்டுப் பெரிய தர்மத்திற்குச் செல்லுகிருன். மனிதனுக்கு சுயநலம் குறையக் குறைய குடும்ப தர்மத்தை விட சமூகதர்மம் பெரிதெனக் கருதுகிருன். சமூகதர்மமெனக் கருதாமல் தேசதர்மத்தைக் கருதுகிருன். கடைசியில் லோகதர்மம் முக்கியமெனக் கண்டு அதைக் கருதுகிருன்.

धर्मः (தர்ம:) என்பது இருப்பின் விதி என்றேும். உண்மையை நோக்கின், கடவுளின் இருப்புடன் இணைந்து இருப்பதே நமது தர்மம், இருப்பின் விதி. இதைத்தான் பரமதர்மம் என்றனர். இதுவே இந்த புருஷார்த்தத்தின் லக்ஷ்யம். இதற்காகவே தர்மம் என்று நமக்கு அப்பப்போது தோன்றியவற்றைக் கடைப்பிடித்து சிறிது சிறிதாக அவைகளை விட்டுக் கடைசியில் பரமனுடன் இணைந்திருப்பதே பெரும் தர்மம் எனத்தெளிந்து அந்த தர்மத்தைச் செய்யப் பாடுபடவேண்டும். இதைத்தான் பகவான் கீதையில்

सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज

ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ

“இந்த எல்லா தர்மங்களையும் விட்டு விட்டு என்னை ஒருவனையே சரண்புகு” என்று உபதேசித்தார்.

अर्थ (அர்த்தம்) என்ற இரண்டாவது புருஷார்த்தத்திற்கு பிரயோசனம் என்று பொருள். வாழ்க்கைக்குப் பிரயோசனமான பணம், பெயர், புகழ் அனைத்தையும் இது குறிக்கும். ச்லோகத்தில் संमताः, धनानि, यशांसि (ஸம்மதா: தநாநி யசாம்ஸி) என்ற பதங்களால் இந்த அர்த்தம் என்ற புருஷார்த்தத்தையே குறித்தனர். அர்த்தம் என்றால் பிரயோசனம் என்றோம். பொருளீட்டுவது, புகழ் அடைவது இவைகளே முடிவு என்று எண்ணாமல் வாழ்வின் லக்ஷ்யத்தை அடைய இவை பிரயோசனப்படுகின்றன, அவ்வளவே என்று அறியவேண்டும். இந்த உண்மை அறிவு ஏற்படுமாயின், இப்பொருளெல்லாம் பரம்பொருளே என்று விளங்கும். பரமார்த்தம் அதாவது பரம்பொருள்தான், இப்பொருள் என்ற புருஷார்த்தத்தின் லக்ஷ்யம். இதைத்தான் ஈசாவாஸ்ய உபநிஷத்

ईशावास्यमिदं सर्वं यत्किञ्च जगत्यां जगत् ।
तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्यस्विद्धनम् ॥

ஈசாவாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத் ।
தேன த்யக்தேந புஞ்ஜீதா மாக்ருத: கஸ்யஸ்வித்தனம் ॥

“இந்த ஜகத்தில் அசையும் சகலமும், எல்லாம் ஈசன் குடிகொள்ளவே. ஆதலால் துறந்த மனப்பான்மையுடன் அனுபவி. ஒருவரது செல்வத்திற்கும் பேராசைப்படாதே” என்று உபதேசித்தது.

அடுத்த புருஷார்த்தம் काम (காமம்) என்பது. மனதிற்குகந்த மனைவி மக்கள், பரிவாரங்கள், சுக போகங்கள் இவையனைத்தும் ஒருவனுக்கிருப்பின் அவனுக்கு இல்லற இன்பம் ஏற்படுகின்றது. இந்த புருஷார்த்தம் சித்திக்கின்றது. இதைத்தான் ச்லோ கத்தில் निभृतात्मजभृत्यदाराः (நிப்ருதாத்மஜப்ருத்யதாரா:) என்று குறித்தனர்.

இந்த புருஷார்த்தத்திற்காக சாஸ்திரமெழுதிய வர் வாத்ஸ்யாயனர் என்று ஒரு ரிஷி. கேவலம் காமம் ஒரு புருஷார்த்தமா, அதற்கு ஒரு சாஸ்திரமா, அதை எழுதியவர் ஒரு ரிஷியா என்று சிலர் வியப் படையக்கூடும்.

உண்மையை அறிந்தால் அவர்கள் வியப்படைய மாட்டார்கள். சிருஷ்டியின் இயல்பு தொடர்ச்சி; மேலும் மேலும் உண்டாக்கிக்கொண்டே செல்வது. இது நின்ருல் சிருஷ்டி தொடர்ந்து நடைபெருமல் நின்றுவிடும். சிருஷ்டியிலுள்ள பிராணிகளெல்லாம் இந்த சிருஷ்டியின் வேலையை மேற்கொண்டு மேலும் மேலும் உண்டாக்கிக்கொண்டே செல்கின்றன. இல் லறத்தை மேற்கொள்வது இதற்காகவே. சிருஷ்டி யின் வேலையாகிய சந்ததி விருத்திக்காகவே இல்லறம் நடத்தினுர்கள். புத்திரன் பிறந்தால் அதைப் பெரும் செல்வம் என்றே கருதி புத்திரப்பேறு என்றனர். ஏழு வருடம் தவம் கிடந்து பிறகு கணவனுடன் சேர்ந்து நல்மகவை ஈன்றெடுத்தனர். ஆதலால் இல்லறம் ஓர் புருஷார்த்தமாயிற்று. प्रजायै गृहमेधिनां

(ப்ரஜாயை க்ருஹமேதிநாம்) சந்ததிக்காகவே இல்லறம் புகுந்தனர் என்றார் காளிதாசர். உணர்ச்சி வசப் பட்டு புலன்களைத் திருப்தி செய்வதற்காக நடத்தும் இல்லறம் புருஷார்த்தமாகாது. ஆழ்ந்து நோக்கின் அர்த்தமும், காமமும், தர்மம் என்ற புருஷார்த்தத்திற் காகவே இருக்கவேண்டும். இதைத்தான் மகாகவி காளிதாசர் தனது ரகுவம்சத்தில் திலீபனை வர்ணிக் கையில்

अप्यर्थकामौ तस्यास्तां धर्मायैव मनीषिणः

அப்யர்த்தகாமௌ தஸ்யாஸ்தாம் தர்மாயைவ மநீஷிண:

"அந்த அறிவாளிக்கு அர்த்தமும் காமமும் தர்மத் திற்காகவே இருந்தன" என்றார்.

மேலும் சிருஷ்டியே ஈசனின் ஓர் இச்சை, காமனையிலிருந்து தோன்றியது. सोऽकामयत बहुस्यां प्रजायेयेति (ஸோகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி) என்று ச்ருதி கூறும். அன்பு, காதல் எல்லாம் அந்த முதல் காமத்திலிருந்தே தோன்றின. இந்த உண்மையை அறிந்தே நம் நாட்டில் சிற்பங்களிலும் காவியங்களி லும் பாட்டுகளிலும், ச்ருங்கார ரசத்தை மிகையாக வெளிப்படுத்தினர். ஏனெனில் அதுவே வாழ்வின் தத்துவம். கடவுள் வழிபாட்டிலும் மாதுரீ பாவம் என்று ச்ருங்காரத்தைக் கையாண்டனர். கடவுளே காதலன்; அக்காதலனிடமிருந்து பிரிவாற்றாமையால் ஜீவன் துடிக்கின்றது என்று கண்டனர். இந்த புருஷார்த்தத்தை இன்பம் என்று அழைத்தனர். नाल्पे सुखमस्ति (நால்பே ஸுகமஸ்தி) சிறிதில் சுகமில்லை

எனத் தெளிந்து சிற்றின்பத்திலிருந்து விடுபட்டு பேரின்பமடையப் பாடுபட்டனர். யாக்ஞவல்க்யர் கூறினர்: "ஒருவன் மனைவியை நேசித்தால் அவளை நேசிக்கவில்லை; அவளது ஆத்மாவை நேசிக்கின்றான். ஒருவன் மக்களை நேசித்தால் அவர்களை நேசிக்க வில்லை; அவர்களது ஆத்மாவையே நேசிக்கின்றான்." இவ்வாறு நாம் நேசிக்கும் பொருளிலெல்லாம் இருக் கும் பரம்பொருளை உணர்ந்து அந்த தெய்வக் காதல னுடன் பேரின்பம் அனுபவிப்பதே இப் புருஷார்த்தத் தின் லக்ஷ்யம்.

मोक्ष: மோக்ஷம் என்றால் விடுதலை என்று முன்பு கூறினோம். ஆதலால் மனிதன் முதல் மூன்று புருஷார்த்தங்களை அடைந்து, பிறகு இறந்தவுடன் மோக்ஷத்திற்குப் போகிறான் என்று நினைப்பது தவறு. விடுபட்டு, அதாவது அத்துடன் சேர்ந்துகொள்ளா மல் தர்மம், அர்த்தம், காமம் இவைகளை அனுபவித் தால் முக்தி என்ற புருஷார்த்தம் சித்திக்கின்றது. இந்த பரம புருஷார்த்தம் சித்தித்து விட்டால் மற்ற மூன்றும் எளிதில் கைகூடும். எப்படி அர்த்தமும் காமமும் தர்மத்திற்கு உட்பட வேண்டுமோ அவ் வாறே இம்மூன்றும் முக்திக்கு உட்பட வேண்டும். இதைத்தான் अभ्युदय (அப்யுதய) என்று ச்லோகத்தில் குறித்தனர். முக்தி என்ற பாவம் எப்போதும் இருக்க வேண்டும் என்பதற்காக सदा (ஸதா) என்று உப யோகித்தனர். அதாவது தனது நிலையில், வீடு என்று குறித்த புருஷார்த்தத்தில் இருந்து மற்ற மூன்றையும்

அடையவேண்டும். இதைத்தான் பரசுராம கல்ப சூத்திரத்தில் स्वविमर्शः पुरुषार्थः (ஸ்வவிமர்ச: புருஷார்த்த:) என்றனர். அப்போது ஜீவன்முக்தனாகின்றான்.

இவ்வாறு நான்கு புருஷார்த்தங்களும் தேவியின் அருள் இருந்தால் கைகூடுகின்றன.

धर्म्याणि देवि सकलानि सदैव कर्मा-
ण्यत्यादृतः प्रतिदिनं सुकृती करोति ।
स्वर्गं प्रयाति च ततो भवतीप्रसादात्
लोकत्रयेऽपि फलदा ननु देवि तेन ॥ १४ ॥

தர்ம்யாணி தேவி ஸகலாநி ஸதைவ கர்மாணி
அத்யாத்ருத: ப்ரதிதினம் ஸுக்ருதீ கரோதி ।
ஸ்வர்கம் ப்ரயாதி ச ததோ பவதீப்ரஸாதாத்
லோகத்ரயேபி பலதா நநு தேவி தேந ॥ 14 ॥

देवि (தேவி) ஹே தேவீ! भवतीप्रसादात् (பவதீப்ரஸாதாத்) உனது அருளால் सुकृती (ஸுக்ருதி) புண்ணியசாலி प्रतिदिनं (ப்ரதிதினம்) தினந்தோறும் अत्यादृतः (அத்யாத்ருத:) மிகுந்த சிரத்தையுடன் सकलानि (ஸகலாநி) எல்லா धर्म्याणि (தர்ம்யாணி) தர்மத்திற்கு ஒத்த कर्माणि (கர்மாணி) செயல்களையும் सदैव (ஸதைவ) எப்பொழுதும் करोति (கரோதி) செய்கின்றான். ततः (தத:) பிறகு स्वर्गं च

(ஸ்வர்கம் ச) ஸ்வர்கத்தையும் प्रयाति (ப்ரயாதி) அடைகின்றான் तेन (தேந) அதனால் लोकत्रयेऽपि (லோகத்ரயேபி) மூவ்வுலகிலும் फलदा ननु (பலதா நநு) பலனைத்தருபவள் அன்றோ.

மூவ்வுலகிலும் பலனைக் கொடுப்பவள் நீ. உனது அருள்பெற்ற புண்ணியசாலி தர்மத்திற்கு விரோதமில்லாமல் காரியங்கள் செய்து ஸ்வர்க்கத்தையுமடைகின்றான்.

தாத்பர்யம் :

உனது அருள் இருந்தால்தான் எல்லா செயல்களும் தர்மம் என்ற புருஷார்த்தத்திற்குக் கட்டுப்பட்டிருக்கும். அப்போது உனது அருளுக்குப் பாத்திரமான மனிதன் सुकृती (ஸுக்ருதி) நற்கருமங்கள் செய்யும் புண்ணியசாலியாகின்றான்.

தர்மத்தின் லக்ஷ்யம் கடவுளுடன் இணைந்து காரியங்களனைத்தையும் செய்வது என்றோம். தேவியின் அருள் பெற்றவன் அவ்வாறு பலனை எதிர்பாராமல் கருமங்களைச் செய்து அவைகளைப் பரமனுக்கு அர்ப்பணம் செய்து இம்மையிலும் மறுமையிலும் சுகத்தை அடைகின்றான். அவன் பலனை எதிர்பாராது கருமத்தைச் செய்வதால் தேவி அவனுக்கு அவன் நற்கருமத்தின் பலனைக் கொடுக்கத் தவறுவதில்லை. ஏனெனில் மூவ்வுலகிலும் பலனைக் கொடுக்கும் சக்தி தேவியைத் தவிர வேறு எவரிடமுமில்லை. மும்மூர்த்திகளும் தேவியின் வரப்ரஸாதத்திற்கே தவங்கிடக்கின்றனர். இதையே

........दातुं फलमपि च वान्छासमधिकं
शरण्ये लोकानां तव हि चरणावेव निपुणौ ॥

......தாதும் பலமபி ச வாஞ்சாஸமதிகம்
சரண்யே லோகானும் தவ ஹி சரணுவேவ நிபுணௌ ॥

என்று ஆசார்ய சங்கரர் ஸௌந்தர்யலஹரியில் கூறியிருப்பதைக் காண்க. அங்கேயே முதல் ச்லோகத்தில் प्रणन्तुं स्तोतुं वा कथमकृतपुण्यः प्रभवति (ப்ரணந்தும் ஸ்தோதும் வா கதமக்ருதபுண்ய: ப்ரபவதி) "உன்னை வணங்கித் துதிக்க புண்ணியம் செய்யாதவனுக்கு எப்படி முடியும்?" என்று கூறிய அபிப்பிராயத்தை யொட்டியே இங்கு सुकृती (ஸுக்ருதீ) என்று சொல்லப்பட்டது.

ஸ்மரிப்பதின் பயன்

दुर्गे स्मृता हरसि भीतिमशेषजन्तोः
स्वस्थैः स्मृता मतिमतीव शुभां ददासि ।
दारिद्र्यदुःखभयहारिणि का त्वदन्या
सर्वोपकारकरणाय सदार्द्रचित्ता ॥ १५ ॥

துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதிமசேஷஜந்தோ:
ஸ்வஸ்தை: ஸ்ம்ருதா மதிமதீவ சுபாம் ததாஸி ।
தாரித்ர்யதுக்கபயஹாரிணி கா த்வதந்யா
ஸர்வோபகாரகரணுய ஸதார்த்ரசித்தா ॥ 15 ॥

दुर्गे (துர்கே) சங்கடத்தில் स्मृता (ஸ்ம்ருதா) நினைக்கப் பட்டால் अशेषजन्तो: (அசேஷஜந்தோ:) சகல பிராணி களின் भीतिं (பீதிம்) பயத்தை हरसि (ஹரஸி) போக்க டிக்கின்ருய். स्वस्थै: (ஸ்வஸ்தை:) தன் நிலையிலுள்ள வர்களால் स्मृता (ஸ்ம்ருதா) நினைக்கப்பட்டால் अतीव (அதீவ) மிகவும் शुभां (சுபாம்) நன்மையைப் பயக்கும் मतिं (மதிம்) புத்தியை ददासि (ததாஸி) கொடுக்கின்ருய். त्वदन्या (த்வதந்யா) உன்னைத் தவிர வேறு का (கா) யார்? दारिद्र्यदु:खभयहारिणि (தாரித்ர்யதுக்கபயஹாரிணி) வறுமை, கஷ்டம், பயம் இவற்றைப் போக்குபவளே! सर्वोपकार-करणाय (ஸர்வோபகாரகரணுய) அனைவருக்கும் உபகா ரம் செய்ய सदा (ஸதா) எப்போதும் आर्द्रचित्ता (ஆர்த்ர சித்தா) இளகிய மனமுடையவள் (நீ).

உன்னையல்லால் வேறு யார் கதி? இளகிய மன முடைய நீ அனைவருக்கும் சதா உபகாரம் செய்கின் ருய். சங்கடத்தில் உன்னை நினைத்தால் உடனே பய மெல்லாம் பறந்துபோம். நல்ல நிலையிலிருக்கும் போது உன்னை நினைத்தால் நல்ல புத்தியை அளிக் கின்ருய்.

தாத்பர்யம்:

பயம், நம்பிக்கை இந்த இரண்டுமே உலகை ஆட்டி வைக்கின்றன. இன்னும் யோசிக்கின், பயமே உலகை நடத்துகின்றது எனலாம். भीषास्मात् वात: पवते (பீஷாஸ்மாத் வாத: பவதே) அவனிடம் பயந்தே காற்று அடிக்கின்றது भीषोदेति सूर्य: (பீஷோதேதி ஸூர்ய:) பயத்தாலேயே சூரியன் உதிக்கின்ருன்

என்றெல்லாம் ச்ருதி கூறும். பிராணிகள் காலம் என்ற வரம்புக்குள் இருப்பதாலும், வருங்காலத்தைப்பற்றி ஒன்றும் தெரியாததாலும், பயம் என்பது ஏற்படுகின்றது. நாளை என்ன ஆகுமோ, இனிமேல் என்ன நடக்குமோ என்று பயம் என்பது ஏற்படுகின்றது.

தெய்வத்தினிடம் நம்பிக்கை ஏற்படின் இந்த நிகழ்காலத்தையும் இறந்த காலத்தையும் கவனித்த தெய்வமே வருங்காலத்தையும் பார்த்துக்கொள்ளும் என்ற அறிவு ஏற்படும். பயம் என்பது பறந்து போம். தெய்வம் நமது பயத்தை ஒழித்து அபயம் (பயமில்லாமை) அளிக்கின்றது. நமக்கு அபயம் அளித்து நாம் எதைத் தேர்ந்து எடுக்கின்றோமோ, நாம் எதை வரிக்கின்றோமோ அந்த வரத்தைக் கொடுக்கின்றது. இந்த தத்துவத்தை உணர்த்தவே, விக்ரகங்களை அபயமுத்திரை வரமுத்திரை இவைகளுடன் பிரதிஷ்டை செய்தனர்.

பயத்துடன் துக்கம் என்பதும் கூடவே வருகின்றது. அநித்தியமான பொருள்களில் மிகுந்த பற்று வைத்து, அப்பொருள்கள் அழியும்போது ஏற்படும் உணர்ச்சியே துக்கம் எனப்படும். காலநியதியைப் புரிந்துகொள்ளாததால் எப்படி பயம் ஏற்படுகின்றதோ அவ்வாறே துக்கமும் ஏற்படுகின்றது. அழியாப் பொருளில் ஆசைவைத்தால் துக்கமே ஏற்படாது, இன்பமே விளையும். தெய்வம் துக்கத்தை விலக்கி, நிலையுள்ள பொருள்களில் பற்றுகொள்ளச் செய்து, சுகத்தைத் தருகின்றது.

வறுமையும் காலநியதியைப் புரிந்துகொள்ளாததாலேயே ஏற்படுகின்றது. ஓர் பூரணத்திற்காகப் பாடுபடாமல் குறையுற்ற பொருள்களைத் தேடிச் செல்வதாலேயே இந்த வறுமை ஏற்படுகின்றது. க்ஷீணமாகாத பொருளைத் தேடாமல் க்ஷீணமாகும் பொருளை ஆசைப்படுவதாலேயே வறுமை என்பது ஏற்படுகின்றது. வறுமை பணக்குறைவு மாத்திரமல்ல; பலக்குறைவு, உறுதிக்குறைவு, புத்திக்குறைவு, அறிவுக்குறைவு இவையனைத்தும் வறுமையே. இந்த வறுமையை நீக்கி தெய்வம் ஐச்வர்யத்தைக் கொடுக்கின்றது. ஐச்வர்யம் என்பதற்கு ஈச்வரத்தன்மை என்றே உண்மைப் பொருள். ஈச்வரத்தன்மை ஏற்படின் எல்லாத் துறைகளிலும் நிறைவு ஏற்பட்டு பூரணமாகின்றோம். வறுமை, துக்கம், பயம் இந்த மூன்றையும் அன்னை விலக்குகின்றாள் என்பதை दारिद्र्यदुःखभय-हारिणि (தாரித்ர்யதுக்கபயஹாரிணி) என்றனர்.

சங்கடங்களில் பயம்தான் முதலில் ஏற்படுகின்றது. என்ன நடக்குமோ என்ற பயமே கஷ்டப்படுத்துகின்றது சங்கடங்களில் நினைத்தால்போதும். தேவி பக்தனின் பயத்தை உடனே நீக்குவாள்; சாதாரண சமயங்களில் நினைத்தால் வறுமை, துக்கம் இவையிரண்டையும் மனதிலிருந்து நீக்கி, நன்மை தரும் புத்தியை அளிப்பாள். அனைவருக்கும் அன்னையாதலால் அவளைத்தவிர நம்மைப் பக்ஷமுடன் பராமரிப்பவர் வேறு எவருமிலர். அவளைத் தஞ்சமென்று அடைந்தோரை அஞ்சேல் என அணைத்துக் காப்பாள்.

இந்த ச்லோகம் ப்ரயோக சாஸ்திரங்களில் மிக வும் பிரசித்தி பெற்றது. இதை மந்த்ரம் என்றே காத்யாயனீ தந்த்ரம் கூறும். இந்த ச்லோகத்தை பக்தி யுடன் திரும்பத் திரும்ப ஜபம் செய்தால் எல்லாக் கஷ்டங்களும் விலகும். அன்னை அபயமளிப்பாள். நல்ல புத்தி ஏற்படும். பேய் பிசாசு இவைகளால் ஏற்படும் உபாதையும் எல்லாவிதமான பயமும் இந்த ச்லோகத்தை ஜபம் செய்தால் நீங்கிவிடும். दारिद्र्यदुःखभयहारिणि का त्वदन्या सर्वोपकारकरणाय सदार्द्रचित्ता (தாரித்ர்ய துக்கபயஹாரிணி கா த்வதந்யா ஸர்வோபகாரகரணாய ஸதார்த்ரசித்தா) என்ற அடியை மாத்திரம் ஜபம் செய்து வந்தால் தரித்திரம் விலகி சம்பத்து ஏற்படும் என்பர்.

ச்லோகத்தை ஜபம் செய்யும்போது, அதன் பொருளை நன்கு அறிந்து வார்த்தைகளை நன்கு உச்ச ரித்து ஜபம் செய்யவேண்டும். மனது எங்கெல் லாமோ அலையாமல் ச்லோகத்தின் பொருளினிடம் லயிக்கவேண்டும். த்ரிகரண சுத்தியும் பக்தியும் முக்கி யம். பயம் என்பது கூடவே கூடாது. ச்லோகத்தை ஜபம் செய்யும்போதே ஜபம் பலிக்குமோ, பலிக் காதோ என்ற பயம் ஏற்பட்டால் நிஜமாகவே ஜபம் பலிக்காது. ஈச்வரியிடம் பரமபக்தியும் அவளது சக்தி யில் அபார நம்பிக்கையும் வேண்டும். அப்போது தான் மந்த்ர சித்தி ஏற்படும். "நம்பினோர்க்கழி வில்லை, நான்குமறைத் தீர்ப்பு."

———

பகைவரிடமும் பரிவு

एभिर्हतैर्जगदुपैति सुखं तथैते
कुर्वन्तु नाम नरकाय चिराय पापम् ।
सङ्ग्राममृत्युमधिगम्य दिवं प्रयान्तु
मत्वेति नूनमहितान्विनिहंसि देवि ॥ १६ ॥

எபிர்ஹதைர்ஜகதுபைதி ஸுகம் ததைதே
குர்வந்து நாம நரகாய சிராய பாபம் ।
ஸங்க்ராமம்ருத்யுமதிகம்ய திவம் ப்ரயாந்து
மத்வேதி நூநமஹிதாந்விநிஹம்ஸி தேவி ॥ 16 ॥

हतैः (ஹதை:) கொல்லப்பட்ட एभिः (ஏபி:) இவர்களால் जगत् (ஜகத்) உலகம் सुखं (ஸுகம்) இன்பத்தை उपैति (உபைதி) அடைகின்றது एते (ஏதே) இவர்கள் चिराय (சிராய) வெகுகாலம் नरकाय (நரகாய) நரகத்திற்குப் போகவேண்டி पापं (பாபம்) பாபத்தை तथा (ததா) அவ்வாறு कुर्वन्तु नाम (குர்வந்து நாம) செய்துகொண்டிருக்கட்டுமே (ஆயினும்) सङ्ग्राममृत्युं (ஸங்க்ராமம்ருத்யும்) போரில் மரணத்தை अधिगम्य (அதிகம்ய) அடைந்து दिवं (திவம) சுவர்க்கத்திற்கு प्रयान्तु (ப்ரயாந்து) செல்லட்டும் इति (இதி) என்று मत्वा (மத்வா) எண்ணி देवि (தேவி) தேவியே अहितान् (அஹிதான்) இந்த தீயோரை विनिहंसि (விநிஹம்ஸி) கொன்ருய் नूनं (நூநம்) இது நிச்சயம்.

'இவர்கள் இறந்தால் உலகம் சுகமடையும். ஆனல் நரகத்திற்கு வழி தேடுவதேபோல் இவர்கள் பாபம் செய்துகொண்டே போகிருர்கள். ஆயினும்

இவர்களைப் போரில் கொன்று சுவர்க்கம் அளிப்போம்' என்று நீ எண்ணியே இவர்களைக் கொன்றாய்.

தாத்பர்யம் :

இந்த ச்லோகத்திலும் அடுத்து வரும் மூன்று ச்லோகங்களிலும் தேவியின் மஹேச்வரி ரூபம் தியானிக்கப்படுகின்றது. மஹேச்வரியைப்பற்றிக் கூறுகையில் "அவள் அனைவருக்கும் அன்னை. அவளுக்குப் பக்ஷபாதமென்பதே கிடையாது. உலக க்ஷேமமே அவளுக்கு முக்கியம். ராக்ஷஸனையும் அசுரனையும் பிசாசனையும் தனது புதல்வன் என்றே நடத்துகின்றாள். அவளது தண்டனையும் அவளது திருவருளே" என்றோம். இந்த அவளது குணாதிசயங்களை இந்த நான்கு ச்லோகங்களும் விளக்கிக் கூறுகின்றன.

இந்த அசுரர்கள் கெட்டதையே செய்து வந்தார்கள். ஆயினும் அன்னைக்கு அவர்கள்மீது வெறுப்பு ஏற்படவில்லை; கருணைதான் பிறந்தது. ஆனால் அவர்களது இருப்பு உலகிற்கு பாதகமாயிருந்தது. அன்னைக்கு உலகக்ஷேமம் முக்கியமாகையால் அவர்களை அழிக்கவேண்டியிருந்தது. இவ்வாறு அழிப்பதும் ஒரு கருணைச் செயலே. ஏனெனில் அவர்களோ பாபத்தை மேலும் மேலும் செய்துகொண்டே வாழ்வை நடத்தினர். நரகத்திற்கு அவர்களாகவே வழி தேடிக்கொண்டிருந்தனர். ஆதலால் அவர்கள் சாகாமல் இன்னும் சிறிதுகாலம் இருந்தால் பாபமூட்டை இன்னும் அதிகமாகி அவர்களை இன்னும் கொடிய நரகத்தில் அழுத்தும். இதைத் தவிர்க்க அவர்கள்

உடனே இறக்கவேண்டியது அவசியமாயிற்று. தனது சங்கல்பத்தாலேயே ஈச்வரி அவர்களது மரணத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அப்படி அவர்கள் இறந்தால் இவ்வளவு நாட்கள் செய்த பாபம் வீண்போகாமல் அவர்களை நரகத்தில் தள்ளும்.

அசுரர்களையும் தனது புதல்வர்கள் என்று கருதிய அன்னையின் உள்ளம் அவர்கள் நரகம் போவதை விரும்பவில்லை ஆதலால் ஈச்வரி அவர்களை சண்டைக்கிழுத்து மடியச் செய்தாள். சண்டையில் இறந்ததால் பாபிகளான அசுரர்களும் வீரசுவர்க்கம் எய்தினர்.

பகைவரிடமும் பரிவு காட்டிற்று பகவதியின் உள்ளம்.

दृष्ट्वैव किं न भवती प्रकरोति भस्म
सर्वासुरानरिषु यत्प्रहिणोषि शस्त्रम् ।
लोकान्प्रयान्तु रिपवोऽपि हि शस्त्रपूता
इत्थं मतिर्भवति तेष्वहितेषु साध्वी ॥ १७ ॥

த்ருஷ்ட்வைவ கிம் ந பவதீ ப்ரகரோதி பஸ்ம
ஸர்வாஸுராநரிஷு யத்ப்ரஹிணோஷி சஸ்த்ரம் ।
லோகாந்ப்ரயாந்து ரிபவோபி ஹி சஸ்த்ரபூதா
இத்தம் மதிர்பவதி தேஷ்வஹிதேஷு ஸாத்வீ ॥ 17 ॥

भवती (பவதீ) நீ सर्वासुरान् (ஸர்வாஸுரான்) எல்லா அசுரர்களையும் दृष्ट्वैव (த்ருஷ்ட்வைவ) பார்த்த மாத்திரத்தி

லேயே किं (கிம்) ஏன் भस्म (பஸ்ம) சாம்பலாக न प्रकरोति (ந ப்ரகரோதி) செய்யவில்லை? यत् (யத்) எதனுல் अरिषु (அரிஷு) எதிரிகளிடம் शस्त्रं (சஸ்த்ரம்) ஆயு தத்தை प्रहिणोषि (ப்ரஹிணோஷி) எறிகின்ருயோ हि (ஹி) அது ஏனெனில் रिपवः अपि (ரிபவ: அபி) பகைவர் களும் शस्त्रपूताः (சஸ்த்ரபூதா:) ஆயுதங்களால் புனித மாகி लोकान् (லோகான்) நல்ல லோகங்களை प्रयान्तु (ப்ர யாந்து) அடையட்டும்; इत्थं (இத்தம்) இவ்வாறு अहितेषु (அஹிதேஷு) தீயோரான तेषु (தேஷு) அவர் களிடம் साध्वी (ஸாத்வீ) நல்ல मतिः (மதி:) அபிப்பிரா யம் भवति (பவதி) உண்டாகின்றது.

நீ உனது விழிகளால் நோக்கியே எதிரிகளை சாம் பலாக்கியிருக்கலாம். நீ அவ்வாறு செய்யாமல், ஆயு தங்களைப் பிரயோகித்து சண்டை செய்ததற்குக் கார ணம் ஆயுதங்கள் பட்டுப் புனிதர்களாகி பகைவரும் நல்லுலகம் போகவேண்டும் என்பதே. தீயோருக்கும் நன்மையே செய்கின்ருய்.

தாத்பர்யம் :

பரமசிவன் மன்மதனை எரித்ததுபோல், தேவி தனது கோபக் கண்களால் பார்த்தே அசுரர்களை அழித்திருக்கலாம். தேவியினுல் அழிக்கப்பட்டனர் என்பதற்காக அவர்கள் ஸ்வர்க்கம் சென்ருலும் தங் கள் பாபச்செயல்கள் மிக அதிகமாயிருப்பதால் ते गत्वा स्वर्गलोकं विशालं क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति (தே கத்வா ஸ்வர்க லோகம் விசாலம் க்ஷீணே புண்யே மார்த்யலோகம்

விசந்தி) என்றபடி மறுபடி பூமியில் தோன்றி விடுவார்கள். ஆதலால் அவர்கள் பாபத்திற்குத் தகுந்த தண்டனையை அளித்து அவர்களை பாபத்திலிருந்தும் விடுவித்தால் அவர்கள் நல்ல கதியை நிரந்தரமாக அடைவார்கள். இதை எண்ணியே அன்னை ஆயுதங்கள் உபயோகித்து அவர்களுடன் போர்புரிந்து கொன்றாள். ஆயுதங்களால் அடிபட்டதால் பாபத்திறகுத் தகுந்த தண்டனையை அடைந்தனர். அன்னை கரத்திலிருந்து கிளம்பிய ஆயுதமாதலால் அந்த ஜடமான ஆயுதத்திற்கும் அனுக்ரக சக்தி ஏற்பட்டது. ஆயுதத்தால் பரிசுத்தமடைந்து, பாபங்களனைத்தும் விலகி நல்லுலகங்களுக்கு ஏகினர். கெடுதியைச் செய்தவர்களுக்கும் நன்மையைச் செய்கின்றாள் தேவி. ஏனெனில் அவளது அன்னையின் உள்ளத்திற்குத் தன் புதல்வர்களிடையே ஏற்றத் தாழ்வு என்பது கிடையாது.

खड्गप्रभानिकरविस्फुरणैस्तथोग्रैः
शूलाग्रकान्तिनिवहेन दृशोऽसुराणाम् ।
यन्नागता विलयमंशुमदिन्दुखण्ड-
योग्याननं तव विलोकयतां तदेतत् ॥ १८ ॥

கட்கப்ரபாநிகரவிஸ்புரணைஸ்ததோக்ரை:
சூலாக்ரகாந்திநிவஹேந த்ருசோஸுராணாம் ।
யந்நாகதா விலயமம்சுமதிந்துகண்ட-
யோக்யாநநம் தவ விலோகயதாம் ததேதத் ॥ 18 ॥

उग्रैः (உக்ரை:) உக்கிரமான खड्गप्रभानिकरविस्फुरणैः (கட்க ப்ரபாநிகரவிஸ்புரணை:) வாளின் ஒளி வீச்சுகளாலும் तथा (ததா) அப்படியே शूलाग्रकान्तिनिवहेन (சூலாக்ரகாந்தி நிவஹேந) சூலாயுதத்தின் நுனியின் பிரகாசப்பெருக்கத்தாலும் असुराणां (அஸுராணாம்) அசுரர்களின் दृशः (த்ருச:) பார்வைகள் यत् (யத்) எதனால் विलयं (விலயம்) நாசத்தை न आगताः (ந ஆகதா:) அடையவில்லையோ तत् (தத்) அது एतत् (ஏதத்) இதுவே अंशुमत् इन्दुखण्डयोगि (அம்சுமத் இந்துகண்டயோகி) கிரணங்கள் செறிந்த சந்திர கலையுடன் சேர்ந்த तव (தவ) உன்னுடைய आननं (ஆநநம்) முகத்தை विलोकयतां (விலோகயதாம்) பார்ப்பவரது (கண்கள்).

வாள்கள் பளீரென ஒளி வீசினும், சூலாயுதத்தின் நுனி பிரகாசமாய் மின்னினும், அவைகளைப் பார்த்த அசுரர்களின் கண்கள் அவியவில்லை. ஏனெனில் அவர்களது விழிகள் சந்திரகலை பூண்ட உனது திருமுகத்தையே பார்த்துக்கொண்டிருந்தன.

தாத்பர்யம்:

தேவி வாளைச் சுழற்றும்போது பளீர் பளீரென எங்கும் ஒளி வீசுகின்றது. அவளது சூலாயுதத்தின் நுனி பிரகாசத்தை வாரி இறைக்கின்றது. இந்த ஆயுதங்களின் ஒளி சாதாரணமாக அனைவரது கண்களையும் கூசவைத்துக் குருடாக்கிவிடும். அசுரர்களுக்கு அவ்வாறு நேரிடாததற்குக் காரணம் அவர்கள் சதா தேவியின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்ததே.

தேவியின் முகதர்சனம் அவர்கள் கண்களுக்குக் குளிர்ச்சி அளித்தது. தவிர அவள் தலையில் சந்திரகலை பூண்டிருப்பதால், தேவியின் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் சந்திரனையும் பார்க்கக் கிடைப்பதால் அசுரர்களின் கண்களுக்கு மகிழ்ச்சியளித்து வாள் ஒளியைப் பார்த்ததால் ஏற்பட்ட கஷ்டத்தை நிவர்த்தி செய்தது. தவிர சந்திரனை அம்ருதத்தின் இருப்பிடம் என்பார்கள். சந்திரகலையணிந்த அன்னையின் முகம் அசுரர்களின் விழிகளை அழிவிலிருந்து காத்தது.

दुर्वृत्तवृत्तशमनं तव देवि शीलं
रूपं तथैतदविचिन्त्यमतुल्यमन्यैः ।
वीर्यं च हन्तृ हृतदेवपराक्रमाणां
वैरिष्वपि प्रकटितैव दया त्वयेत्थम् ॥ १९ ॥

துர்வ்ருத்தவ்ருத்தசமநம் தவ தேவி சீலம்
ரூபம் ததைததவிசிந்த்யமதுல்யமந்யை: ।
வீர்யம் ச ஹந்த்ரு ஹ்ருததேவபராக்ரமாணாம்
வைரிஷ்வபி ப்ரகடிதைவ தயா த்வயேத்தம் ॥ 19 ॥

देवि (தேவி) ஹே தேவி ! तव (தவ) உனது शीलं (சீலம்) ஸ்வபாவம் दुर्वृत्तवृत्तशमनं (துர்வ்ருத்தவ்ருத்தசமநம்) தீஞ் செயல் புரிவோரின் செய்கைகளைக் கண்டிப்பது तथा (ததா) அவ்வாறே एतत् (ஏதத்) இந்த रूपं (ரூபம்) உருவமும் अविचिन्त्यं (அவிசிந்த்யம்) எண்ணுதற்கியலாது अन्यैः (அந்யை:) மற்றவைகளுடன் अतुल्यं (அதுல்யம்)

ஒப்பிடமுடியாதது. वीर्यं च (வீர்யம் ச) வீர்யமும் हृतदेव पराक्रमाणां (ஹ்ருததேவபராக்ரமாணும்) தேவர்களின் பராக்கிரமத்தை அபகரித்தவர்களை हन्तृ (ஹந்த்ரு) கொல்லக்கூடியது इत्थं (இத்தம்) இவ்வாறு त्वया (த்வயா) உன்னால் वैरिष्वपि (வைரிஷ்வபி) பகைவரிடமும் दया (தயா) கருணை प्रकटिता (ப்ரகடிதா) வெளிப்படுத்தப்பட்டது.

உனது ஸ்வபாவம் கொடியோரின் தீஞ்செயலைப் பொறுக்காது. எண்ணுதற்கே முடியாத உன் உருவத்திற்கு உவமை சொல்லுதல் எளிதோ? உனது வீர்யமனைத்தையும் தேவர்கள் பங்கில உபயோகிக்கின்றாய். பகைவரிடமும் பரிவுகொள்ளும் பகவதி நீ.

தாத்பர்யம்:

தேவியின் ஸ்வபாவம் ஸத் ஆகையால் அஸத் விஷயங்களை உடனே துலைத்து விடும். மனதிற்கே பிடிபடாத அவளது திருவுருவை உவமை கூறி நிர்ணயிப்பது முடியாது. அவளது சக்தியனைத்தையும் தேவர்கள் பங்கினில் உபயோகிக்கின்றாள். இதனால் அசுரசக்திகளை எதிர்த்துப் போராடுவோருக்கு அவளது உதவி நிச்சயமெனத் தெரிகின்றது. அவள் அவ்வாறு அசுரர்களுக்கு எதிராக தனது வீர்யத்தை உபயோகித்தாலும் எதிரிகளிடமும் கருணை காட்டுவது அவளது இயல்பு.

———

கருணையும் கொடூரமும்

केनोपमा भवतु तेऽस्य पराक्रमस्य
रूपं च शत्रुभयकार्यतिहारि कुत्र ।
चित्ते कृपा समरनिष्ठुरता च दृष्टा
त्वय्येव देवि वरदे भुवनत्रयेऽपि ॥ २० ॥

கேநோபமா பவது தேஸ்ய பராக்ரமஸ்ய
ரூபம் ச சத்ருபயகார்யதிஹாரி குத்ர ।
சித்தே க்ருபா ஸமரநிஷ்டுரதா ச த்ருஷ்டா
த்வய்யேவ தேவி வரதே புவநத்ரயேபி ॥ 20 ॥

वरदे (வரதே) வரங்களைக் கொடுப்பவளே! अस्य (அஸ்ய) இந்த ते (தே) உன்னுடைய पराक्रमस्य (பராக்ரமஸ்ய) பராக்ரமத்தின் उपमा (உபமா) உவமை केन (கேந) எத்துடன் भवतु (பவது) ஆகும்! शत्रुभयकारि (சத்ருபயகாரி) பகைவனுக்குப் பீதியை விளைவிப்பதும் अतिहारि (அதிஹாரி) மிகவும் கவர்ச்சியுடையதுமான रूपं च (ரூபம் ச) தோற்றமும் कुत्र (குத்ர) எங்கே! देवि (தேவி) தேவீ, भुवनत्रये अपि (புவநத்ரயே அபி) முவ்வுலகிலும் चित्ते (சித்தே) மனதில் कृपा (க்ருபா) கருணையும் समरनिष्ठुरता च (ஸமர நிஷ்டுரதா ச) போரில் கொடூரமும் त्वयि एव (உன்னிடமே) दृष्टा (த்ருஷ்டா) பார்க்கப்பட்டது.

அன்னாய், உனது பராக்கிரமத்துடன் உவமை கூற யாது உளது? பகைவர் உள்ளத்தே பீதியைப் புகுத்தும் கோரவடிவமும் முவ்வுலகையும் மயக்கும் மோகன உருவும் ஒருங்கே அமைந்த உன் ரூபம்

போல் வேறு எங்கே காணமுடியும்? மனதில் கருணை வெள்ளம் பொங்க போரில் கொடூரமாய் இருப்பது உன்னிடமே எங்களால் பார்க்கப்பட்டது.

தாத்பர்யம் :

கருணையில்லாமல் கொடூரம்சோபிக்காது,கொடூர மில்லாவிடில் கருணையின் அருமை தெரியாது. கோரம் என்பது ஒன்று இல்லாவிடில் அழகு என்பதற்கு அர்த்தமே கிடையாது. இம்மாதிரி வேற்றுமை களில் ஒற்றுமையைக் காண்பதுதான் நம் பாரதத் தின் அடிப்படைக் கொள்கை. ஒன்றிலிருந்து பல தோன்றின என்றுணர்ந்த நம் முன்னோர்கள், ஒன் றுக்கொன்று முரணாகத் தோன்றும் இந்த பலவற்றில் அந்த ஒன்றைக் காணப் பாடுபட்டனர்.

பாரத மக்கள் கண்ட கடவுள் அன்பு வெள்ளம் உள்ளத்தே பொங்க, சாந்தமாய் அமைதியாய் அழகு ததும்பி நிற்கும் பரம்பொருள் மாத்திரமல்ல. கோபம், வேகம், வீரம், ஆற்றல் படைத்த பயங்கர சக்தியே கடவுள் என்றும் அவர்கள் உணர்ந்தனர். வேத கால மக்கள் வாழ்வே ஓர் பெரிய போராட்டம் என்று அறிந்தனர். கோழைகளுக்கு உயிர்வாழ உரிமை இல்லை என்று நம் பாரதத்தில் முழங்கினர். தைர்யம் வெற்றியில் ஆர்வம், ஆற்றல் இவைகளே அவர்களது சகஜ குணங்களாயின. அசுரனை அழித்து, பாபத் தைப் பொசுக்கி, தெய்வ வாழ்வை இம்மரிக்கும் மனி தருலகில் நிலைநாட்ட வீறுகொண்டெழுந்தனர்.

உண்மை அறிவை மறைக்கும் மலை போன்ற வ்ருத்திரனை வஜ்ராயுதத்தால் ஓங்கி அடித்து, பலத்திற்கு உறைவிடமாய், போர்த் தெய்வமாய் விளங்கும் இந்திரன்; அறியாமை இருளை விலக்கி அறிவுக் கதிரைப் பரப்பி நம் புத்தியைத் தூண்டும் சூரியன்; பாபத்தைப் பொசுக்கி தேவலோக் கிழே அழைக்கவேண்டி உயர உயரத் தன் ஜ்வாலைகளைத் தூக்கும் அக்னி; வேகத்திற்கு உறைவிடமாய் எங்கும் பாய்ந்து ப்ராண சக்தியைப் பரப்பும் வாயு; மானிடரின ஹ்ருதய குகையை மூடியிருக்கும் அறியாமைப் பாறையை தன் மந்திர மொழிகளால் பெயர்த்து உள்ளிருக்கும் அறிவு ஒளிகளை விடுவிக்கும் ப்ரஹ்மணஸ்பதி; சகலத்தையும் பாசத்தால் பிணைக்கும் வருணன்; இவர்களே தீரர்களான நம் முன்னோர்களின் தெய்வங்கள். அழகும் அன்பும் ஆனந்தமும், வேகம் ஆர்வம் ஆற்றல் இவற்றின் பயன் எனக் கண்டனர். அழகையும் அன்பையும் உலகில் பரப்பி மாந்தரை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தி மரிக்கும் தன்மையை ஒழித்து அமரத்துவத்தை அளிக்கும் பரமனை ஸோமன் என்றனர். இது வேத மரபு.

பின்னாளில் ஒரே மூர்த்தியிடம் அழகையும் கோரத்தையும், கருணையையும் கொடூரத்தையும் கண்டனர். ஈச்வரனின் உக்ர மூர்த்தியை ருத்ரன் மஹா காலன் என்றனர். மண்டையோடுகளை மாலையாக அணிந்து, யானைத்தோல் போர்த்தி, சுடலைச் சாம்பல் பூசி, பேய் பிசாசுகளுடன் ஊழித்தாண்டவமாடும்

மஹாகாலனாக அம்மூர்த்தியை வழிபட்டனர். சாந்தமும் அமைதியும் அழகும் ததும்ப யோகீச்வரனாய் விளங்கும் மூர்த்தியை சிவன், ஸோமன், ஸுந்தரன் என்றனர். ஈசனுக்கே घोराऽन्या शिवाऽन्या (கோராந்யா சிவாந்யா) என்றபடி சாந்தமும் உக்ரமுமான இரு முகங்களென்றும் அதில் சாந்தமான வலது முகம் அனைத்தையும் காக்கும் முகம்

रुद्र यत्ते दक्षिणं मुखं तेन मां पाहि नित्यम्

ருத்ர யத்தே தக்ஷிணம் முகம் தேந மாம் பாஹி நித்யம்

என்று ச்ருதி கூறும். இவ்வாறே பாற்கடலில் சதா துயிலும் பரமனிடம் சலிப்படைந்த நம் மக்கள் அவனை நரஸிம்ம மூர்த்தியாய் வழிபட்டனர்.

அன்னையை லலிதா, காமேச்வரி என்றும், துர்க்கா, காளி, சண்டிகா என்றும் வழிபட்டனர். அழகு, அன்பு, அறிவு, ஆனந்தம் இவைகளை அடைய லலிதையை நாடினர். வன்மை, வீரம், ஆற்றல் இவைகளைப் பெற சண்டியை அண்டினர். ஈசனின் ருத்ரன், சிவன் என்று இரு மூர்த்திகளுக்கொப்ப அவனது சக்தியும் காளி, லலிதா என்று வேறுபடும் என்று உணர்ந்தனர். அறிவாளிகள் சண்டி என்பதும் லலிதா என்பதும் ஒரு அன்னையின வெவ்வேறு பெயர்களே என்றறிந்தனர். அநேகமாக ஸ்ரீவித்யோபாஸகர்கள் சண்டீ உபாஸகர்களாகவும் இருந்தனர். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்திற்கு பாஷ்யம் எழுதிய ஸ்ரீ பாஸ்கர ராயர் சண்டீ உபாஸனையில் தேர்ந்தவர்;

குப்தவதீ என்று தேவீ மாஹாத்மியத்திற்கு பாஷ்யம் எழுதியிருக்கின்றார். ஸ்ரீவித்யோபாஸகர்களுக்கு லலிதையாக இருப்பவளே நவாக்ஷரீ உபாஸகர்களுக்கு சண்டியாக இருக்கின்றாள். இதையே ஸ்ரீவாஸிஷ்ட கணபதி முனிவர்

सा ललिता पञ्चदशीमुत्तमविद्यां जपताम् ।
सा खलु चण्डी जननी साधु नवार्णं भजताम् ॥

ஸா லலிதா பஞ்சதசீமுத்தமவித்யாம் ஜபதாம் ।
ஸா கலு சண்டீ ஜனனீ ஸாது நவார்ணம் பஜதாம் ॥

என்று தமது இந்த்ராணீ ஸப்தசதியில் கூறியுள்ளார்.

உக்ரசக்தியை சண்டீ என்றும் சாந்த சக்தியை லலிதை என்றும் குறித்தனர். பாபத்தைப் போக்கி, கோணல்களை நிமிர்த்தி, குறைகளை அழித்து, சாதனையை சீர்படுத்த உக்ரசக்தியின் அருள் அவசியம். சாந்தமும் அம்ருதமும் ஆனந்தமும் உடலில் பிரவகிக்கச் செய்வது லலிதையின் திருவருளே. ஆதலால் சண்டி. சூரிய மண்டலத்தில் இருக்கின்றாள் என்றும் லலிதை சந்திர பிம்பத்தில் விளங்குகின்றாள் என்றும் தந்த்ரம் கூறும். சண்டி உபாஸனைக்குச் சிறந்த நாள் அமாவாசை என்றும் லலிதைக் குகந்த நாள் பௌர்ணமி என்றும் கூறுவர். இவையெல்லாம் சூரியன் சந்திரன் எப்படி வாழ்விற்கு அத்யாவசியமோ அவ்வாறே தேவியின் இந்த இரு ரூபங்களும் என்பதைக் குறிக்கவே.

दिवाकरायुतोज्ज्वला हिमांशुलक्षशीतला

திவாகராயுதோஜ்ஜ்வலா ஹிமாம்சுலக்ஷசீதலா

என்று உமாஸஹஸ்ரத்திலும்

दहनकीलवन्निरुपमोग्रता ।
शशिमयूखवत्परमसौम्यता ॥

தஹநகீலவந்நிருபமோக்ரதா ।
சசிமயூகவத்பரமஸௌம்யதா ॥

என்று ப்ரசண்டசண்டீ த்ரிசதியிலும் ஆங்காங்கே கணபதி முனிவர் கூறியிருப்பதைக் காண்க.

உலகைக் கவரும் முகத்தாலே அசுரர்களை பயமுறுத்துகின்றாள் என்று ச்லோகத்தில் கூறியதற்கொப்ப "தன் மெல்லிய ம்ருதுவான உதடுகளை அசைத்தே அசுரர்களும் கிலி கொள்ளச் செய்கின்றாள்"

सुकोमलोष्ठकम्पनप्रभीतदुर्जयासुरा

ஸுகோமலோஷ்டகம்பந ப்ரபீததுர்ஜயாஸுரா

என்று கணபதி முனிவர் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கது.

வானவரின் வணக்கம்

त्रैलोक्यमेतदखिलं रिपुनाशनेन
त्रातं त्वया समरमूर्धनि तेऽपि हत्वा ।
नीता दिवं रिपुगणा भयमप्यपास्त-
मस्माकमुन्मदसुरारिभवं नमस्ते ॥ २१ ॥

த்ரைலோக்யமேதததிலம் ரிபுநாசநேந
த்ராதம் த்வயா ஸமரமூர்தநி தேபி ஹத்வா ।
நீதா திவம் ரிபுகணு பயமப்யபாஸ்த-
மஸ்மாகமுந்மதஸுராரிபவம் நமஸ்தே ॥ 21 ॥

एतत् (ஏதத்) இந்த अखिलं (அகிலம்) சமஸ்தமான त्रैलोक्यं (த்ரைலோக்யம்) மூவ்வுலகும் रिपुनाशनेन (ரிபு நாசநேந) பகைவனே அழித்ததால் त्वया (த்வயா) உன்ஞல் त्रातं (த்ராதம்) காப்பாற்றப்பட்டது समरमूर्धनि (ஸமரமூர்தநி) போர்முனையில் हत्वा (ஹத்வா) கொன்று ते (தே) அந்த रिपुगणा अपि (ரிபுகணு அபி) பகைவர் கூட்டமும் दिवं (திவம்) ஸ்வர்க்கத்திற்கு नीताः (நீதா:) அழைத்துச் செல்லப்பட்டது उन्मदसुरारिभवं (உந்மத ஸுராரிபவம்) திமிர்பிடித்த அசுரர்களால் ஏற்பட்ட अस्माकं (அஸ்மாகம்) எங்களது भयमपि (பயமபி) பயமும் अपास्तं (அபாஸ்தம்) ஒழிக்கப்பட்டது ते (தே) உனக்கு नमः (நம:) நமஸ்காரம்.

பகைவர்களை அழித்து மூவ்வுலகைக் காத்தாய். அவர்களையும் விண்ணுலகை அடையச் செய்தாய். எங்கள் பயத்தையும் போக்கினுய். உனக்கு வணக்கம்.

தாத்பர்யம் :

மூவ்வுலகையும் காப்பாற்றுவது அன்னைக்கு முக்கியம். त्वामाश्रिता ह्याश्रयतां प्रयान्ति (த்வாமாச்ரிதா ஹ்யாச்ரயதாம் ப்ரயாந்தி) என்றபடி அவளை அடைக்கலமடைந்தோரைக் காத்து அவர்களது இன்னல்களை மின்னல் வேகத்தில் நீக்குவது அவளது இயல்பு. அசுர சக்திகளை அழிப்பது அவளது கடமை. ஆனால் அவள் அன்னையின் உள்ளம் அசுரர்கள்பாலும் கருணைகொண்டது. ஆகையால் அவர்களை ஸ்வர்க்கமடையச்செய்து பக்தர்களின் பயத்தைப் போக்கி உலகைக் காத்தனள் தேவி.

கவச மந்த்ரங்கள்

शूलेन पाहि नो देवि पाहि खड्गेन चाम्बिके ।
घण्टास्वनेन नः पाहि चापज्यानिःस्वनेन च ॥ २२ ॥

சூலேந பாஹி நோ தேவி பாஹி கட்கேந சாம்பிகே
கண்டாஸ்வநேந ந: பாஹி சாபஜ்யாநி:ஸ்வநேந ச ॥ 22 ॥

देवि (தேவி) தேவீ, नः (ந:) எங்களை शूलेन (சூலேந) சூலத்தால் पाहि (பாஹி) காப்பாற்று. अम्बिके (அம்பிகே) தாயே, खड्गेन च (கட்கேந ச) வாளாலும் पाहि (பாஹி) காப்பாற்று. नः (ந:) எங்களை घण्टास्वनेन (கண்டாஸ்வநேந) மணியோசையாலும் चापज्यानिःस्वनेन च (சாபஜ்யாநி: ஸ்வநேந ச) வில்லின் நாண் ஒலியாலும் पाहि (பாஹி) காப்பாற்று.

சூலத்தாலும் வாளாலும் எங்களைக் காப்பாற்று. மணியடித்து வில்லில் டங்காரம் செய்து ரக்ஷி.

தாத்பர்யம்:

இந்த ச்லோகமும் அடுத்துவரும் மூன்று ச்லோகங்களும் மந்த்ர சாஸ்திரத்தில் மிகப் பிரசித்தி பெற்றவை. இந்த நான்கு ச்லோகங்களையும் ஜபித்து வந்தால் தெய்வ சக்தி உடலைக் கவசமிட்டது போல் காத்து அசுர சக்திகள் அருகே அணுகாமல் ரக்ஷிக்கும் என்பர்.

வாழ்வுப் போராட்டத்தில் தேவன் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டி, அவனை ஆயுதங்கள் தரித்தவனாக தியானித்தனர். அவனது ஆயுதங்களை அசுரர்கள்மீது பிரயோகித்து வாழ்வில் தெய்வ சாம்ராஜ்யத்தை நிலைநாட்டவேண்டும் என்று பிரார்த்தித்தனர். அதையொட்டியே இங்கும் தேவியின் கரங்களிலுள்ள ஆயுதங்களால் நம்மைக் காக்கவேண்டும் என்று பிரார்த்திக்கப் படுகின்றது. தேவியின் கரத்தே மணி வைத்திருக்கின்றாள். மணியை அடித்து ஓசை செய்தால் தேவி போருக்கு வருகின்றாள் என அசுரர் பயந்து ஓடி விடுவர். தேவதைகள் தங்கள் பங்கில் தேவி வருகின்றாள் என்று களிகூர்ந்து ஒருங்கே கூடுவர்.

आगमार्थं तु देवानां गमनार्थं तु रक्षसाम् ।
कुर्यात् घण्टारवं तत्र देवताह्वानलाञ्छनम् ॥

ஆகமார்த்தம் து தேவாநாம் கமநார்த்தம் து ரக்ஷஸாம் ।
குர்யாத் கண்டாரவம் தத்ர தேவதாஹ்வாநலாஞ்சநம் ॥

என்ற ச்லோகம் அனைவருக்கும் தெரிந்ததே.

யுத்த சன்னத்தமாய் தேவி வந்தவுடன் அவள் போரிட அவசியமேயில்லை: அவள் வில்லின் நாண் ஒலியைக் கேட்டே ஓடி ஒளிவர் அரக்கர். மேலும் மற்ற தேவதைகளிடம் பக்தர்களை ரக்ஷிப்பதற்காக உள்ள ஆயுதங்களெல்லாம் சக்தியின் அம்சங்களே. தேவியின் தேஜஸ்ஸே தேவதைகளின் ஆயுதங்களுக்கு சக்தியை அளிக்கின்றது என்பர். சுப்பிரமணிய சுவாமியின் வேலாயுதத்திற்கு சக்தி என்று பெயர் என்பது குறிப்பிடத்தக்கது. "பரமசிவனின் சூலமும் திருமாலின் சக்கிரமும் இந்திரனின் வஜ்ரமும் உனது தேஜஸ்ஸின் அம்சங்களே"

शूलमग्नितिलकस्य धूर्जटेश्चक्रमच्छजलजातचक्षुषः ।
वज्रमम्ब मरुतां च भूपतेस्तेजसस्तव कृतानि भागकैः ॥

சூலமக்நிதிலகஸ்ய தூர்ஜடேச்சக்ரமச்சஜலஜாதசக்ஷுஷ: ।
வஜ்ரமம்ப மருதாம் ச பூபதேஸ்தேஜஸஸ்தவ க்ருதாநி பாககை: ॥

என்று கணபதி முனிவரும் ப்ரசண்டசண்டீ த்ரிசதியில் பாடியுள்ளார்.

प्राच्यां रक्ष प्रतीच्यां च चण्डिके रक्ष दक्षिणे ।
भ्रामणेनात्मशूलस्य उत्तरस्यां तथेश्वरि ॥ २३ ॥

ப்ராச்யாம் ரக்ஷ ப்ரதீச்யாம் ச சண்டிகே ரக்ஷ தக்ஷிணே ।
ப்ராமணேநாத்மசூலஸ்ய உத்தரஸ்யாம் ததேச்வரி ॥ 23 ॥

चण्डिके (சண்டிகே) சண்டிகையே प्राच्यां (ப்ராச்யாம்) கிழக்கிலும் प्रतीच्यां च (ப்ரதீச்யாம் ச) மேற்கிலும் रक्ष (ரக்ஷ) காப்பாற்று ईश्वरि (ஈச்வரி) ஈச்வரீ ! तथा (ததா) அப்படியே दक्षिणे (தக்ஷிணே) தெற்கிலும் उत्तरस्यां (உத்தரஸ்யாம்) வடக்கிலும் आत्मशूलस्य (ஆத்மசூலஸ்ய) உனது சூலத்தின் भ्रामणेन (ப்ராமணேந) சுழற்றுதலால் रक्ष (ரக்ஷ) காப்பாற்று.

தாயே, நாற்றிசையிலும் உன் சூலத்தை சுழற்றி எங்களைக் காப்பாற்று.

தாத்பர்யம் :

கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு என்ற திசைகள் வழியாக அசுர சக்திகள் அணுகித் தாக்காமலிருக்கும் படி அன்னை காக்கவேண்டும் என்று பிரார்த்திக்கப் படுகின்றது. சூலத்தை சுழற்றிக் காக்கவேண்டும் என்பதால் எல்லாப் புறத்திலும், பத்து திசைகளிலும் தேவி காக்கவேண்டும் என்று பிரார்த்திக்கப்படுகின்றது. நம்மைச் சுற்றி தேவியின் ரக்ஷாபந்தனம் ஸதா இருக்குமாகில் நாம் அசுர சக்திகளுக்கு பயப்பட வேண்டியதே இல்லை. நம் சாதனையும் சுலபமாக

நடைபெறும். இந்த ச்லோகத்தில் சொல்லிய முறையை திக் பந்தனம் என்பார்கள்

இவ்வாறே ஸ்ரீருத்ரத்திலும்

दश प्राचीर्दश दक्षिणा दश प्रतीची-
र्दशोदीचीर्दशोर्ध्वास्तेभ्यो नमः

தச ப்ராசீர்தச தக்ஷிணா தச ப்ரதீசீர்-
தசோதீசீர்தசோர்த்வாஸ்தேப்யோ நம:

என்று கூறியிருப்பதைக் காண்க.

सौम्यानि यानि रूपाणि त्रैलोक्ये विचरन्ति ते ।
यानि चात्यन्तघोराणि तै रक्षास्मांस्तथा भुवम् ॥ २४ ॥

ஸௌம்யாநி யாநி ரூபாணி த்ரைலோக்யே விசரந்தி தே ।
யாநி சாத்யந்தகோராணி தை ரக்ஷாஸ்மாம்ஸ்ததா புவம் ॥ 24 ॥

ते (தே) உன்னுடைய यानि (யாநி) எந்த सौम्यानि (ஸௌம்யாநி) ப்ரசன்னமான रूपाणि (ரூபாணி) ரூபங்கள் त्रैलोक्ये (த்ரைலோக்யே) முவ்வுலகிலும் विचरन्ति (விசரந்தி) சஞ்சரிக்கின்றனவோ च (ச) மேலும் अत्यन्तघोराणि (அத்யந்தகோராணி) மிகவும் பயங்கரமான ரூபங்கள் यानि (யாநி) எவைகளோ तैः (தை:) அவைகளால் अस्मान् (அஸ்மான்) எங்களை तथा (ததா) அப்படியே भुवं (புவம்) பூமியையும் रक्ष (ரக்ஷ) காப்பாற்று.

எங்களையும் ஜகத்தையும் உன் மங்கள உருவங்களாலும் பயங்கர ரூபங்களாலும் காப்பாற்று.

தாத்பர்யம்:

உலகிலுள்ள பொருள்கள் அனைத்தும் படைத்தல் காத்தல், அழித்தல் என்ற மூன்று செயல்களுக்கு உட்பட்டதே. முதலிரண்டு தொழில்களில் பிரசன்ன ரூபம் கொண்டு, கடைசித் தொழிலில் கோரரூபம் கொள்ளுகின்ருள் தேவி.

पोषविधाने शीतं दैवं
शोषविधाने तपनं दैवम् ।

"வளர்க்கும்போது குளிர்ந்த தெய்வம்
வாட்டும்போது நெருப்பாம் தெய்வம்"

என்று அம்பிகா கீதத்தில் கணபதி முனிவரும் கூறியுள்ளார்.

லலிதாவாக இருப்பவள் காளியாக மாறுகின்ருள். இந்த கோரரூபம் மிகவும் இன்றியமையாதது. அழிவு இல்லாமல் ஆக்கம் என்பது இல்லை. ஆழ்ந்து நோக்கின், ஒரு முறையில் இருக்கும் அணுக்களை வேறு முறையில் மாற்றி அமைப்பதே அழித்தல் என்பது என விளங்கும். சக்தியின் மூலமாக, மிகவும் சடுதியில் ஓர் பொருள் பரிணாமமடைவதற்கு அழிவு என்பது அத்தியாவசியமாகின்றது. அழிவே ஆக்கத்திற்கு அடிகோலுகின்றது. அசுரர்களை அழிக்கும் கோரரூபமே தெய்வ சாம்ராஜ்யத்தை நாட்ட உதவுகின்றது.

அசுர சக்திகளும் தெய்வசக்திகளும் போராடும் இந்த வாழ்வில் பிரசன்னரூபமும் கோரரூபமும் மாற்றி மாற்றி சஞ்சரித்து மக்களைக் காக்கின்றன. இதையே வாஸிஷ்ட கணபதி முனிவர் தமது ப்ரசண்ட சண்டீ த்ரிசதியில்

उग्राणि रूपाणि सहस्रशस्ते सौम्यानि चाशेषसवित्रि सन्ति।
कुर्वन्ति ताः पावनि विश्वकार्यं सर्वं च लोकाम्ब विभूतयस्ते।
स्ववैरिणां च प्रतिसन्धिकालं गर्वं हरन्ति क्षणदाचराणाम् ॥

உக்ராணி ரூபாணி ஸஹஸ்ரசஸ்தே
ஸௌம்யாநி சாசேஷ ஸவித்ரி ஸந்தி ।
குர்வந்தி தா: பாவநி விச்வகார்யம்
ஸர்வம் ச லோகாம்ப விபூதயஸ்தே।
ஸ்வர்வைரிணாம் ச ப்ரதிஸந்திகாலம்
கர்வம் ஹரந்தி க்ஷணதாசராணாம் ।

என்றார்.

खड्गशूलगदादीनि यानि चास्त्राणि तेऽम्बिके।
करपल्लवसङ्गीनि तैरस्मान् रक्ष सर्वतः ॥ २५ ॥

கட்கசூலகதாதீநி யாநி சாஸ்த்ராணி தேம்பிகே।
கரபல்லவஸங்கீநி தைரஸ்மான் ரக்ஷ ஸர்வத: ॥ 25 ॥

अम्बिके (அம்பிகே) தாயே, ते (தே) உனது करपल्लवसङ्गीनि (கரபல்லவஸங்கீநி) தளிர்க் கரங்கள் தாங்கிய खड्गशूल-गदादीनि (கட்கசூலகதாதீநி) கத்தி, சூலம், கதை முதலிய

வைகளும் च (ச) மேலும் अस्त्राणि (அஸ்த்ராணி) அஸ்தி ரங்களும் यानि (யாநி) எவ்வளவு உண்டோ तैः (தை:) அவைகளால் अस्मान् (அஸ்மான்) எங்களை सर्वतः (ஸர்வத:) எல்லாவற்றிலிருந்தும் रक्ष (ரக்ஷ) காப்பாற்று.

தாயே, உனது கரங்களிலுள்ள ஆயுதங்களைத் தாலும் எங்களைக் காப்பாற்று.

தாத்பர்யம்:

ஈச்வரியின் கரத்தில் ஏந்திய ஆயுதங்களாலும் திவ்யாஸ்திரங்களாலும் பக்தர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டப்படுகின்றது. அன்னையின் கரங்களில் ஏந்தியிருக்கும் ஆயுதங்களும் அஸ்திரங்களும் வாழ்வு போராட்டத்தில் மனிதன் பங்கில் உதவுவதற்காகவே.

தளிர்போன்ற கரங்கள் தாங்கியிருப்பினும் ஆயுதங்களின் சக்தி அபாரம் என்பதை உணர்த்தவே करपल्लवसङ्गिनि (கரபல்லவஸங்கிநி) என்று கூறியிருக்கின்றது. சிலர் करपल्लव (கரபல்லவ) என்றால் விரல், விரல்களில் பிடித்த ஆயுதங்கள் என்று பொருள் கூறுவார்கள்.

அன்னை அனைத்திலிருந்தும் காத்துப் பராமரிக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் இந்த ஸ்துதி முடிகின்றது.

பலச்ருதி

இனி வரும் ச்லோகங்களில் தேவர்கள் எப்படி அன்னையை அர்ச்சித்தார்கள் என்றும் அவர்கள் கேட்ட வரத்தை தேவி கொடுத்தது பற்றியும் கூறப் பட்டிருக்கின்றது. இந்த ஸ்தவத்தைப் படிக்கும் மனிதனுக்கு தேவி பிரசன்னமாகி அளிக்கும் பலன் களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்த பலச்ருதி களைப் பற்றி ஓர் அபிப்பிராயம் நிலவி வருகின்றது. அதாவது இவைகளெல்லாம் கவியின் கற்பனைகள் போல் என்றும் இம்மாதிரி பலன்கள் கிடைக்கும் என்று சொன்னால்தான் மனிதர்கள் ஸ்தவத் தைப் படிப்பார்கள் என்பதற்காகவே இவை இருக் கின்றன என்றும் பலர் நினைக்கின்றனர். இது தவறு.

எக்காரியத்தைச் செய்தாலும் அதன் பயன், விளைவு எப்போதும் இருக்கின்றது. விளைவில்லாத காரியம் உலகில் கிடையவே கிடையாது. ஆகை யால் நாம் செய்யும் காரியங்களுக்கெல்லாம் பயன் கட்டாயம் உண்டு. ஆனால் காரியங்களை எந்த முறை யில் எந்த பாவத்துடன் நாம் செய்கின்றோமோ அவ் வாறே பயனடைகின்றோம். ஆதலால் ஒரு காரியத் திற்கே, செய்பவரைப் பொறுத்துப் பல்வேறு பயன் கள் ஏற்படுகின்றன. பக்தர்களின் மனப்பண்பாட் டிற்கேற்ப ஸ்தவத்தின் பயனும் ஏற்படுகின்றது. மனிதன் கடவுளை எப்படிக் கூப்பிடுகின்றானோ அவ் வாறே அவரும் வருகின்றார்.

ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहम् ।

யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம் ।

சுப்பிரமணியனே உபாஸிப்பவருக்கு ராமன் பிரத்யக்ஷமாவதில்லே. எல்லா தேவதைகளும் ஒன்று என்று வேதாந்தி கூறியபோதிலும், இந்திரனைக் கூப்பிட்டால் இந்திரன்தான் வருவானேயொழிய வருணன் வரமாட்டான். எல்லா தேவதைகளும் அந்த ஒன்றுக்கு அங்கங்கள் போல் अङ्गान्यन्या देवता: (அங்கான்யந்யா தேவதா:) என்று தைத்திரீயம் கூறும். காது கேட்குமே தவிர பார்க்காது. அவ்வாறே அந்தந்த தேவதைகள் அதனதன் வேலேயையே செய்யும்.

இவ்வாறே சாதகன் எந்த மனோபாவனேயுடன் உபாஸிக்கின்ருனே அவ்வாறே ஆகின்ருன். கோவிலில் இருக்கும் விக்ரகம் வெறும் கல் என்று நினைப்பவனுக்கு அது வெறும் கல்லே. அது உலகை ஆட்டி வைக்கும் அகண்ட சக்தி என்று உணர்ந்தவனுக்கு அந்த விக்ரகமே பிரத்யக்ஷ தெய்வம்.

तत्प्रतिष्ठेत्युपासीत । प्रतिष्ठावान् भवति । तन्मह इत्युपासीत । महान् भवति । तन्मन इत्युपासीत । मानवान् भवति । तन्नम इत्युपासीत । नम्यन्तेऽस्मै कामाः । तद्ब्रह्मेत्युपासीत । ब्रह्मवान् भवति । तद्ब्रह्मणः परिमर इत्युपासीत । पर्येणं म्रियन्ते द्विषन्तः सपत्नाः । परि येऽप्रिया भ्रातृव्याः ॥

தத்ப்ரதிஷ்டேத்யுபாஸீத। ப்ரதிஷ்டாவான் பவதி। தந்மஹ இத்யுபாஸீத। மஹான் பவதி। தந்மந இத்யுபாஸீத। மானவான் பவதி। தந்நம இத்யுபாஸீத। நம்யந்தேஸ்மை காமா:। தத்ப்ரஹ்மேத்யுபாஸீத। ப்ரஹ்மவான் பவதி। தத்ப்ரஹ்மண: பரிமர இத்யுபாஸீத। பர்யேண ம்ரியந்தே த்விஷந்த: ஸபத்ந:। பரியேஅப்ரியா ப்ராத்ருவ்யா:॥

"அதை நிலை என்று உபாஸித்தால் நிலையுள்ளவனாகின்றான், பெரிது என்று உபாஸித்தால் பெரியவனாகின்றான், மனம் என்றால் மனதின் போக்குகளை அறிந்தவனாகின்றான், அதுவே சரணம் என்று வழிபட்டால் எல்லாக் காமங்களும் அவனைச் சரணடைகின்றன. ப்ரஹ்மம் என்று பணிந்தால் ப்ரஹ்மத்தை உடையவனாகின்றான், ப்ரஹ்மத்தின் அழிக்கும் சக்தி என்று உபாஸித்தால் அவனுக்கு வேண்டாதவர்கள் அனைவரும் அழிகின்றனர்" என்று தைத்திரீய உபநிஷத் கூறும்.

புத்திரனை விரும்பி இந்த ஸ்தவத்தைப் பாராயணம் செய்தால் புத்திரன் ஏற்படுவான். லோக க்ஷேமத்தை மனதில்கொண்டு ஓர் யோகி இதைச் செய்தால் லோக க்ஷேமம் ஏற்படுகின்றது. பலத்தில் ஆசையே மனிதனை காரியம் செய்யத் தூண்டுகின்றது. இந்த இச்சையே உலகை நடத்துகின்றது. सोऽकामयत, इच्छामात्रं प्रभोः सृष्टिः (ஸோகாமயத, இச்சாமாத்ரம் ப்ரபோ: ஸ்ருஷ்டி:) முதலிய வசனங்கள் எல்லாம் இச்சையின்றி, காமனையின்றி சிருஷ்டி இல்லை என்பதையே அறிவுறுத்துகின்றது. இச்சையில்லாமல்

காரியம் நடத்தவேண்டும், நிஷ்காம்ய கர்மா செய்ய வேண்டும் என்பதும் ஒரு காமனையே! ஆனால் இந்த இச்சையும் இந்த இச்சை பூர்த்தியாவதால் ஏற்படும் மகிழ்ச்சியும் மாறிக்கொண்டே இருக்கின்றன. குழந்தைப் பருவத்தில் ஓர் விளையாட்டுப் பொம்மையே வாழ்வின் லக்ஷ்யமாயிருக்கும். அது கிடைத்ததால் ஏற்படும் மகிழ்ச்சி பிரும்மானந்தத்திற்கும் ஈடாகாது எனத் தோன்றும். ஆனால் வயதானபிறகு அந்த இச்சை மாறி வேறொன்றில் மனது பாய்கின்றது. இவ்வாறே பணம் வேண்டும் என்று உபாஸிப்பவர்களுக்கு அது அந்த சமயத்தில் வாழ்வின் லக்ஷ்யமாயிருக்கின்றது. சிறிது நாளான பிறகு அந்த இச்சை மாறி அதைவிட உயர்ந்த வஸ்துவில் மனம் செல்லுகின்றது.

ஸ்ரீ வாஸிஷ்ட கணபதி முனிவர் பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளைப் பார்த்து,

कामेन योगमभ्यस्य स्थिरप्रज्ञो भवेद्यदि ।
स कामोऽमुष्य साफल्यमधिगच्छति वा न वा ॥

காமேந யோகமப்யஸ்ய ஸ்திரப்ரக்ஞோ பவேத்யதி ।
ஸ காமோமுஷ்ய ஸாபல்யமதிகச்சதி வா ந வா ॥

"ஒருவன் ஏதோ அபீஷ்ட சித்திக்காக யோகம் பழக ஆரம்பித்து ஆத்மஞானியாகிவிடில் அவன் விஷயத்தில் அந்த அபீஷ்டம் சித்தியாகி பயனளிக்கின்றதா இல்லையா?" என்று கேட்க அதற்கு மஹர்ஷிகள்

कामारब्धः समाधिस्तु कामं फलति निश्चितम् ।
कामेन योगमभ्यस्य स्थिरप्रज्ञो भवेद्यदि ।
स कामोऽमुष्य साफल्यं गच्छन्नपि न हर्षति ॥

காமாரப்த: ஸமாதிஸ்து காமம் பலதி நிச்சிதம் ।
காமேந யோகமப்யஸ்ய ஸ்திரப்ரக்ஞோ பவேத்யதி ।
ஸ காமோமுஷ்ய ஸாபல்யம் கச்சந்நபி ந ஹர்ஷதி ॥

"காமத்துடன் யோகம் ஆரம்பித்தால் காமம் நிச்சயமாய் சித்திக்கின்றது. ஆனல் அபீஷ்ட சித்திக்காக யோகம் பழகப்போய் ஆத்மஞானியாகிவிடில் அபீஷ்டசித்தி யடைந்தாலும் ஞானிக்கு மகிழ்ச்சி ஏற்படுவதில்லை" எனக் கூறியிருப்பது ஸ்ரீ ரமண கீதையில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆகவே இப்பலன்களில் திருப்தியடையாத நிலை சாதகனுக்கு ஒரு சமயம் ஏற்படும். அவனது இச்சைகள் சிறிது சிறிதாக மாறி படிப்படியாக உயர்ந்து ஈசனின் இச்சையே அவனது இச்சையாக ஆகும் காலம் வரவேண்டும். அப்போது ஏற்படும் பலனும் பரமனுக்கே உரித்தாகின்றது. இந்நிலையை வாழ்வில் கொண்டுவந்து, எல்லாக் காரியங்களையும் ஈசனுக்கு அர்ப்பணம் செய்து பலனும் அவனதே என்று ஒப்படைக்க

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।

கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசந ।

என்ற கீதா வசனத்தின் ஸ்மரணமே உதவும்.

ऋषिरुवाच ।

एवं स्तुता सुरैर्दिव्यैः कुसुमैर्नन्दनोद्भवैः ।
अर्चिता जगतां धात्री तथा गन्धानुलेपनैः ॥
भक्त्या समस्तैस्त्रिदशैर्दिव्यैर्धूपैः सुधूपिता ।
प्राह प्रसादसुमुखी समस्तान् प्रणतान् सुरान् ॥

ரிஷிருவாச ।

ஏவம் ஸ்துதா ஸுரைர் திவ்யை: குஸுமைர் நந்தனோத்பவை: ।
அர்ச்சிதா ஜகதாம் தாத்ரீ ததா கந்தானுலேபனை: ॥
பக்த்யா ஸமஸ்தைஸ் த்ரிதசைர் திவ்யைர் தூபை: ஸுதூபிதா ।
ப்ராஹ ப்ரஸாதஸுமுகீ ஸமஸ்தான் ப்ரணதான் ஸுரான் ॥

ரிஷி கூறினார்

एवं (ஏவம்) இவ்வாறு सुरैः (ஸுரை:) தேவர்களால் स्तुता (ஸ்துதா) துதிக்கப்பட்டவளும் नन्दनोद्भवैः (நந்தனோத்பவை:) நந்தனவனத்தில் முளைத்த दिव्यैः (திவ்யை:) தெய்விக कुसुमैः (குஸுமை:) மலர்களாலும் तथा (ததா) அவ்வாறே गन्धानुलेपनैः (கந்தானுலேபனை:) சந்தனம், குங்குமம் முதலியவற்றாலும் अर्चिता (அர்சிதா) பூஜிக்கப்பட்டவளும் भक्त्या (பக்த்யா) பக்தியுடன் समस्तैः (ஸமஸ்தை:) எல்லா त्रिदशैः (த்ரிதசை:) தேவர்களாலும் दिव्यैः (திவ்யை:) திவ்விய धूपैः (தூபை:) தூபங்களால் सुधूपिता (ஸுதூபிதா) நன்கு வாசனை காட்டப்பட்டவளுமான जगतां धात्री (ஜகதாம் தாத்ரீ) உலகின் அன்னை प्रसादसुमुखी (ப்ரஸாதஸுமுகி) பிரஸன்

னமாய் மலர்ந்த முகத்துடன் समस्तान् (ஸமஸ்தான்) எல்லா प्रणतान् (ப்ரணதான்) வணங்கிய सुरान् (ஸுரான்) வானவர்களைப் பார்த்து प्राह (ப்ராஹ) சொல்லலுற்ருள்.

மஹிஷமர்தினியை இந்த ஸ்தவத்தால் துதித்து தேவ வனத்தில் முளைத்த நறுமண மலர்களால் அர்ச்சித்து, சந்தனம் குங்குமம் சாத்தி தூபதீப ஆராதனைகள் செய்து நமஸ்கரித்து நின்றனர் தேவர்கள். அன்னையும் அகமகிழ்ந்து முகமலர்ந்து அருள்வாக்குத் தர சித்தமானுள்.

இதிலிருந்து, பூஜையின் ஓர் அங்கமாக இந்த மஹிஷமர்தினீ ஸ்தவம் ஆகின்றது எனத் தெரிகின்றது. தேவர்கள் செய்து காண்பிப்பது மனிதர்கள் பார்த்துப் பழகவே. பரமனே இம்மரிக்கும் மனிதருலகில் கருணைகொண்டு இங்கே இறங்கி வருகின்ருன். வந்து, தான் பரமன் என்றோ, பரமனின் தேஜோம்சம் என்றோ வெளிப்படுத்தாமல் மனிதனோடு மனிதனுயிருந்து எப்படி மனிதனுயிருந்தே பரமனின் ஸ்வபாவத்தை வெளிப்படுத்த முடியும் என்பதைக் காட்டிவிட்டுச் செல்கின்ருன். இவ்வாறு ஒவ்வொரு தடவை வரும்போதும் மனிதருலகை ஒருபடி உயர்த்திவிட்டே செல்கின்ருன். இவ்வாறு நிகழ்வதைத் தான் அவதாரம் "இறங்கி வருவது" என்கின்றோம். அவன் ஒருபடி இறங்கிவந்து நம்மை ஒருபடி அவன்பால் உயர்த்திவிட்டுச் செல்கின்ருன். ஆகவே தேவர்களும் மனிதர்கள்போல் சந்தனம் குங்குமம் சாத்தி,

மலர் தூவி பரிமள தூபம் காட்டினார்கள் என்றால் அந்த தேவதேவியின் அருள் பெறுவதற்கான வழி இது என்பதை மனிதனுக்குக் காட்டவே.

தவிர, மலர், சந்தனம், தூபம் இவைகள் ஏன் தெய்வ வழிபாட்டில் இடம் பெறவேண்டும் என்று ஆராய்ந்தால் அரிய உண்மை புலனாகும். गन्धद्वारां दुराधर्षां, सुगन्धिं पुष्टिवर्धनं (கந்தத்வாராம் துராதர்ஷாம், ஸுகந்திம் புஷ்டிவர்தநம்) முதலிய ச்ருதிவசனங்களுக்குப் பொருள் கூறும்போது "गन्ध (கந்த) என்றால் நறுமணம், நறுமணம் எங்கும் பரவுவதுபோல் எங்கும் பரவி வியாபித்த பரம்பொருள்" என்றே அறிஞர்கள் கூறுவார்கள். ஆகவே எங்கும் வியாபிக்கும் தன்மையையே நறுமணம் குறிக்கின்றது. எங்கும் வியாபித்த பரம்பொருளுக்கு நறுமணங்கமழும் புஷ்பம், சந்தனம், தூபம் முதலியன உகந்ததாகின்றன.

देव्युवाच ।

व्रियतां त्रिदशाः सर्वे यदस्मत्तोऽभिवाञ्छितम् ।

தேவ்யுவாச ।

வ்ரியதாம் த்ரிதசா: ஸர்வே யதஸ்மத்தோபிவாஞ்சிதம் ।

தேவி கூறினாள்

सर्वे (ஸர்வே) ஸமஸ்தமான त्रिदशाः (த்ரிதசா:) 'தேவர்காள்! अस्मत्तः (அஸ்மத்த:) எம்மிடமிருந்து अभिवाञ्छितं (அபிவாஞ்சிதம்) விரும்பப்படுவது यत् (யத்) எதுவோ व्रियतां (வ்ரியதாம்) (அது) தேர்ந்து எடுக்கப்படட்டும்.

"எதை விரும்பினுலும் அதைத் தருகின்ருேம். கேளுங்கள்" என்றனள் தேவி.

எல்லாம் விதிப்படி நடக்கின்றது, தெய்வ சங்கல்பத்தின்படி நடக்கின்றது என்ற கொள்கை இருந்தபோதிலும், ஒவ்வொருவரும் தேர்ந்து எடுத்து அதன்படி நடக்க சுதந்திரம் இருக்கின்றது. மனிதனுக்கு விவேகம் என்று ஒன்று இருப்பதால் அவன் தேர்ந்து எடுத்தபடி அவன் ஆகின்ருன். பாபத்துடன் சேர்ந்துகொண்டால் அவன் பாபியாகின்ருன். தெய்வப்பங்கில் கூடினுல் தெய்வ சங்கல்பத்திற்கு உதவியாகின்ருன். மனிதனுல் ஆவது ஒன்றுமில்லை என்று இருந்தபோதிலும் இந்த உரிமையைக் கடவுள் மனிதனுக்கு அளித்திருக்கின்ருர். ஸ்வாமி விவேகானந்தர் கூறியபடி கடவுளே இல்லை என்று சொல்லவும் மனிதனுக்குக் கடவுள் உரிமை அளித்திருக்கின்ருர். எல்லாம் நாம் வரிப்பதில்தான் இருக்கின்றது. ஆனுல் நமக்கு எது நல்லது என்று நமக்கே புரியாமல் இருப்பதால்தான் நாம் நமக்கு அப்பப்போது தோன்றியவற்றை வரித்துவிட்டு, பிறகு விதியை நொந்து கொள்ளுகின்ருேம். கல்பக விருக்ஷத்தின் அடியில் இருந்துகொண்டு ஒருவேளை தலையில் இடிவிழுமோ என்று மனதில் ஒரு எண்ணம் தோன்றினுல்கூட அது உடனே பலித்துவிடுமாம். கேட்டதைக் கொடுக்கின்றேன், நினைத்ததை அளிக்கின்றேன் என்று தெய்வமே நம் வாயிற்படியில் வந்து நின்ருல்கூட, நாம் என்ன கேட்கவேண்டும், என்ன நினைக்கவேண்டும் என்ற அறிவு நமக்கு ஏற்படாவிடில் ஒன்றும் பிரயோ

சமையில்லே. ராவணன், வாலி, ஹிரண்யகசிபு போன்றவர்கள் பெரிய தபஸ்விகள், தங்களது தவச்சக்தியால் கடவுளை நேரில் கண்டவர்கள். ஆனுல் பரமனிடம் என்ன வரம் கேட்கவேண்டும் என்று தெரியாததால் தெய்வ இயல்புக்கும் உலகப் பாதுகாப்புக்கும் மாருன வரங்களைக் கேட்டு அழிந்தனர்.

ஆதலால் நமது விதியை நாமே நிர்ணயித்துக் கொள்ள கடவுள் உரிமை அளித்திருக்கின்ருர் சக்தி அளித்திருக்கின்ருர். இந்த சக்தியைப் பரமனுக்கு அன்புடன் அர்ப்பணம் செய்யும் சக்தியைப் பரமனே நமக்கு அளிக்கவேண்டும். நம் சுதந்திரத்தை மன முவந்து அவனுக்கு அளித்து அவன் அடிமையாய் வாழவேண்டும். பரமனது பந்தத்தில் மோக்ஷத்தைக் காணவேண்டும். நாம் விடுதலையாகவேண்டி அவனது அன்புத்தளைகளால் பிணைக்கப்படவேண்டும். இதுவே சாதனையின் ரகசியம். இது கைகூடினுல் பரமனது காரியமே நம் காரியமாகும், பரமனது சங்கல்பமே நம் சங்கல்பமாகும். நாம் வரிப்பது பரமன் வரித்தபடி இருக்கும் என்பதில் ஐயமில்லை.

देवा ऊचुः ।

भगवत्या कृतं सर्वं न किञ्चिदवशिष्यते ।
यदयं निहतः शत्रुरस्माकं महिषासुरः ॥
यदि वापि वरो देयस्त्वयास्माकं महेश्वरि ।
संस्मृता संस्मृता त्वं नो हिंसेथाः परमापदः ॥

தேவா ஊசு: ।

பகவத்யா க்ருதம் ஸர்வம் ந கிஞ்சிதவசிஷ்யதே ।
யதயம் நிஹத: சத்ருரஸ்மாகம் மஹிஷாஸுர: ॥
யதி வாபி வரோ தேயஸ்த்வயாஸ்மாகம் மஹேச்வரி ।
ஸம்ஸ்ம்ருதா ஸம்ஸ்ம்ருதா த்வம் நோ ஹிம்ஸேதா: பரமாபத:॥

தேவர்கள் மொழிந்தனர்

भगवत्या (பகவத்யா) தேவியினால் कृतं (க்ருதம்) செய்யப்பட்டது सर्वं (ஸர்வம்) எல்லாம் किञ्चित् (கிஞ்சித்) ஒன்றுவது न अवशिष्यते (ந அவசிஷ்யதே) மிச்சம் இருப்பதில்லை यत् (யத்) ஏனெனில் अस्माकं (அஸ்மாகம்) எங்களுடைய अयं (அயம்) இந்த शत्रुः (சத்ரு:) சத்துரு महिषासुरः (மஹிஷாஸுர:) மஹிஷாசுரன் निहतः (நிஹத:) கொல்லப்பட்டான் महेश्वरि (மஹேச்வரி) மஹேச்வரீ, त्वया (த்வயா) உன்னால் अस्माकं (அஸ்மாகம்) எங்களுக்கு वरः (வர:) வரம் देयः आपि वा यदि (தேய: அபி வா யதி) கொடுக்கப்படவேண்டும் என்றால் त्वं (த்வம்) நீ संस्मृता संस्मृता (ஸம்ஸ்ம்ருதா ஸம்ஸ்ம்ருதா) அடிக்கடி

நினைக்கப்படும்போது नः (ந:) எங்களது परमापदः (பரமாபத:) பெரிய ஆபத்துகளையும் हिंसेथाः (ஹிம்ஸேதா:) அழிக்கவேண்டும்.

எங்கள் அபீஷ்டத்தைப் பூரணமாக நிறைவேற்றிவிட்டாய். எங்களுக்கு வரம் கொடுக்கவேண்டும் என்பது உன் திருவுளமாயின் இந்த வரத்தைக் கொடு. எங்களுக்கு வரும் பெரும் ஆபத்துகளை அழித்துக் காப்பாயாக.

தேவர்கள் தாங்கள் வரிப்பது ஒன்றுமில்லை, வரம் கொடுக்க வேண்டியது தேவியின் சித்தமாயின் அது தங்கள் பாக்கியமே என்று கூறுகின்றனர். ஆபத்துகள் ஏற்படும்போது கடவுளை நினைப்பது சகஜமே. ஆனால் சம்பத்து ஏற்படும்போதும் நினைக்கவேண்டும் என்பதற்காக संस्मृता संस्मृता (ஸம்ஸ்ம்ருதா ஸம்ஸ்ம்ருதா) என்று இருமுறை கூறினர். இவ்வாறு ச்ருதியில் கூறிய ध्रुवा स्मृतिः (த்ருவா ஸ்ம்ருதி:) நிரந்தர நினைப்பு ஏற்பட்டால் सर्वग्रन्थीनां विप्रमोक्षः (ஸர்வக்ரந்தீநாம் விப்ரமோக்ஷ:) எல்லா முடிச்சுகளும் தளரும், எல்லா ஆபத்துகளும் விலகும், எல்லா இடையூறுகளும் நீங்கிவிடும்.

यश्च मर्त्यः स्तवैरेभिस्त्वां स्तोष्यत्यमलानने ।
तस्य वित्तर्द्धिविभवैर्धनदारादिसंपदाम् ।
वृद्धयेऽस्मत्प्रसन्ना त्वं भवेथाः सर्वदाम्बिके ॥

யச்ச மர்த்ய: ஸ்தவைரேபிஸ்த்வாம் ஸ்தோஷ்யத்யமலாநநே ।
தஸ்ய வித்தர்திவிபவைர்தனதாராதிஸம்பதாம் ।
வ்ருத்தயேஸ்மத்ப்ரஸந்நா த்வம் பவேதா: ஸர்வதாம்பிகே ॥

च (ச) மேலும் अम्बिके (அம்பிகே) தாயே अमलानने (அமலாநநே) பிரசன்னமான முகமுடையவளே, य: मर्त्य: (ய: மர்த்ய:) எந்த மனிதன் एभि: (ஏபி:) இந்த स्तवै: (ஸ்தவை:) ஸ்தவங்களால் त्वां (த்வாம்) உன்னை स्तोष्यति (ஸ்தோஷ்யதி) துதிக்கின்ருனே अस्मत्प्रसन्ना (அஸ்மத் ப்ரஸந்நா) எங்களுக்குப் பிரசன்னமான त्वं (த்வம்) நீ तस्य (தஸ்ய) அவனுக்கும் वित्तर्द्धिविभवै: (வித்தர்த்தி விபவை:) அறிவு, வளர்ச்சி ஐச்வர்யம் இவற்றுடன் धनदारादिसंपदाम् (தநதாராதிஸம்பதாம்) பொருள், மனைவி முதலிய செல்வங்களின் वृद्धये (வ்ருத்தயே) விருத்திக்காக सर्वदा (ஸர்வதா) எப்போதும் भवेथा: (பவேதா:) இருக்கவேண்டும்.

இந்த ஸ்தவங்களால் நாங்கள் துதித்தவுடன் நீ எங்களுக்குப் பிரசன்னமானதுபோல், மனிதனும் இந்த ஸ்தவத்தால் உன்னைத் துதிக்கும்போது நீ பிரசன்னமாகவேண்டும். அவனது செல்வம் விருத்தியாக நீ அருள்புரிய வேண்டும்.

அறிவு, வளர்ச்சி, ஐச்வர்யம் பணம், மனைவி மக்கள் முதலிய இம்மைச் செல்வங்களையும் தருகின்ருள் தேவி. மறுமையில் சுகம் ஒருபுறம் இருந்தாலும் இம்மையில் சுகம் தருபவள் தேவியே. இக்கலிகாலத்தில்

கைமேல் பலன் தரும் தெய்வம் சண்டியும் விநயக ருமே कलौ चण्डीविनायकौ (கலௌ சண்டீவிநாயகௌ) என்று கூறுவார்கள்.

ऋषिरुवाच ।

इति प्रसादिता देवैर्जगतोऽर्थे तथात्मनः ।
तथेत्युक्त्वा भद्रकाली बभूवान्तर्हिता नृप ॥

ரிஷிருவாச ।

இதி ப்ரஸாதிதா தேவைர்ஜகதோர்த்தே ததாத்மந: ।
ததேத்யுக்த்வா பத்ரகாலீ பபூவாந்தர்ஹிதா ந்ருப ॥

ரிஷி கூறினார்

नृप (ந்ருப) அரசே, इति (இதி) இவ்வாறு देवैः (தேவை:) தேவர்களால் जगतः (ஜகத:) உலகின் अर्थे (அர்த்தே) பிரயோசனத்திற்காகவும் तथा (ததா) அப்படியே आत्मनः (ஆத்மந:) தங்களுக்காகவும் प्रसादिता (ப்ரஸாதிதா) திருப்தி செய்யப்பட்ட भद्रकाली (பத்ரகாலீ) மங்கள காளிகை तथा इति (ததா இதி) அப்படியே என்று उक्त्वा (உக்த்வா) சொல்லிவிட்டு अन्तर्हिता बभूव (அந்தர்ஹிதா பபூவ) மறைந்துவிட்டாள்.

அன்னையும் தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அப்படியே என்று சொல்லி மறைந்துவிட்டாள்.

மஹாகாளியாயினும் அனைவருக்கும் மங்களத்தைச் செய்பவள் அவளேயாதலால் அவளை भद्रा (பத்ரா) என்றனர். தேவியே விரும்பிய பலனைக் கொடுக்கின்றேன் எனறு வரமளித்திருப்பதாலேயே இந்த ஸ்தவம் மிகவும் சிறப்புற்று விளங்குகின்றது. தேவர்கள் சரீரத்திலிருந்தே தோன்றிய இம்மஹா சக்தி மறுபடி தேவர்கள் சரீரத்தில் மறைந்துவிட்டாள். மனிதர்கள் சரீரத்திலுள்ள ரகசிய சகதியும் சக்திவிலாஸத்திற்காக ஆவிர்பாவமாகி மறுபடி அங்கேயே லயமடைந்துவிடுகின்ருள்.

Giri Press, Triplicane—C. 1000

ஸ்ரீமான் S. சங்கரநாராயணன், B.A. (Hons.)
அவர்களால் எழுதப்பட்ட

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம்

(அஷ்டோத்தர சதநாமாவளியுடன்)

விலை அணு 10